தமிழக மேடை நாடகப் பெண் கலைஞர்கள்

- குறிப்பேடு -

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், சென்னை - 600 113.

தமிழக மேடை நாடகப் பெண் கலைஞர்கள்

- குறிப்பேடு -

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சி.ஐ.டி. வளாகம், சென்னை - 600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	THAMIZHAGA MEDAI NAADAGA PEN KALAIGNARGAL - A PROFILE
Compiler	J. AMAITHI ARASU, VOICING SILIENCE, M.S. SWAMINATHAN RESEARCH FOUNDATION
Published by & Copyright	INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
Publication number	270
Language	TAMIL
Edition	FIRST
Year of Publication	1997
Paper used	60 GSM Tamil Nadu White Printing
Size of the book	1/8 Demy
Printing types used	10 and 12 pts
Number of Copies Printed	1200
Number of Pages	XX + 114
Price	Rs. 25.00
Typesetted by	Kurinji Graphics, Chennai - 24.
Printed by	Pavai Printers (P) Ltd Chennai - 600 014.
Subject	Tamil Women Dramatists

ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

நுழைவாயில்

இந்நூற்றாண்டில், நலிந்துகொண்டிருந்த நாடகக் கலைக்குப் புத்துயிர் அளித்தவர்கள் சங்கரதாஸ் சுவாமிகள், உடுமலை முத்துசாமிக் கவிராயர், பம்மல் சம்பந்த முதலியார், சிவசண்முகம் பிள்ளை முதலியோர்ராவர்.

அக்காலத்து நாடகங்கள் பெரும்பாலும் இசைப் பாடல்களாகவே அமைந்திருந்தன. மேலும் தமிழிசை இயக்கத்திற்கு முன்னோடியாகவும் அப்பாடல்கள் நிகழ்ந்தன எனல் மிகையன்று.

நாடகத் துறையில் ஒரு பல்கலைக்கழகம் போல விளங்கி நாடக நடிகர்களுக்குப் பயிற்சியளித்தவர் திரு. எம்.கே. இராதாவின் தந்தையார் மயிலை கந்தசாமி முதலியார் ஆவார். அவர் தமிழ் நாடகங்களைத் தமிழகத்தில் மட்டுமன்றிச் சிங்கப்பூர், பினாங்கு, பர்மா முதலிய நாடுகளிலும் நடத்தினார்.

கலைவாணர் என்.எஸ்.கே., காளி என். இரத்தினம், பி.யு. சின்னப்பா, ஏ.பி. காமாட்சி, கே.பி. கேசவன், எஸ்.வி. சகஸ்ரநாமம், மறைந்த முன்னாள் முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். முதலியோர் கந்தசாமி முதலியார் உருவாக்கிய மாணவர்களுள் குறிப்பிடத்தக்கவராவர்.

அவர் வாழ்ந்த கால கட்டத்தில் பல்வேறு நாடகக் குழுக்கள் தமிழகத்தில் இருந்தன. மக்களின் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் தமிழ் நாடகங்களை மேடையேற்றுவதில், அந்நாடகக் குழுக்கள் திறம்படச் செயல்பட்டன.

மராட்டிய நாடகங்களைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் கோவிந்தசாமி ராவ் ஆவார். கண்கவர் திரைச் சீலைகளை அமைத்தவர் திருச்சி கன்னையா ஆவார். நன்னெறி புகட்டும் நாடகங்களை மக்களுக்கு அளித்து அறிவு வெளிச்சமூட்டியவர் நவாப் டி.எஸ். இராசமாணிக்கம் ஆவார்.

புராண நாடகங்களை மட்டுமல்லாமல், சமூகச் சிக்கல்களை முன்வைக்கும் நாடகங்களையும் தமிழ் நாடக மேடையில் நடித்து முத்திரை பதித்தவர்கள் டி.கே.எஸ். சகோதரர்கள்.

இந்திய தேச விடுதலையை வலியுறுத்தியும் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்தும் அக்காலத்தில் நாடகங்களைப் படைத்தளித்தோர்களில் கா. கோபாலாச்சாரி, தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர், கருணாலய பாகவதர், நடிகமணி விசுவநாத தாஸ், எஸ்.டி. சுந்தரம் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சமூக விடுதலையை முன்னிறுத்தி திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்கள் நாடகக் குழுக்கள் அமைத்து மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை உருவாக்கினர்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் காஞ்சிபுரத்தில் உருவாக்கப்பெற்ற திராவிட நாடகக் கழகம் சிறப்பான பணியினை ஆற்றியுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்களின் பல்வேறு நாடகங்கள் அக்கழகத்தால் அரங்கேற்றப்பட்டன.

முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதல்வர் கலைஞர், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி, நடிகவேள் எம்.ஆர். இராதா, இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர்., நடிகமணி டி.வி. நாராயணசாமி முதலியோர் தமிழகத்தில் திராவிட இயக்கக் கோட்பாடுகளைக் கருப்பொருளாகக் கொண்ட நாடகங்களை நடத்தினர்.

இப்படிப் பலவகை எண்ணக் கோலங்களை வண்ணக் கோலங்களாகக் கொண்டு ஏற்றமுறத் திகழ்ந்த தமிழ் நாடக மேடைகளில், அக் காலகட்டத்தில் ஆண்களே பெண் வேடம் புனைந்து ஸ்திரீபார்ட்டாக நடித்து வந்தனர். நாடகங்கள் ஒழுக்கக்கேட்டிற்கு இடந்தருவதாக மக்கள் தவறாகக் கருதிய அன்றைய சூழலால், ஆண் நடிகர்களே பெண் வேடம் புனையவேண்டிய தேவை நிலவியது.

உடுமலை முத்துச்சாமிக் கவிராயர், சிவாஜி கணேசன், ஔவை டி.கே. சண்முகம் முதலியோர் பெண் வேடத்தை ஏற்று நடித்தோருள் குறிப்பிடத்தக்கவராவர். அவர்களுள் குறிப்பாக டி.கே. சண்முகம் ஔவையாராகப் பெண் வேடம் புனைந்து சிறப்பாக நடித்ததால் ‘ஔவை டி.கே. சண்முகம்’ என அடைமொழியுடன் சிறப்பாக அழைக்கப்பட்டார்.

பெண்கள் நாடகங்களில் நடிக்க முன்வராத அந்தக் கால கட்டத்தில், நாடக அரசி எனப் புகழ்பெற்ற பாலாமணி அம்மையார் 1880-1890இல் பெண்களைக் கொண்ட ஒரு நாடகக் குழுவைக் கும்பகோணத்தில் உருவாக்கினார். அவர் அமைத்த நாடகக் குழுவிலிருந்த ராஜாமணி, கிருஷ்ணவேணி, விக்டோரியா முதலிய பெண்கள் நடிப்புத் துறையில் புகழ்பெற்றவர்களாக விளங்கினர்.

பாலாமணி அம்மையார், கேட்பவர் மயங்குமளவுக்கு இனிமையான குரலில் பாடுபவர். இளமை, அழகு வாய்க்கப்பெற்றவர். பரத நாட்டியக் கலையை முறையாகப் பயின்றவர்.

நாடகத் தொழில் மூலம் அவர் ஈட்டிய பெரும்பொருளையெல்லாம் கோயில் திருப்பணிகட்கும், சாதி சமய வேறுபாடின்றி அநாதைப் பெண்களுக்குத் திருமணம் செய்து வைப்பதற்கும் செலவிட்டார்.

திருமணம் செய்துகொண்டால் தம்முடைய நாடகப் பணி பாதிக்கப்படும் என அஞ்சிய பாலாமணி அம்மையார், தாம் திருமணம் செய்து கொள்ளா நிலையிலும், ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த பெண்கள் மிகவும் குறைந்த செலவில் திருமணம் செய்வதற்கு ஏதுவாகக் கும்பகோணம் கும்பேசுவரர் கோயிலில் உள்ள திருமண மண்டபத்தினைக் கட்டினார்.

பால்ாமணி அம்மையார் தாம் திருமணம் செய்து கொள்ளவில்லையே தவிர, பலரை இல்லற வாழ்வில் இனிதுபுகச் செய்தார்.

கே.ஆர். ரங்கராஜு எழுதிய ராஜம்மாள் என்ற சமூக நாவலைக் கந்தசாமி முதலியார் நாடக வடிவமாக்கினார். அவருடைய நாடகத்தைப் பாலாமணி அம்மையார் நாடகக் குழு சிறப்பாக நடத்தியது.

கும்பகோணத்தில் அவருடைய நாடகக் குழுவின் நாடகம் இரவு 9.30 மணிக்குத் தொடங்கும். இரவு 8 மணிக்கு மயிலாடுதுறையிலிருந்து ஒரு புகைவண்டியும் 8.30 மணிக்கு திருச்சியிலிருந்து ஒரு புகைவண்டியும் கும்பகோணத்திற்கு வரும். இவ்விரு வண்டிகளும் கும்பகோணத்தில் 2, 3 மணி நேரம் இருந்துவிட்டுப் பின்னர் மயிலாடுதுறைக்கும் திருச்சிக்கும் புறப்படும். பாலாமணி நாடகத்தைப் பார்ப்பதற்காகவே விடப்பட்டதாகக் கருதப்பட்ட அவ்வண்டிகளைப் "பாலாமணி ஸ்பெஷல்" என்றே மக்கள் அழைத்தனர்.

தமிழ் நாடக மேடை வரலாற்றில் பெட்ரமாக்ஸ் விளக்கின் ஒளியில் நாடகங்களை நடத்திய பெருமை பாலாமணி அம்மையாரின் நாடகக் குழுவையே சாரும். அதற்கு முன்னர் நாடகங்கள் திரிவிளக்கின் வெளிச்சத்திலேயே நடத்தப்பட்டன. அக்கால நாடகங்களில் ஒலிபெருக்கி கிடையாது. மக்கள் கூட்டம் எவ்வளவு இருப்பினும் அவர்களுக்குக் கேட்கும் வகையில் நடிகர்கள் பேசவும், பாடவும் வேண்டும். பாலாமணி அம்மையாரின் நாடகக் குழுவில் இடம் பெற்றிருந்த நடிகையர் அப்பணியைச் சிறப்பாகச் செய்தனர்.

கும்பகோணத்தில் ஒரு பெரிய அரண்மனை போன்ற வீட்டில் பாலாமணி அம்மையார் வாழ்ந்தார். அவரைப் பார்ப்பதற்காகவே சிற்றூர், அயலூர்களிலிருந்து மக்களெல்லாம் மாட்டு வண்டி பூட்டி வந்து வீட்டுக்கு முன் தவங்கிடப்பர். பாலாமணி அவர்களின் முகங்கண்டு மனமகிழ்வு அடைவர்.

பாலாமணி அவர்கள் கும்பகோணத்தில் நான்கு குதிரை பூட்டப்பட்ட வண்டியில் பயணம் செய்வார். சுற்றியிருக்கும் வெல்வெட்டுத் திரைச்சீலை ஒதுங்குகையில் தோன்றி மறையும் அவருடைய முகங்கண்டு, கும்பகோணத்து இளைஞர்கள் அவர் அழகு கண்டு பெருமூச்சு விடுவர்.

வானிலிருந்து வந்திறங்கிய அழகுதேவதைபோல மக்களால் போற்றப்பட்ட பாலாமணி அவர்களின் இறுதி நாள்கள் வறுமையில் கழிந்தன.

நாடகக் குழுவில் அவர் ஈட்டிய பொருளையெல்லாம் தனக்கென்று சேமித்து வைக்காமல் எல்லாருக்கும் வாரி வழங்கிவிட்டார். நாடகக் குழுப் பெண்கள் நல்வாழ்வு வாழ உதவிகளை நல்குவதிலேயே உவகை கொண்டு வாரி வழங்கினார்.

எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையோ, கவலையோ இல்லாமல் அள்ளி அள்ளி மற்றவர்க்கு அளித்த அவர், இறுதி நாள்களில் வறுமைவாய்ப்பட்டார்.

கும்பகோணத்தில் அரண்மனை போன்ற வீட்டில் வாழ்ந்த அவர், மதுரையில் குடிசையொன்றில் இறுதி நாள்களில் வாழ நேர்ந்தது. 65 வயதில் மதுரையில் அவர் காலமானார். அவரது மரணச் செய்தியை அறிந்த நாடக நடிகர் சி.எஸ். சாமண்ணா, இறுதிச் சடங்குகளை நடத்தக்கூடப் பணமில்லாத நிலையில் மதுரையிலிருந்த நாடக நடிகர்களிடம் இரண்டணா, நான்கணா என வசூலித்துப் பாலாமணி அம்மையாரின் உடலை அடக்கம் செய்தார்.

இங்ஙனம் கலைத் துறையில் ஈடுபாடு கொண்டு உழைத்த பாலாமணி அம்மையாரின் வாழ்வு துன்பத்தில் முடிந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் கலைஞர்களின் வாழ்வைப்பற்றி, “கலைஞர்களின் வாழ்க்கை தீபாவளிப் பட்டாசு போல ஒளிவிட்டு உடன் அணைந்து விடுகிறது. அதற்கு மாறாக நின்று நிலைத்தெரியும் குத்துவிளக்காக விளங்கவேண்டும்” என்று குறிப்பிட்டார்.

பாலாமணி அம்மையாரின் வாழ்வு தீபாவளிப் பட்டாசு போல மின்னி மறைந்து விட்டது - குத்து விளக்காக அமையவில்லை என்பது வருத்தத்துக்குரியது.

"தமிழக மேடை நாடகப் பெண் கலைஞர்கள்" என்னும் இந்நூலைப் புரட்டுவதற்கு முன்னால் நாடகக் கலை ஆர்வலரும் ஆய்வாளரும், பெண்களைக் கொண்டு நாடகம் நடத்திய நாடக அரசி பாலாமணி அம்மையார் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே 'நுழைவாயில்' எனும் பெயரில் இந்நீண்ட விளக்க உரையை எழுத நேர்ந்தது.

"தமிழக மேடை நாடகப் பெண் கலைஞர்கள்"

எனும் இந்நூலைத் தொகுத்துத் தந்த ஆய்வாளர் திரு. அமைதி அரசு அவர்களுக்கும், ஆய்வுக்கு ஆற்றுப்படுத்திய திருமதி அ. மங்கை அவர்களுக்கும் இந்நூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட உவகையும், இசைவளித்த நலிந்து கிடக்கும் நாடகக் கலையைக் காப்பாற்ற வேண்டும் எனும் வேட்கையில் நடமாடும் ஒரு கலை நிறுவனமாகச் செயல்படும் திருமதி. மீனா சுவாமிநாதன் அவர்களுக்கும் மௌனக்குரல் அமைப்புக்கும் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

இந்நிறுவனத்தின்பால் அளவிலா ஈடுபாடு கொண்டு நிறுவன வளர்ச்சிக்கு வழிவகுத்துத் தந்துகொண்டிருக்கும் தனித்தமிழ் ஏந்தல், தமிழ் ஆட்சி மொழி - பண்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகனார் அவர்களுக்கும், இந்நிறுவனத்தின் ஏற்றத்திற்குத் துணைநின்று வருகின்ற மதிப்பிற்குரிய தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலாளர் திருமிகு. வை. பழனிச்சாமி இ.ஆ.ப. அவர்களுக்கும், இந்நூலின் மெய்ப்புகளைத் திறம்படத் திருத்தியுதவிய இளவல் திரு. தி. நடராசன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

நாடகவியல் ஆய்வுகள் நாளும் செழித்தோங்க வேண்டும் என்பது இந்நிறுவனத்தின் பேரவா. அந்த எண்ணத்தோடு அரும்பி மலர்ந்துள்ள இந்நூலைத் தமிழுலகம் மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்கும் என நம்புகின்றேன்.

இயக்குநர்
ச.சு. இராமர் இளங்கோ

மதிற்சுவர்களைத் தாண்டி.....

பொதுவாக, நிகழ்த்து கலை வரலாற்றைத் தொழில்சார்பு மற்றும் சாதீயத் தன்மைகளோடு இணைத்துப் பார்க்கவேண்டி வருகிறது. கடந்த இருபது ஆண்டுகளாகத்தான் மரபுக் கலைகளைக் கற்றுக் கொள்வதும் அக்கலைஞர்கள் பிறரோடு இணைந்து செயல்படுவதும் தொழிற்பட்டுள்ளன. சாதீயக் கட்டமைப்போடு பிணைந்து வந்துள்ள இவ்வரலாற்றில் இன்றைக்கு 'நாடகம்' என்று நாமறியும் வகையில்தான், சாதீய இறுக்கம் தளர்ந்து இருப்பதைக் காண முடிகிறது. அந்த வகையில் நாடகத் துறையில் பங்கேற்பாளரைப் பொருத்தவரை ஓரளவு சாதீயம் சாராத கலையாகக் காணலாம்.

ஆனால், மரபுக் கலைகளோடு இறுகப் பிணைந்துள்ள இன்னொரு கூறு பாலியல் பாரபட்சம். பெண்கள் பங்கேற்கும் **கும்மி, கோலாட்டம்** போன்றவை மனைசார் கலைகளாக மட்டுமே கருதப்படுகின்றன. **தப்பாட்டம், தேவராட்டம், ஒயிலாட்டம்** போன்றவற்றில் பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. **கரகாட்டம், பொய்க்கால்குதிரை** போன்ற கலைகளில் பெண்கள் ஆணின் துணையாக அனுமதிக்கப்படுகிறார்கள். **தெருக்கூத்து** இன்றளவும் பெண்ணின் பங்கேற்பை ஏற்றதில்லை.* எனவே சாதீயக் கட்டமைப்பின் இறுக்கத்தோடு, பாலியல் கூறுகளிலும் இறுக்கத்தோடு இருந்த நிகழ்த்து கலைத் துறையின் நீட்சியாகவே நாடகத்தையும் காணவேண்டும்.

சாதீய இறுக்கத்தைத் தளர்த்திய நாடகத்துறை, பாலியல் இறுக்கத்தை வெகுகாலம்வரை தளர்த்தாமலேயே இருந்து வந்தது. மரபுக்கலைகளில், பெண்கள் பங்கேற்ற மதம், மதம் சார்ந்த சடங்குகள், சடங்குகள் முன்வைக்கும் சுத்தம்-தீட்டு போன்றவற்றைக் காரணம் காட்டி மறுக்கப்பட்டது. தொடக்ககால நாடகத்துறையில் சமூக ஒழுக்கம், ஆண் நிலை நோக்கு காரணமாகப் பெண்கள் பங்கேற்பு அளிக்கப்படவில்லை. இந்த மதிற்சுவருக்குள் பெண்கள் நுழைந்த வரலாறு ஐம்பதாண்டுக்

---

* பெண்கள் இந்த ஆட்டங்கள் பலவற்றைக் கற்றுக் கொள்வதும், முழுதும் பெண்களாலான குழு திரு. இராசகோபால் இயக்கத்தில் வில்வளைப்புக் கூத்து நடத்துவதும் மிகச் சமீபகால வரலாறு. கூத்து தவிர, பிற ஆட்டங்களில் பெண்கள் தொழில்முறைக் கலைஞர்களாக அங்கீகரிக்கப்படவில்லை. கூத்திலும், இன்னும் சிறிது காலம் பொறுத்திருந்துதான் இம்முயற்சியின் விளைவைக் குறித்துக்கொள்ள முடியும்.

கால வரலாறுதான். இக்குறுகிய கால வரலாற்றைக் குறித்த ஆவணங்களும் ஆய்வுகளும் நம்மிடையே இல்லாததை வெறும் கவனமின்மையாகப் புறந்தள்ள முடியாது. எந்தத் துறையானாலும் அதில் பெண்கள் பங்களிப்பைச் சுலபமாக ஏற்றுக்கொள்ளத் தயங்குகிற ஆணாதிக்கச் சிந்தனை வெளிப்பாடாகவே இதனைக் காண வேண்டியுள்ளது.

உலகெங்கிலும் நாடகத்தில் பெண்கள் பங்கேற்பது பெரும் வரலாற்று நிகழ்வாகவே இருந்து வந்துள்ளது. கிரேக்க நாடகம் உள்ளிட்ட எல்லா நாடகங்களிலும் பெண்கள் நடிப்பது, நாடகம் பார்ப்பது ஆகியவற்றுக்குத் தடைகள் இருந்தன. வடமொழி நாடகங்களில் தேவதாசிகள் பங்கெடுத்துக் கொண்டனர்; பெண்களே பங்கேற்கும் "ஸ்திரீ பிரேத்தா" என்ற நாடக வகை இருந்தது; பெண்கள் நாடகம் பார்ப்பதற்குப் பலவித விதிகள் இருந்தன என்று அர்த்தசாஸ்திரம் கூறுகிறது. நடனமாதுக்களாக இருந்த தாசிகுலத்தினர் நடனம், இசை சார்ந்த நாடக வடிவத்தில் பங்கேற்றது வடமொழி, தமிழ் நாடகங்களில் இயல்பானதாக இருந்திருக்கலாம். 'சதிர்' எனப்பட்ட தாசியாட்டம், பரதமாக மறுஉருவம் பெற்றபிறகு, உயர்சாதிப் பெண்கள் பலர் இதில் தேர்ச்சி பெற்றபின், நாடகத்தில் இவர்கள் பங்குபெறுவது இயலாததாகி விட்டது. சிலம்பு போன்ற நாடகக் காப்பியம் உள்ள தமிழ்க்கலை - இலக்கிய வரலாற்றில், நாடகங்கள் குறைவாகவே உருவானதையும் பெண்கள் இவற்றில் பங்கேற்காததையும் வேறெப்படிப் புரிந்து கொள்வது?

ஆங்கில இலக்கிய வரலாற்றில் கிராம்வெல்லின் புரோட்டஸ்டெண்ட் அரசாங்கம் வீழ்த்தப்பட்டு, அவனால் மூடப்பட்ட நாடகசாலைகள் திறக்கப்பட்டபோது பிரெஞ்சு நாட்டில் வளர்ந்த இரண்டாம் சார்லஸ் மன்னர் மூலம் பிரெஞ்சு நடைமுறைகள் உட்புகுந்தன. பதினெட்டாம் நூற்றாண்டில் நாடக உலகில் பெண்கள் நுழைந்தபோது, ஆங்கில நாடகம் பெரிய மாற்றங்களைப் பெற்றது. உயர்வர்க்கப் பெண்களின் கேளிக்கை ஈடுபாடாக மாறிய நாடகமேடை, ஆபாசங்களின் மொத்த உருவாக மாறியது. பெண்கள் நடிக்காதபோது ஷேக்ஸ்பியர் கிளியோபாட்ரா, டெஸ்டிமோனா, ரோஸலிண்ட், லேடிமேக்பெத் போன்ற பாத்திரங்களைப் படைத்தார். பெண்கள் பங்கேற்கத் தொடங்கிய பிறகு அவர்கள் அலங்காரப் பொருட்களாகவும் கவர்ச்சிச் சாதனங்களாகவும் மாறினர். ஆண் ஆதிக்க மரபு, பெண்கள் பங்கேற்பைத் தனக்குரிய வகையில் கபளீகரம் செய்ததை நாம் அங்குக் காணமுடிகிறது.

தமிழ் நாடக உலகில் முதன்முதல் மேடையில் பங்கேற்ற பெண் யார்? அவர் எந்தப் பின்னணியில் இதில் நடிக்க வந்தார்? தொடர்ந்து பெண்கள் வரத் தொடங்கிய பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன? - போன்ற வரலாற்றுத் தரவுகள் இன்னமும் திரட்டப்படவில்லை. பல சமயங்களில், நாடக உலகில் நுழைந்த பெண்கள், திரையுலகிற்குச் செல்லத் தொடங்கியதால் இரண்டையும் பிரித்துப் பார்ப்பதும் சிரமமாகிறது. இதுவரை வெளிவந்துள்ள தமிழ் நாடக வரலாற்று நூல்களில் இடம்பெறும் சில பெண்கள் உண்டு. கும்பகோணம் பாலாமணி அம்மாள், பி.எஸ். தாணுவம்மாள், ராஜாமணி அம்மாள், டி.எம். கமலவேணி, கொண்டித்தோப்பு சாரதா, டி.பி. ராஜலக்ஷ்மி, கே.எஸ் அனந்தலக்ஷ்மி, டி.டி. தாயம்மாள் என்று பட்டியல் நீளும்.

கே.பி. ஜானகியம்மாள் என்ற விடுதலை வீரரும், கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவருமான பெண்மணி இசை நாடகத்திலிருந்து தன் வாழ்வைத் தொடங்கினார். கம்யூனிஸ்ட் இயக்கத்தில் செயல்படத் தொடங்கிய பின்பு 'அம்மா' என அன்போடு அழைக்கப்பட்ட ஜானகியம்மா, தனது நாடக வாழ்க்கை பற்றிப் பேசியதுமில்லை; பேச விரும்பியதும் இல்லை. அவரது வரலாற்றை எழுதியபோது அதைப்பற்றிய குறிப்பைக்கூட கம்யூனிஸ்ட் இயக்கம் வெளியிடவில்லை. அம்மாவின் தனி வாழ்விலும் மாற்றம் ஏற்படுத்தியதாலோ அல்லது நாடகத் தொழிலோடு கூடவே வந்த சமூக ஒழுக்கம் சார்ந்த விமரிசனங்களாலோ ஜானகியம்மாவிற்கு அவ்வனுபவம் வெளியே சொல்ல விரும்பாத ஒன்றாகவே இருந்தது. முற்போக்குச் சிந்தனை சார்ந்த இடதுசாரி இயக்கங்களில் இடம்பெற்ற நாடகங்களில், பெண்கள் பங்கேற்பு என்பது மிகக்குறைவாகவே இருந்து வந்துள்ளது. 1984இல் சென்னையில் நடைபெற்ற நாடக விழாவில் இடம்பெற்ற பல்வேறு மாவட்டத்தில் இருந்துவந்த நாடகங்களில் சென்னைக் கலைக்குழுவின் **நாங்கள் வருகிறோம்** நாடகத்தில் மட்டுமே பெண்ணுக்கு முக்கியப் பாத்திரம் இருந்தது. அப்பாத்திரத்தை ஏற்று நடித்தது, இவ்வகை நாடக நுழைவில் எனக்கு முதல் படியாயிற்று. அதே விழாவில் மதுரையிலிருந்து வந்த குழுவில் தொழில்முறைப் பெண் நடிகர்கள் பங்கேற்றனர். எண்பதுகளின் பிற்பகுதியில்தான் முற்போக்குச் சிந்தனையை முன்னெடுத்த நாடக செயல்பாடுகளில் பெண்கள் பங்கேற்பு இயல்பானதாக வடிவம் கொண்டது.

இந்தப் பின்னணியில்தான் தமிழகப் பெண் மேடைக் கலைஞர்களின் இக்குறிப்பேடு வெளியாகிறது. இது முழுமையானதல்ல - எண்ணிக்கையிலும் சரி; தகவல்களிலும் சரி.

ஈடுபடுவோரது பொருளாதாரப் பின்னணியும் 'நாவல்ஸ்' பாணியில் ஈடுபடுவோரது பொருளாதாரச் சூழலும் முற்றிலும் வேறாக இருப்பதன் காரணம் என்ன?

இந்தத் துறையில் திரைத்துறையின் தாக்கம் இவ்வளவு தூரம் இடம்பெற்றுள்ளதை எவ்வாறு புரிந்து கொள்வது? திரைப்படம் மாபெரும் வெகுசனத்தொடர்பு ஊடகமாக, அதிகச் செலவில்லாத பொழுதுபோக்காக நிலைபெற்றுவிட்ட சூழலில், இந்நாடகங்கள் திரைத்துறையின் எச்சங்களை நம்பியிருப்பது சரியா? பார்வையாளர்கள் நாடகத்தின் சமூகத்தளமாக இன்னமும் எதைக் கருதுகிறார்கள்? இவ்வளவு செலவு செய்து நாடகங்களை ஏன் நடத்துகிறார்கள்? இவையெல்லாம் இத்துறையின் வடிவத்தில் ஏற்படும் இடைச்செருகல்கள் குறித்தவை. அதுதவிர, இந்நாடகங்கள் பெரும்பாலும் பெண்ணைச்சோகமே வடிவாகவோ, போகத்திற்குரிய பொருளாகவோ இரண்டு எல்லைகளுக்குள் வைத்தே பார்க்கின்றன. இந்த ஒரேவகைப் பிம்பங்கள் மாறிவரும் சூழலைப் பொருத்தும் அதிக அளவில் பெண்கள் இடம் பெறுவதைப் பொருத்தும் மாற வாய்ப்புண்டா? இன்னும் பலப்பல வினாக்கள் நம் மனத்தில் எழுகின்றன. விடைகள் தேடுவது தொடர வேண்டும்.

இப்பணியைக் குறுகிய காலத் திட்டமாக **மௌனக்குரல்** வழங்கியபோது, தனது ஆய்வின் மேலுள்ள ஈடுபாட்டால் **திரு. ஜா. அமைதி அரசு** இதனை ஏற்றுக்கொண்டார். ஏற்ற பணியை உரிய வகையில், முடிந்தவரை முடித்தும் கொடுத்துள்ளார். நேரங்காலம் பாராமல் அலைந்து ஒவ்வொருவரையும் நேரடியாகச் சந்தித்து அளவளாவி, நட்புணர்வோடு பழகி, தரவுகளைச் சேகரித்த செயல் மிகவும் பாராட்டுக்குரியது.

சென்னை-113,
18.2.1997.

அ. மங்கை

தொகுப்பாளரின் குறிப்புகள்.....

தமிழகத்தில் உள்ள நாடக வடிவங்களில் ஸ்பெஷல் நாடகம், அமெச்சூர் நாடகம், சமூக நாடகம், நாவல்ஸ் நாடகம் போன்றவை தொழில்முறைக் கலைஞர்களைக் கொண்டு நிகழ்ந்து வருகின்றன. இக்கலைஞர்கள் நாடகத் தொழிலை நம்பியே குடும்பம் நடத்துகின்றனர். இந்த நான்கு வடிவங்களிலும் பங்குபெறும் பெண் கலைஞர்களைப் பற்றிய குறிப்புக்களே இத்தொகுப்பாகும். கலைஞர்களைச் சந்திக்கும் முன்னர், இவர்கள் பங்குபெறும் வடிவத்தைப் பற்றிய அடிப்படைத் தகவல்கள் அறியப்பட்டன.

நாவல்ஸ் நாடக வடிவத்தைத் தவிர மற்ற மூன்று வடிவங்களில் பெண் பாத்திரங்களைப் பெண் நடிகர் ஏற்கின்றனர். நாவல்ஸ் வடிவத்தில் மட்டும் ஆண் நடிகர், பெண் நடிகர் இவர்களில் யார் வேண்டுமானாலும் ஏற்கின்றனர். மேற்குறிப்பிட்ட வடிவங்களில் பெண் நடிகர்கள் முக்கியமாகக் கருதப்படுகின்றனர். இவ்வடிவங்களுக்கும் பெண் நடிகர்களுக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றி வடிவரீதியாகப் பிரித்துப் பார்க்கலாம்.

ஸ்பெஷல் நாடகம் :

இவ்வடிவத்தில் நிகழ்த்தப்படும் கதையில் உள்ள பெண் பாத்திரங்களைப் பெண் நடிகர் மட்டும் ஏற்கின்றனர். பெண் நடிகர்கள் அனைவரும் நடிகர் சங்கத்தில் உறுப்பினராகி உள்ளனர். நடிப்பதற்கென்று தனியாகப் பயிற்சி எடுத்துக் கொள்வதில்லை. சங்கரதாஸ்சுவாமிகளின் பாடல்களைப் பாடவும் புராணக்கதைகளைத் தர்க்கத்தின் போது பேசுவதற்கு மட்டுமே அனுபவம் பெற்ற ஆசிரியர்களிடம் பயிற்சி எடுத்துக் கொள்கின்றனர். நடனம் ஆடும் பெண் நடிகர் தனியாகப் பயிற்சி எடுத்துக் கொள்வதில்லை. நடிகர்கள், திரைப்படப் பாடல்களுக்கு ஏற்றபடி ஆடுவதற்கு அனுபவம் மட்டும் போதும். பெண் நடிகர்களை ஸ்திரீபார்ட் நடிகை, நடன நடிகை என்று கூறுகின்றனர். முதலில் நாடகத்தில் சேரும் பெண் நடிகர்களுக்கு நடனம் ஆடும் பாத்திரம் கொடுக்கப்படுகிறது. மேடைப்பயிற்சி, தர்க்கப்பயிற்சி பெற்றதும் ஸ்திரீபார்ட் பாத்திரம் கொடுக்கப்படுகிறது. பெண் நடிகருக்கு ஆண் நடிகரைவிட அதிக ஊதியம் கொடுக்கப்படுகிறது. தற்போது உள்ள சூழலில் ஸ்பெஷல்

நாடகத்தில் ஸ்திரீபார்ட், நடனம் ஆடுபவர், பபூன் போன்றோர் நாடகத்தில் முக்கியமானவர்கள். 400 கலைஞர்கள் ஒரு சங்கத்தில் உறுப்பினராக இருந்தால் அதில் 100 கலைஞர்கள் பெண்கள் என்ற விகிதத்தில் இருக்கின்றனர். மதுரை, திண்டுக்கல், புதுக்கோட்டை, சேலம் போன்ற மாவட்டங்களில் இவ்வடிவம் தற்போது பிரபலமாக இருக்கிறது.

அமெச்சூர் நாடகம் :

இவ்வடிவத்தில் பெண் நடிகர்கள் நிரந்தரமாக நடிப்பதில்லை. இதில் பங்குபெறும் பெண் நடிகர்களுக்கு அழகு, வயது இவைகளில் கவனம் செலுத்தப்படுகிறது. இதில் கற்பனைக் கதைகளும் புராணக் கதைகளும் நிகழ்த்தப்படுகிறது. நாடகம் ஏற்பாடு செய்பவர்களே, அரங்கப் பொருள்கள், இசைக்குழு, பெண் நடிகர் போன்றவற்றில் தொழில்முறையாக இருப்பவரை அழைத்து வந்து நாடகம் நிகழ்த்துகின்றனர். இதில் கற்பனைக் கதைகளும் வரலாற்றுக் கதைகளும் நிகழ்த்திக் காட்டப்படுகிறது. இதில் உள்ள பெண் பாத்திரங்களைப் பெண் நடிகர் மட்டும் ஏற்கின்றனர். பெண்நடிகர்களைப் பார்வையாளருக்கு எப்படியெல்லாம் இன்பநுகர்வுப் பொருளாக்க முடியுமோ அவ்வளவு முயற்சிகளும் இவ்வடிவத்தில் நடைபெறுகிறது. இவ்வடிவத்தில் பங்குபெறும் சில நடிகைகள் பகுதி நேரமாகவும் நாடகத்தில் நடித்து வருகின்றனர். கல்லூரியில் படிக்கும் மாணவிகளும் இதில் பங்கு பெறுகின்றனர். இவர்களுக்கு ஓர் இரவுக்கு 600 முதல் 1000 ரூபாய் வரை ஊதியமாகக் கொடுக்கப்படுகிறது. சமூக நாடகத்தில் பங்குபெறும் பெண் நடிகர்களும் இவ்வடிவ அடிப்படையில்தான் பங்கு பெறுகின்றனர். தற்போது சேலம், திண்டுக்கல், மதுரை, புதுக்கோட்டை போன்ற பகுதிகளில் இவ்வடிவம் அதிகமாகச் செய்ல்பட்டுக் கொண்டிருக்கிறது.

நாவல்ஸ் வடிவம் :

நாவல்ஸ் வடிவம் தொண்டை மண்டலப் பகுதியில் மட்டும் நிகழ்ந்து கொண்டு வருகிறது. பெண் நடிகர்கள் ஒப்பந்த அடிப்படையில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ஒப்பந்தத்தின் போது பெண் நடிகர் 25 ஆயிரம் ரூபாய் வரை குழு முதலாளியிடம் முன்பணம் வாங்குகின்றனர். நடிப்பு ஊதியம் பங்காகப் பிரித்துத் தரப்படுகிறது. பெண் நடிகருக்கு அதிகபட்சமாக ஒன்றரை பங்கு கொடுக்கப்படுகிறது. இவ்வடிவத்தில் பெண் பாத்திரத்தை, ஆண் நடிகரும் ஏற்கின்றனர்.

பெண் நடிகர் உள்ள குழுவே இவ்வடிவத்தில் அதிகம் பணம் வாங்கும் குழுவாகவும் பிரபலமான குழுவாகவும் இருக்கின்றது. பெண் நடிகர்களுக்கு இதில் முக்கியப் பாத்திரம் கொடுக்கப்படுகிறது.

தெருக்கூத்து வடிவம் :

தமிழ்நாடு கட்டைக்கூத்துக் கலைவளர்ச்சி முன்னேற்றச் சங்கத்தினர் **வில்வளைப்பு** என்ற பாரதக் கூத்தை முழுக்கப் பெண் கலைஞர்களைக் கொண்டு நிகழ்த்தி வருகின்றனர். தெருக்கூத்து வடிவத்தில் பெண்கள் முதன் முறையாகப் பங்கேற்பது சிறப்பம்சமாகும். இதில் பங்கேற்ற கலைஞர்களைப் பற்றிய தகவல் இத்தொகுப்பில் இடம்பெறவில்லை.

கள ஆய்வுக் குறிப்புகள் :

இத்தொகுப்பிலுள்ள ஒவ்வொரு வடிவத்துக்கும் குறைந்தது ஐந்து பெண் நடிகர்களைச் சந்திக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இவர்களில் வயது வித்தியாசம், நாடக அனுபவம் என்று இரண்டு நிலையாகப் பிரித்து, தற்போது நடிக்க வந்தவர், ஏற்கனவே நடித்துக் கொண்டு பிரபலமாக இருப்பவர், பிரபலமாக நடித்து ஓய்வு பெற்றவர் என்று பிரித்து அதற்கேற்றபடி நடிகர்களை முடிவு செய்து அவர்களிடம் கலந்துரையாடல் செய்யப்பட்டது.

ஒவ்வொரு கலைஞர்களிடமும் பேசும்போது குறிப்பிட்ட கேள்விகளை மனத்தில் வைத்துக்கொண்டு, அக்கேள்விகளை ஒட்டிக் கலந்துரையாடல் நிகழ்த்தப்பட்டது. குறிப்பேட்டிற்காக உருவாக்கப்பட்ட கேள்விகளைத் தகவலாளியிடம் கேள்வியாகக் கேட்கப்படாமல் உரையாடலின்போது தகவல் பெறப்பட்டது. ஒலி நாடாவில் பதிவு செய்தல், தாளில் குறிப்பெடுத்தல் போன்றவை தவிர்க்கப்பட்டது. இச்செயற்பாடுகள் தகவலாளியின் மனநிலையை இயல்பானதிலிருந்து மாற்றக்கூடும் என்பதால் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஒரு தகவலாளியிடம் பேசி முடித்த ஒருமணி நேரத்திற்குள் கலந்துரையாடலில் பேசப்பட்ட தகவல்கள் எழுதப்பட்டன.

தகவல் சேகரிப்புச் சூழல் பெரும்பகுதி இயற்கையான சூழ்நிலையாக அமைத்துக் கொள்வதில் கவனமாகச் செயல்படுத்தப்பட்டது. நடிகர் சங்கத்தில் நடிகரின் முகவரியைக் கேட்டால் சங்கத்திலிருந்து ஓர் உறுப்பினரைத் தகவல் சேகரிப்பாளருடன் அனுப்புகின்றனர். மற்ற உறுப்பினர் முன்னிலையில் தகவலாளி முழுமையாகப் பேசுவது இல்லை.

அதனால் தகவலாளியிடம் முகவரி எழுதித் தரும்படி கேட்டுக்கொண்டு அவரின் ஓய்வு நேரத்தையும் குறித்துக் கொண்டு, மீண்டும் அந்த ஓய்வு நேரத்தில் அவருடன் சந்திப்பு நிகழ்ந்தது. இரண்டாம் முறை சந்திப்பின்போது தகவலாளி தயங்காமல் பேச முன்வந்தார். தகவலாளி நீண்ட நேரம் பேசிக்கொண்டு இருக்கும் போது வீட்டில் அவருக்கு மற்ற வேலைகள் தடைப்படுகிறது என்றால், உடனே கலந்துரையாடல் நிறுத்தப்பட்டு, பின்னர் கலந்துரையாடல் தொடரப்பட்டது.

இரண்டு தகவலாளிகள் ஒன்றாக இருக்கும்போது கலந்துரையாடல் சிறப்பாக அமைகின்றது. உணர்வு பூர்வமாகவும் பேசுகின்றனர். சேகரிப்பாளரிடம் தயக்கம் இல்லாமல் பேசுவதற்கு இச்சூழல் ஏற்றதாக அமைகிறது. சில கலைஞர்கள் கணவர் முன்பாகச் சாதாரணமாகப் பேசுகின்றனர். சிலர், சேகரிப்பாளரின் கேள்விக்குமட்டும் பதில் கூறி அமைதியாக இருந்துவிடுவர். அவர்களாகவே புதிய செய்திகளைப் பேசுவதற்கு யோசிக்கின்றனர். கணவர் இல்லாத நேரங்களில் தடையில்லாமல் பேசியதாக உணர முடிகிறது.

சில நடிகர்களைப் பார்க்கப் போகும்போது அவர் குடும்ப வேலையில் ஈடுபட்டிருப்பார். அப்போது சேகரிப்பாளரைத் திருப்பி அனுப்புவதா அல்லது பேசுவதா என்று யோசிப்பர். இந்த நேரத்தில் சேகரிப்பாளர் சூழலைப் புரிந்துகொண்டு ஓய்வுநேரத்தைக் கேட்டறிந்து, அந்த நேரத்தில் திரும்பவந்து கலந்துரையாடல் செய்தது இருவருக்கும் நல்லதாய் அமைந்தது.

வயதில் முதிர்ந்த பெண் கலைஞர்களிடம் அனுபவங்களைக் கேட்கும்போது, சிறுவயது காலத்தில் நடந்த நாடக நிகழ்வுகளையும் இப்போது உள்ள சூழ்நிலையையும் ஒப்பிட்டுப் பேசுவதில் மகிழ்ச்சி அடைந்தனர். அதனால் சில அரிய தகவல்களும் கிடைத்தன. பெண் கலைஞர்கள் சிலரது குடும்பம் சமூக மரபுக் கட்டமைப்பில் உள்ள குடும்ப நிலையில் இருக்காது. எனவே, கணவர், குழந்தைகள், சாதி இவைகளைக் கேட்கும்போது தகவலாளியின் முகமும் மாறுகின்றது. குடும்பம், கணவர், குழந்தைகள் இவைகளைப் பற்றிக் கேள்வி கேட்காமல், கலந்துரையாடல் நிகழ்த்தும்போது கேட்டுத் தெரிந்து கொண்டு குறிப்பெடுக்கப்பட்டது. சில பெண்கள் கணவரைப் பிரிந்திருப்பர்; சிலர் இரண்டாவது மனைவியாக இருப்பர். இக்கேள்விகள் தகவலாளியின் மனத்தைப் பாதிக்கச் செய்வதைத் தடுக்க இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இக்குறிப்பேட்டில் கூறப்படும் செய்திகள் அனைத்தும் நேரடியான களப்பணியில் தொகுத்ததாகும். இத் தொகுப்பை

எழுதும் போது வாழ்க்கைப் பின்புலம், நாடகப் பின்புலம் என்று பிரித்து, கேள்விகளுக்குப் பதில் கொடுப்பது போல் செய்திகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

வாழ்க்கைப் பின்புலம் :

— வயது, திருமணம் ஆனவரா?

— நாடகத்தின் மூலம் வரும் பணம் குடும்பச் செலவிற்குப் போதுமானதாக இருக்கிறதா?

— நாடகம் நடிப்பதால் குடும்பத்தில் சிக்கல் உண்டாகிறதா?

— நடிப்பதால் குழந்தை வளர்ப்பு முறை பாதிக்கப் படுகின்றதா?

— நடிப்பது தொடர்பாகக் கணவருடன் சிக்கல் உண்டாகிறதா?

— குழந்தைகளை நாடகத்தில் நடிக்க வைப்பீர்களா?

— நாடக ஒப்பந்தம் உங்கள் விருப்பத்திற்காகச் செய்யப்படுகிறதா?

— நாடகம் நடத்த வெளியூர்களுக்குப் போகும்போது பாதுகாப்பிற்காக யாரும் உடன் வருகிறார்களா?

நாடகப் பின்புலம் :

— நாடகத் துறையில் அறிமுகப்படுத்தியவர் யார்?

— நடிப்பை விரும்பித் தேர்ந்தெடுத்தீர்களா? பிழைப்பிற்காகவா?

— எந்த வடிவத்தில் முதலில் பங்கு பெற்றீர்கள்?

— ஆண் நடிகர்களோடு நடிக்கும் போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் என்ன?

— குழுவினர் எப்படி நடத்துகின்றனர்?

— எந்த மாதிரியான பாத்திரங்கள் கொடுக்கின்றார்கள்? எந்த மாதிரியான பாத்திரங்கள் பிடிக்கும்?

— ஒப்பனை யார் விருப்பத்திற்கேற்பச் செய்துகொள்வீர்கள்?

— ஆண் பாத்திரம் ஏற்றுள்ளீரா? ஏற்கும்போது உங்கள் மனநிலை எப்படியிருந்தது?

— நடிப்பின்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் என்ன?

— பெண் பாத்திரத்தைப் பெண் நடிகர் ஏற்பதற்கும் ஆண் நடிகர் ஏற்பதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

— பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காகத்தான் நாடகத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்பது பற்றித் தங்கள் கருத்து என்ன?

மேலே குறிப்பிடப்பட்ட கேள்விகளின் அடிப்படையில் தொகுப்பு அமைந்துள்ளது. பொதுவான கருத்துக்களைப் பற்றிப் பேசும்போது மற்ற ஆண் நடிகர்களிடமும் பேசி செய்திகளை உறுதி செய்து கொள்ளப்பட்டது.

கலந்துரையாடல் செய்யும்போது செய்திகளைப் பதிவு செய்யாததால், தொகுத்து எழுதும்போது தகவலாளியின் மொழிநடையை முழுமையாகக் கொண்டு வர முடியவில்லை.

தகவலாளியின் கருத்துக்களை மேற்குறிப்பிடப்பட்ட கேள்விகளின் அடிப்படையில், அவர்களுடைய வெளிப்பாடாக எழுத்துமொழியில் எழுதப்பட்டுள்ளன. நடிகர்களின் பேச்சில் இருந்த சில சைகை மொழிகளை எழுத்து வடிவில் கொண்டு வர முடியவில்லை.

தகவல் சேரிப்பின்போது, தகவலாளிகளின் முகவரிகளையும், சில அடிப்படைத் தகவல்களையும் கொடுத்துதவிய புதுக்கோட்டை முத்தமிழ் நாடக நடிகர் சங்கம், மதுரை தமிழ்நாடு நாடக நடிகர் சங்கம், திண்டுக்கல் நாடக நடிகர் சங்கம், சேலம் நாடக நடிகர் சங்கம் இவைகளின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கட்கு நன்றி!

நேரம் பாராமல் என்னுடன் கலந்துரையாடல் செய்து, தகவல்களைக் கூறிய அனைத்துக் கலைஞர்கட்கும் நன்றி கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்!

இத்தொகுப்புக்குக் காரணமான திருமிகு. மீனா சுவாமிநாதன் அவர்கட்கும், திருமிகு. மங்கை அவர்கட்கும் நன்றி!

இத்தொகுப்பைச் சரிபார்த்து, அச்சிட்டுத் தந்த நண்பர் இரா. வேலாயுதம் அவர்கட்கு என் மனமார்ந்த நன்றி!

சென்னை,
17.2.1997.

ஜா. அமைதி அரசு

பொருளடக்கம்

எண்	உள்ளிருப்போர்	பக்கம்
1.	அங்கரத்தினம், எம்.எஸ்.	1
2.	அர்ச்சனாதேவி, எம்.எஸ்.	5
3.	இந்திரா, கே.ஆர்.	8
4.	இரத்தினம்மாள், பி.எல்.என்.	11
5.	இராஜேஸ்வரி, கே.பி.	14
6.	உஷாராஜ்	16
7.	கங்கா	20
8.	கலாராணி, கே.ஆர்.	23
9.	கலைச்செல்வி, எஸ்.	27
10.	கலைச்செல்வி, கே.எம்.	31
11.	காஞ்சனா, என்.எஸ். (எ) தேவிமாணிக்கம்	35
12.	கீதா	38
13.	கெங்காபாய், ஏ.எஸ்.	42
14.	சாந்தி, கே.வி.	45
15.	சார்லிதேவி, ஆர்.	48
16.	சாவித்திரி, வி.	51
17.	சித்ரா, டி.ஏ.	55

18.	சுகுணா, வி.	59
19.	சுகுணாராணி	62
20.	சுந்தரலட்சுமி, கலைமாமணி டி.ஏ.	66
21.	சுமதி, ப.	69
22.	பாரிஜாதம், டி.பி.	73
23.	புவனாஸ்திரீ	76
24.	புஷ்பா ராஜாமணி	79
25.	மகாலட்சுமி	82
26.	மல்லிகா, கே.எஸ்.டி.	86
27.	மீனா, எஸ்.பி.	89
28.	ரேணுகாதேவி, எம்.எஸ்.	93
29.	வசந்தி	96
30.	வரலட்சுமி, டி.என்.ஏ.	100
31.	விஜயலட்சுமி	104
32.	ஜெயசித்ரா	108
33.	ஜெயலதா, ஆர்.ஜெ.	111

அங்கரத்தினம், எம்.எஸ்.

வயது 56

சந்தைப்பேட்டைத் தெரு,
வேடசந்தூர்,
மன்னர் திருமலை மாவட்டம்.

இவர் பறையர் இனத்தைச் சேர்ந்தவர். கணவர் நாடகத்தில் நடிக்கவில்லை. நாடகத்தின் மூலம் பெறும் பணம் குடும்பச் செலவுகளுக்குப் போதவில்லை. "நாடகத்தில் நடித்துத் தம்பிகளையும் குழந்தைகளையும் படிக்க வைத்தேன். நாடகத்தில் நடிப்பதால் என்னுடைய குடும்பத்தில் சிக்கல் ஏற்படட்டதில்லை. காரணம், நாடகத்தின் மூலம் வரும் பணத்தில்தான் குடும்பத்தை நடத்த வேண்டி இருந்தது. எனவே நடிப்பது தொடர்பாகக் குடும்பத்தில் சிக்கல் ஏற்படட்டதில்லை" என்கிறார்.

நாடகத்தில் பங்குபெற்றதால் ஊரில் உள்ளவர்கள் முதலில் தவறாக எண்ணினார்கள். உறவினர்களும் சரியாகப் பழகுவதில்லை. இப்போதும் வசதியான உறவினர்கள் எங்களை உறவினர்கள் என்று சொல்லிக் கொள்வதில்லை. அதைப்பற்றியும் நாங்கள் கவலைப்படுவதில்லை. எங்களுடைய உழைப்பு; அதற்கேற்ற வருமானம் - இதில் யார் தவறாக நினைத்தாலும் பரவாயில்லை என்கிறார்.

நாடகத்தில் நடிப்பதால் குழந்தை வளர்ப்பு முறை பாதிக்கவில்லை. என்னுடைய மகளையும் மகனையும் படிக்க வைத்தேன். குழந்தைகள் ஐந்து வயது வரைக்கும் வளர்ப்பதற்குச் சிரமம். இது குழந்தைக்கும் சிரமம்; பெற்றவளுக்கும் சிரமம். நாடகம் நிகழ்த்தும் பகுதிகளுக்குக் குழந்தையையும் தூக்கிக் கொண்டு போய்விடுவேன். அரங்கத்திலேயே தொட்டில் கட்டித் தூங்க வைத்துவிடுவேன். சில நேரங்களில் குழந்தை அழுவது மற்ற நடிகர்களுக்கும் இடையூறாக இருக்கும். இவை எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு, நடிப்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டும். சில கிராமங்களில் குழந்தைக்குப் பால் கிடைக்காது. பசியால் குழந்தை அழுதுகொண்டு இருக்கும். நமக்கும் உடன் நடிப்பவர்க்கும் துக்கமாக இருக்கும். ஆனால் ஒன்றும் செய்யமுடியாது. பார்வையாளர்களிடம் அல்லது நாடகம் ஏற்பாடு செய்தவர்களிடம் கூறிப் பால் வாங்கிவரச் சொல்லி பால் கொடுப்பேன். இது போன்ற நேரங்களில்தான் மனத்திற்கு

வேதனையாக இருக்கும். நடிப்பது போலச் சிரமமானது வேறு எதுவும் இல்லை என்று தோன்றும் என்கிறார்.

நாடகத்தைவிட அதிகம் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்திருந்தால் நாடகத்தில் நடித்திருக்க மாட்டேன் என்கிறார். குடும்பச் சூழல் காரணமாகத்தான் நாடகத்தில் நடித்தேன்; இல்லையென்றால் வேறு வேலை செய்து கொண்டிருப்பேன் என்கிறார்.

நாடகத்தில் ஏற்கும் பாத்திரங்கள் சொந்த வாழ்க்கையைப் பாதிக்கவில்லை. நாடகத்தில் நடிப்பதை வீட்டில் நினைத்துக்கூட பார்ப்பதில்லை. எப்போது வேண்டுமானாலும் நாடகத்தில் நடிக்கலாம் என்ற மனஉற்சாகம் வந்த பிறகு நாடகத்தில் நடிப்பதைத் தொழிலாகக் கருதிச்செயல்பட்டு வந்தேன் என்கிறார்.

நாடக ஒப்பந்தம் இவர் விருப்பத்திற்கேற்ப நடந்து வருகிறது. நாடகம் நடத்த வெளியூர்களுக்குப் போகும் போது பாதுகாப்பிற்காக என்று யாரையும் அழைத்துச் செல்வதில்லை. அதற்கு அவசியமும் இல்லை என்கிறார். பெரும்பாலும் குழுவாகச் செல்வோம். இல்லையென்றாலும் நாடகம் நிகழ்த்தும் பகுதி ஏற்கனவே நமக்குப் பழகிப்போய் இருக்கும். எனவே நாடகம் நிகழ்த்தும் பகுதிக்குச் செல்வது தொடர்பாக எந்தச் சிக்கலும் ஏற்பட்டதில்லை என்கிறார்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத்தில் அறிமுகப்படுத்தியவர் இவருடைய தந்தையார். ஐந்து வயதில் நாடகத்தில் சேர்ந்ததால் நடிப்பைத் தேர்ந்தெடுப்பது விரும்பியா விரும்பாமலா என்று கூறமுடியாது. நாடகம் தொடர்ந்து நடத்தியதால் விரும்பிய தொழிலாக மாறிவிட்டது என்கிறார். நடிப்பதை இவருடைய தந்தையே கற்றுக் கொடுத்துள்ளார். தென்னாம்பட்டி வி.ஏ. பெருமாள் கம்பெனியில் முதலில் ஸ்திரீபார்ட் செய்துள்ளார். ஸ்பெஷல் நாடக வடிவத்தில் முதலில் பங்கேற்றுப் பிறகு சமூக நாடகங்களிலும் நடித்துள்ளார்.

ஆண் நடிகர்களோடு நடிக்கும்போது பழகுவதில் பிரச்சனை இருக்காது. ஆனால் நடிக்கும் போது ஒரு சில ஆண் நடிகர்கள் கையைப் பிடிப்பது, தோளின்மேல் கை போடுவது இச்செயல்கள் பெண் நடிகர்களுக்குத் தொந்தரவாக இருக்கும். இதை ஆண் நடிகர்கள் இயல்பாகச் செய்தார்கள் என்றால் சிக்கல் இல்லை. சிலர் செயற்கையாகச் செய்வார்கள். வேண்டும் என்று செய்யும் போது பெண் நடிகர்களுக்குக் கோபமும் எரிச்சலும் வரும் என்கிறார்.

குழுவினர் அனைவரும் ஒரு குடும்பமாகப் பழகுவோம். பெண் நடிகர்களுக்கு மட்டும் பழகுவதில் வித்தியாசம் இருக்கும். மற்றக் கலைஞர்கள் நண்பர்களாக இருப்பார்கள். குடும்பத்திலும் அக்கறையுடன் கலந்து கொண்டு பழகுவார்கள். .ஆனால் இப்போது தொழில் பொறாமை அதிகமாகி விட்டதால், உறவு முறைகள் சரியாக இருப்பதில்லை. கலைஞர்களும் அதை எதிர்பார்ப்பதில்லை என்கிறார்.

பிடித்தமான பாத்திரம், ''ஞான சௌந்தரி''யில் ஞானசௌந்தரி பாத்திரம். இப்பாத்திரம் எனக்குப் பிரபலமானதுங்கூட. . ஞானசௌந்தரி நாடகம் யார் நிகழ்த்தக் கேட்டாலும் அதில் ஞான சௌந்தரியாக அங்கரத்தினத்தை நடிக்க வைக்க வேண்டும் என்பார்கள். மற்றவர் யார் நடித்தாலும் இவர் அங்கரத்தினம் போலவே நடிக்கின்றார்; இவர் அங்கரத்தினம் போல் நடிக்கவில்லை என்று பார்வையாளர்கள் கூறுவார்கள். எனவே எனக்கு ஞானசௌந்தரி பாத்திரம் தான் பிடித்தமானது என்கிறார்.

எனக்கு ஸ்திரீபார்ட்டில் முக்கிய வேடம் கொடுப்பார்கள். நிறம் கருப்பாக இருந்தாலும் குரல் வளம் இருப்பதால் எனக்கு முக்கியப் பாத்திரம் கொடுப்பார்கள். ஒரு கிராமத்தில் மட்டும் தொடர்ந்து இருபது ஆண்டுகள் நடித்து வருகிறேன். அக்கிராமத்து மக்களும் சளைக்காமல் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் என்னையே அழைக்கின்றார்கள். இப்போது வந்த ஸ்திரீபார்ட் நடிகர்களை இரண்டு ஆண்டுகளுக்கு மேல் அழைப்பது இல்லை. நடிகர்களின் நிலைமை அந்த அளவிற்குப் போய்விட்டது என்கிறார்.

ஒப்பனையை என் விருப்பத்திற்கேற்பச் செய்து கொள்வேன். நான் கறுப்பாக இருப்பதால் என் உடலுக்கு ஏற்றபடி ஒப்பனைகளை கவனமாகச் செய்து கொள்வேன். ஞானசௌந்தரியில் நடிக்கும்போது ஒப்பனை செய்தபின் இருபது வயதுப் பெண் போன்று மேடையில் தோன்றுவேன். என்னைச் சாதாரணமாகப் பார்த்தவர்கள் ஒப்பனையுடன் பார்க்கும்போது அடையாளம் கண்டுகொள்ள முடியாது. ஒப்பனை செய்யும்போது மக்களுக்குப் பிடித்தவையாகச் செய்வதில் கவனம் இருப்பது போன்று நமக்கும் பிடித்த வகையில் செய்து கொள்வது மிகமுக்கியம் என்கிறார்.

பிடித்த கதையம்சம், புராணம். சமூக நாடகங்களில் நடித்திருக்கிறேன் என்றாலும், .ஸ்பெஷல் நாடகத்தில் இருக்கும் மனத்திருப்தி, வசதி சமூக நாடகத்தில் இல்லை. சமூக

நாடகங்களில் நடிப்பதே கடினமான வேலை. பாலியல் பலாத்காரக் காட்சிகளைத் திரைப்படத்தில் வருவது போன்று செய்யச் சொல்கின்றார்கள். வசனம் பாடம் செய்வது குடும்பச் சூழலால் முடியாமல் போய்விடுகின்றது. அதுமட்டுமல்லாமல் பாத்திரத்திற்கு ஏற்றபடி ஜாக்கெட் கிழிப்பது போன்றவற்றை மேடையில் செய்வதற்கு மனத்திற்கு ஒப்பாது. இதனால்தான் சமூக நாடகங்களில் நடித்தாலும் மனத்திற்குப் பிடிக்கவில்லை. ஸ்பெஷல் நாடகம் எவ்வளவோ பரவாயில்லை என்கிறார்.

இவர் ஆண் பாத்திரங்களை ஏற்றதில்லை. குழுவில் நடிப்பு அல்லாத மற்ற வேலைகளில் ஈடுபடுவதில்லை. நடிகர் சங்கத்தில் ஏதாவது சிறிய வேலைகளைச் செய்யச் சொன்னால் செய்வேன் என்கிறார். நடிப்பின்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல் பாடலில் மட்டும் வரும். குரல் சாரீரம் எப்போதுமே சரியாக வைத்திருக்க முடியாது. பாடல் சரியாகப் பாடவில்லை என்றால் பார்வையாளர்களுக்கு வெறுப்பு உண்டாகும். இதனால் அடுத்த ஆண்டு நிகழ்த்துவதற்கு அழைக்க மாட்டார்கள் என்கிறார்.

பெண் பாத்திரத்தைப் பெண் ஏற்று நடிக்கும்போது மேடையில் இயல்பாகப் பேசுவார்கள். சோகமான காட்சிகளையும் சாதாரணமாகச் செய்வார்கள். ஆண் நடிகர் இதைச் செய்யும் போது குரலில், ஒப்பனையில் மாற்றம் வேண்டும். எவ்வளவு எதார்த்தமாக இருந்தாலும் குரல் சரியில்லை என்றால் பாத்திரம் சரியாக அமையாது என்கிறார்.

பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காகத்தான் நாடகத்தில் பங்கு பெறச்செய்கிறார்கள் என்ற கருத்தை மறுக்கின்றார். கவர்ச்சி இல்லாமலே எத்தனையோ நடிகர்கள் பிரபலமாக இருக்கின்றார்கள். திறமை இல்லாதவர்கள் மட்டும் கவர்ச்சியாக நடந்து கொள்ள வேண்டி உள்ளது என்கிறார்.

அர்ச்சனாதேவி, எம்.எஸ்.
வயது 28

ராஜா,
சாவித்திரி அம்மன் வளாகம்,
அரிசிக்காரத் தெரு,
மதுரை - 1.

இவர் திருமணம் ஆனவர். ஒரு பெண் குழந்தை உள்ளது. கணவர் ஆர்மோனியம் வாசிப்பவர். இவருடைய தாய் தந்தையர் நாடக நடிகர்கள். நாடகத்தின் மூலம் கிடைக்கும் பணத்திற்கும் செலவுகளுக்கும் சரியாகப் போய்விடுகிறது என்கிறார். நாடகத்தில் நடிப்பதால் குடும்பத்தில் சிக்கல் ஏற்படுவதில்லை. காரணம், கணவர்தான் நாடகத்தில் நடிக்கச் சொன்னார். குடும்பச் செலவுகளுக்கு வருமானம் போதியதாக இல்லை என்று என்னை நாடகத்தில் நடிக்க வைத்தார்.

நாடகத்தில் நடிப்பது பற்றி ஊரில் உள்ளவர்கள் என்ன கருத்துச் சொன்னாலும் பரவாயில்லை. என் விருப்பம் எங்களுடைய குடும்பம்; மற்றவர்கள் எங்களுக்கு உதவப் போவதில்லை என்கிறார். நாடகத்தில் நடிப்பதால் இவருடைய குழந்தை வளர்ப்புமுறை பாதிக்கவில்லை. இவருடைய நெருங்கிய உறவினர்கள் கவனித்துக் கொள்கின்றார்கள். குழந்தை பள்ளிக்குப் போகும் போது தொந்தரவு நேரலாம். நல்லமுறையில் படிக்க வைக்க முயற்சி செய்வோம் என்கிறார்.

நடிப்பது தொடர்பாகக் கணவருடன் சிக்கல் ஏற்படுவதில்லை. நான் நடிக்கும் போதும் கணவர் மேடையில் இருப்பார்; ஆர்மோனியம் வாசிப்பவராக இருக்கின்ற காரணத்தினால் பாட்டுகள் எடுத்துக் கொடுப்பார். மேடையில் உதவியாக இருப்பார் என்கிறார். இவர் குழந்தைகளை நாடகத்தில் நடிக்க வைக்கக்கூடாது என்று முடிவு செய்திருக்கிறார். வேறு வேலையில் இருப்பது நல்லது. நாடகம் நிரந்தரமான வருவாய் தருவது இல்லை என்கிறார்.

நாடகத்தைவிட அதிகப் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்தால் நாடகத்தில் நடிக்க மாட்டேன். மேடையில் ஏற்கும் பாத்திரங்கள் நிஜ வாழ்க்கையில் பாதிப்பு ஏற்படுத்துவதில்லை. ஆனால் பாத்திரமாக இருக்கும்போது தனி தைரியம் வருகின்றது. மேடையில் கணவர் இருக்கும்போது கூட அவர் ஞாபகம் வருவது

இல்லை. கணவர் இருப்பதால், எதைப் பேச வேண்டும், எதைப் பேசக்கூடாது என்று யோசிப்பது இல்லை. பாத்திரம் செய்யும் வேலைகளைச் செய்வேன். மேடை எனக்குச் சுதந்திரம் கொடுக்கின்றது. உடன் நடிக்கும் ஆண் நடிகரை நாம் எந்தக் கேள்வி வேண்டுமானாலும் கேட்கலாம். அவர் கேட்கும் கேள்விகளுக்கு நம் மனத்திற்குப் பட்ட பதில்களைக் கூறலாம். ஆனால் நிஜ வாழ்க்கையில் அப்படி இருக்க முடியாது என்கிறார்.

நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் இவர் விருப்பத்திற்கேற்ப செலவு செய்வதில்லை. கணவரிடம் கொடுத்து விடுகிறார். கணவர் விருப்பப்படி நடந்து கொள்வேன் என்கிறார். நாடக ஒப்பந்தம் கணவர் கவனித்துக் கொள்வார். ஒருசில கிராமங்களில் நடிப்பதற்கு என்னிடம் கேட்பார். ஒப்பந்தம் தொடர்பாகச் சிக்கல் ஏற்பட்டதில்லை. நாடகம் நிகழ்த்தும் பகுதிகளுக்குக் கணவரோடு செல்கின்றார். தனியாகச் செல்வது இல்லை. கலைஞர்கள் அனைவரும் குழுவாகச் செல்வார்கள். நாங்களும் குழுவினரோடு செல்வோம் என்கிறார். பெண் கலைஞர்களுக்குப் பாதுகாப்பிற்காக என்று யாரேனும் உடன் வருவது வழக்கம். அதே போல் எனக்கு என் கணவர் வருகிறார். அவரும் குழுவில் கலைஞராக இருப்பதால் எங்களுக்கு இது எளிதாகின்றது.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத்தில் அறிமுகப்படுத்தியவர் இவருடைய கண்வர். நாடகம் நடிப்பது விரும்பித் தேர்ந்தெடுக்கவில்லை. குடும்பச் செலவுகளுக்கு வருமானம் பற்றாக்குறையால் நாடகத்திற்கு வந்துள்ளார். இவருக்கு முதலில் பெண் குழந்தை பிறந்ததால், அதை வளர்க்க ஆகக்கூடிய செலவுகளைக் கருத்தில் கொண்டு நடிக்க வந்துள்ளார். ஆண் குழந்தை பிறந்திருந்தால் நடிக்க வந்திருக்க மாட்டேன் என்கிறார்.

இவர் முதலில் ஸ்பெஷல் நாடகத்தில் பங்கேற்று, தொடர்ந்து நடித்தும் வருகிறார். ஆண் நடிகரோடு நடிக்கும் போது சிக்கல் ஏற்பட வாய்ப்பு இல்லை என்கிறார். உடன் தர்க்கம் செய்யும் போது சமமாகப் பேசவேண்டும்; சமாளிக்க முடியவில்லை என்றால் பார்வையாளர்கள் குறை கூறுவார்கள். ஆண் நடிகர் பேசும் எல்லாவற்றிற்கும் பதில் கொடுக்க முடியாமல் சில நேரங்களில் திணறி இருக்கிறேன். ஆனால் வீட்டிற்கு வந்த உடனே

அதற்கு விளக்கம் கேட்டுத் தெரிந்து கொள்வேன். இப்போது அனுபவம் இருப்பதால் அதிக சிரமம் இல்லை என்கிறார். இவரும் இவருடைய கணவரும் நாடகம் நிகழ்த்த சேர்ந்து செல்வதால் குழுவினரிடையேயும் சுமுகமாக நடந்து கொள்கின்றனர்.

இவர் 'வள்ளித் திருமணம்' மட்டும் நடிக்கின்றார். வேறு கதைகளில் நடிப்பது இல்லை. வள்ளி பாத்திரம் மட்டும் செய்து கொண்டிருக்கின்றார். இப்பாத்திரம் ஏற்றால்தான் ஆண் நடிகரைத் தொட்டு நடிக்கத் தேவை இல்லை. எனவேதான் வள்ளிப் பாத்திரத்தில் மட்டும் நடிக்கின்றேன் என்கிறார். ஒப்பனையை இவருடைய விருப்பத்திற்காகவே செய்து கொள்கின்றார். அதைப் பார்வையாளரின் இரசனைக்கு ஏற்றபடி செய்து கொள்கின்றார். இவருக்குப் பிடித்த கதையம்சம், புராணம். புராணக்கதைகளை ஓய்வு நேரங்களில் படிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார். பெண் பாத்திரங்களை ஏற்கும்போது பாத்திரத்தன்மை மனத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படுத்துவதில்லை என்கிறார்.

இந்திரா, கே.ஆர்.
வயது 36

9, நன்மைதருவார் கோயில் தெரு,
மதுரை - 1.

இவர் ஐந்து வயதில் நாடகத்தில் பங்கு பெற்றுள்ளார். கணவர் நாடக அமைப்பாளராகவும் அச்சகராகவும் உள்ளார். இவர் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர். இவர் செட்டியார் இனத்தைச் சேர்ந்தவர். கணவர் முக்குலத்தேவர். தந்தையும் தாயும் நாடகக்கலைஞர்கள். நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் குடும்பச் செலவுக்குப் போதுமானதாக உள்ளதாம். ஏற்கனவே தாய்தந்தை நாடகக் கலைஞர் என்பதாலும் கணவர் நாடக அமைப்பாளராக இருக்கின்ற காரணத்தினாலும் நடிகர் என்ற முறையில் குடும்பத்தில் சிக்கல் ஏற்படுவதில்லை என்கிறார்

நாடகத்தில் நடிக்கும் பெண்கள் என்றாலே எல்லோரும் ஒரு மாதிரியாகத்தான் நினைக்கிறார்கள். சாதாரணமான குடும்பப்பெண்ணுக்கும் எங்களுக்கும் வித்தியாசம் இருக்கின்றது. அலங்காரம் செய்து கொள்வது, வீட்டு வாசலில் நிற்பது, கணவருடன் பேசுவது போன்ற சமயங்களில் நிதானமாகக் கையாள வேண்டி உள்ளது. யோசித்தும் செய்ய வேண்டி உள்ளது. சற்று வித்தியாசமாகப் பட்டால் 'அவள் நாடகக்காரி; அப்படித்தான் இருப்பாள்' என்று கூறி விடுகின்றனர். நாடகத்தின் மூலம் பணம் போதுமான அளவிற்குக் கிடைக்கிறது. வேறு வேலையில் அதிகப் பணம் கிடைக்கும் என்றாலும் அதற்குப் போக முடியாது. இது மனத்திற்குப் பிடித்து விட்டதுமல்லாமல் பழகியும்போய்விட்டது. இந்த வாழ்க்கைமுறையை விட்டு வேறு மாதிரியாக இருக்கவும் முடியாது என்கிறார்.

நாடகத்தில் ஏற்கும் பாத்திரங்கள் நிஜவாழ்க்கையில் பாதிக்கவில்லை. நடிப்பது வேறு; குடும்பம் வேறு. இரண்டையும் பொறுத்திப் பார்க்க முடியாது; பார்க்கவும் கூடாது என்கிறார். நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் இவருடைய விருப்பத்திற்கே செலவு செய்கின்றார். பணம் சம்பாதிப்பதில் வேறு வகையில் சிக்கல் இருக்கிறது. கணவரிடமோ மற்றவரிடமோ எதிர்த்துப் பேசினால் பணம் சம்பாதிக்கும் திமிரில் இப்படிப் பேசுகின்றாள் என்று கூறுகின்றனர். எதையும் சில கட்டுப்பாடுகளுக்குள் செய்தால்தான் பிரச்சனை இல்லாமல் இருக்கின்றது என்கிறார்.

நாடக ஒப்பந்தம் கணவர் கவனித்துக் கொள்வதால் ஒப்பந்தத்தில் இவருக்குச் சிக்கல் ஏற்படுவதில்லை. வெளியூர்களுக்குக் குழுவினராகச் செல்வதால் பாதுகாப்பிற்காக யாரும் உடன் வர வேண்டிய தேவை இல்லை என்கிறார். ஒருசில கிராமங்களுக்குக் கணவர் வருவார். மற்ற நேரங்களில் அவசியம் இருக்காது என்கிறார். நாடகம் நிகழ்த்தும் பகுதியிலும் பொதுவாகச் சிக்கல் ஏற்படுவதில்லையாம்.

நாடகம் தொடர்பானவை :

நடிப்பு இவரே விரும்பித் தேர்ந்தெடுத்துக் கொண்டது. இவரை நாடகத்தில் அறிமுகப்படுத்தி ஆசிரியராகவும் இருந்தவர் என்.எஸ். வரதராஜன் என்னும் ஆசிரியர். வீட்டில் படிக்க வைக்க முயற்சி செய்தும் நடிப்பது எனக்கு விருப்பம் என்பதால் நடிக்க முடிவு செய்தேன் என்கிறார். தற்போது ஸ்பெஷல் நாடக வடிவத்தில் புகழ்பெற்ற நடிகராக உள்ளார். இவர் ஏற்கும் பாத்திரங்கள் எல்லாம் பிடித்தமானவையாம். ஆனால் வள்ளித்திருமணம் நாடகம் இவர் அதிகமாக நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். தற்போது வள்ளி பாத்திரம் இவருக்குப் பிரபலமானவை. இவர் ஆண் பாத்திரம் ஏற்றது இல்லை. குழுவில் நடிப்பு அல்லாத பிற வேலைகள் செய்வது இல்லை. அதற்கு அவசியமும் இல்லை என்கிறார்.

நடிப்பின்போது சிக்கல் ஏற்படுவது நாடகத்திற்கே பொதுவானது. உடன் நடிக்கும் ஆண் நடிகர்கள் சிலர் முரட்டுத் தனமாக நடந்து கொள்வார்கள். சிலர் போட்டியாக நினைத்து அதற்கு ஏற்றாற்போல் நடந்து கொள்வார்கள். இவைகளைச் சமாளிப்பதுதான் நடிகரின் திறமை என்கிறார். மேடையில் நிகழ்த்தும் ஒவ்வோர் அசைவுக்கும் பாட்டுக்கும் வசனத்துக்கும் பார்வையாளர்கள் ஒரு கருத்து (அர்த்தம்) வைத்துப் பார்ப்பார்கள். சோகப் பாட்டுப் பாடினால் இன்றைக்கு இந்திராவுக்கு (எனக்கு) வீட்டில் சோகம் போல் இருக்கிறது என்றும்; மகிழச்சியான பாடல் அதிகம் பாடினால் இன்றைக்கு மகிழச்சியாக இருக்கிறேன் என்றும் கூறுகின்றனர். ஆகையால் மேடையில் கவனம் தேவை; பார்வையாளர்களை மறந்துவிடக்கூடாது என்கிறார். பார்வையாளர்களுக்கென்று ஒரு கணிப்பு உண்டு. இந்தக் கணிப்பு நடிகரைப் பற்றிய தவறான கருத்தாக இருக்காமல் நடந்து கொள்வதுதான் சிக்கல் என்கிறார்.

சக நடிகர்களின் ஒத்துழைப்பு நம்மைப் பக்குவப்படுத்தும். பெண் பாத்திரம் என்பதால் ஒப்பனை செய்வதற்குத் தாமதமாகும். ஆனால் அதற்குள் பக்கவாத்தியங்களை ஆரம்பித்து விடுவார்கள்.

சில நேரங்களில் நமக்கு முன்னர் மேடையில் தோன்றி நடிப்பவர் நாம் ஒப்பனை செய்யும் வரை மேடையிலேயே நிகழ்த்திக் கொண்டிருக்காமல் உள்ளே வந்து விடுவார்கள். அந்த நேரம் பெரும் சிக்கலாக அமையும். நாம் அவசர அவசரமாக மேடைக்கு ஓட வேண்டி இருக்கும். ஒருசிலர் புரிந்து கொண்டு ஒத்துழைப்பர். ஆண் நடிகர்களோடு சேர்ந்து நடிக்கும்போது கவனமாக நடிக்க வேண்டும். இல்லை என்றால் பார்வையாளர்கள் தவறான கண்ணோட்டத்துடன் பார்ப்பார்கள். குழுவினரே தவறாக எண்ண வாய்ப்பு உண்டு. இவை நடிகருக்கு ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள்; எனக்கும் இந்நிலைதான் என்கிறார்.

பார்வையாளர்கள் எந்த நேரத்திலும் எதையும் செய்வார்கள் என்ற நினைப்பில் இருக்க வேண்டும். நடிகைகளின் அழகு, இளமை, உடல் வண்ணம், குடும்பமுறை இவை எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கின்றனர். திருமணம் ஆனவருக்கு மதிப்பு குறைவு; அதிலும் குழந்தை பெற்றுவிட்டால் இன்னும் மதிப்பு குறைந்துபோய் விடுகிறது. 50 வயது ஆனாலும் அவருக்குத் திருமணம் நடக்காமல் இருக்க வேண்டும் என்று நினைக்கின்றனர் என்கிறார்.

பெண்கள் கவர்ச்சிக்காகத்தான் நடிக்கின்றார்கள் என்பது தவறான கருத்து என்கிறார். ஆண் நடிகர்கள் பெண் பாத்திரங்களை ஏற்பது இல்லை. போட்டிக்காகவும் பார்வையாளரின் ஆதரவைத் தொடர்ந்து பெற வேண்டியும் கவர்ச்சியாக நடிக்க வேண்டி உள்ளது என்கிறார்.

இரத்தினம்மாள், பி.எல்.என்.
வயது 64

25, காமராஜர்புரம்,
13ஆம் வீதி,
புதுக்கோட்டை - 620 001.

இவருடைய கணவர் உயிருடன் இல்லை. கணவர் பிரபல இசை நாடக நடிகர். இவர் தற்போது உடலாலும் பொருளாதாரத்தாலும் நலிவுற்று இருக்கின்றார். தனியாக வாழ்ந்து வருகிறார்.

தொடக்கத்தில் நாடகத்தின் மூலம் வரும் பணம் குடும்பச் செலவுகளுக்குப் போதுமானதாக இருந்துள்ளது. இவரும் இவருடைய கணவரும் நாடகத்தில் பங்கேற்றதால் வருமானம் போதிய அளவுக்கு மேலேயே கிடைத்திருக்கிறது. இவருடைய கணவர் நாடக நண்பர்களை சொந்தமாகத் தன் வீட்டிலேயே தங்க வைத்து, உணவு உடை இவைகளையும் கொடுத்து ஆதரித்து வந்துள்ளார். கணவர் இறந்ததிலிருந்து இவர் நாடகம் நடிப்பதை நிறுத்திக் கொண்டார். அது முதலே வருமானம் குறைந்து பொருளாதாரத்தில் குடும்பம் பாதிக்கப்பட்டு வந்துள்ளது.

நாடகம் நடிப்பதால் குடும்பத்தில் பிரச்சனை இருந்ததில்லை. கணவர் பிரபலமான நடிகர்; நாடக ஆசிரியர் என்பதனாலும் நாடகத்தில் பங்குபெற்றதாலும் பணம் ஓரளவிற்குக் கிடைத்ததால் குடும்பம் சிக்கல் இல்லாமல் இருந்தது என்கிறார். ஊரில் உள்ளவர்கள் இவர்கள் பிரபலமானதால் இவர்களுடன் மரியாதையோடு பழகுவார்களாம். நாடகம் நடிப்பதால் குழந்தை வளர்ப்பு முறை பாதிக்காது. அது பெற்றோர்களைப் பொறுத்து அமையும். நாம் வீட்டில் இல்லாத போது உறவினர்கள் பாதுகாப்பாகக் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வார்கள். ஆனால் படிப்பில் கவனம் செலுத்த தாய் தனியாக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

நடிப்பது தொடர்பாகக் கணவருடன் சிக்கல் ஏற்பட்டதில்லை. பாடல்களை அடிமாற்றினாலோ, சாரீரம், தாளம் மாறினாலோ உடனே கேட்பார். அதற்குத் தனிப் பயிற்சியும் கொடுப்பார். 'வேறு எதிலும் கருத்துக் கூற மாட்டார் என்கிறார். என்னுடைய மகனை நாடகத்தில் நடிக்க வைக்க

விருப்பமில்லை. எனவேதான் ஓரளவிற்குப் படிக்க வைத்தேன். நாடகத்தால் கஷ்டம்தான் அதிகம் என்கிறார்.

நாடகத்தைவிட அதிகப் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்திருந்தால் நாடகத்தில் நடிப்பதை நிறுத்தி இருக்க மாட்டேன் என்கிறார். கணவருடன் சேர்ந்து நாடகத்தில் நடித்தது மகிழ்ச்சியாக இருந்தது. இதில் நல்ல புகழ் சம்பாதித்தோம்; வேறு எந்தத் தொழிலிலும் இது வராது என்கிறார். நாடகத்தில் வரும் பணம் முழுவதும் கணவரிடம் கொடுத்து விடுவார். எந்தச் செலவு இருந்தாலும் கணவரே கவனித்துக் கொள்வாராம். நாடக ஒப்பந்தம் கணவர் அல்லது குடும்ப நண்பர்கள் பார்த்துக் கொண்டனர். நாடகம் நிகழ்த்த வெளியூர் போகும்போது பாதுகாப்புக்கு யாரும் அவசியம் இல்லை. குழுவினரிடத்தில் அந்த அளவிற்கு ஒற்றுமை இருந்தது என்கிறார்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத் துறையில் அறிமுகப்படுத்தியவர் இவருடைய கணவர். நாடகத்தில் நடிப்பதை விரும்பியே தேர்ந்தெடுத்துள்ளார். இவருடைய சகோதரி சிவரஞ்சனி என்பவர் பிரபல நாடக நடிகை. அவரது நாடக நடிப்பே தனக்கு நாடக ஈடுபாடு வந்ததற்குக் காரணம் என்று கூறுகிறார்.

நடிப்பைக் கணவரிடமே முறையாகப் பயின்றுள்ளார். நாடகம் நிகழ்த்தி முடித்தவுடன் கணவர் சில விளக்கங்களையும் நுணுக்கங்களையும் கூறுவாராம். இசைப் பாடல்களைச் சுருதி சுத்தமாகவும் உணர்வு பூர்வமாகவும் கற்றுத் தந்தார் என்கிறார். இவர் முதலில் ஸ்பெஷல் நாடகத்தில் சேர்ந்து உள்ளார். சமூக நாடகங்களில் மிகக் குறைவாகவே பங்கேற்றுள்ளார். ஸ்பெஷல் நாடகங்களில் இவர் பிரபலமானவர். இதில் போதிய வருமானம் கிடைத்ததால் வேறு நாடக வடிவங்களுக்குச் செல்லவில்லை என்கிறார்.

ஆண் நடிகர்களோடு ஏற்படும் சிக்கல்கள் நடிகரைப் பொறுத்துத்தான் அமையும் அமைகிறார். ஆண் நடிகரோடு தர்க்கம் பேசும் போதும் கவனமாக இருக்க வேண்டும். எவ்வளவு எதிர்வாதம் செய்தாலும் மரியாதைக் குறைவான வார்த்தைகளைப் பேசக்கூடாது. என்ன இருந்தாலும் பெண் நடிகர் ஆண் நடிகரை இப்படிக் கேள்வி கேட்கக் கூடாது என்பார்கள். பெண் நடிகரை எப்படி வேண்டுமானாலும் பேசலாம். நாடகக் கதையோடு ஒட்டிய கருத்துதான் பேச வேண்டும், வேறு ஏதாவது பேசினால் அரங்கத்திலேயே கேள்வி கேட்பார்கள் என்கிறார்.

கணவர் நாடக நடிகர்களுக்குப் பயிற்சி அளிக்கக்கூடியராக இருந்ததனால், இவரை குழுவினர் மரியாதைக்குரியவராக நடத்தி இருக்கிறார்கள். நடிகர்களுக்கு ஏதாவது குறை என்றால் இவருடைய கணவர் உதவுவதால், குழுவினர் மத்தியில் இவர்களைப் பற்றிய மதிப்பீடு உயர்வாகவே இருந்துள்ளது. இவருக்கு ஸ்திரீபார்ட் பாத்திரங்கள் கதைக்கு ஏற்றபடி கொடுத்துள்ளனர். எந்தப் பாத்திரம் கொடுத்தாலும் நடிப்பேன்; அதில் தனிக் கவனம் செலுத்தி நடிப்பேன் என்கிறார்.

இவருக்குப் பிடித்த கதையம்சம் புராணம். நல்லதங்காள், அல்லி அர்ச்சுனா, பவளக்கொடி, வள்ளித் திருமணம், சத்தியவான் சாவித்திரி போன்ற கதைகள் இவருக்குப் பிடித்தமானவைகளாம். இவர் நடித்த அதிக நாடகங்களும் இக் கதைகளைத்தான். இவர் ஆண் பாத்திரங்களை ஏற்றதில்லை.

நடிப்பின்போது ஏற்படும் சிக்கல் குழுவினரால் வராது. கவனக் குறைவாலும் அனுபவக் குறைவாலும் வருவதாகும். உடன் நடிக்கும் நடிகரின் கருத்தை மனத்தில் வாங்காமல் இருக்கும்போதும் தாளத்தைக் கவனிக்காமல் இருக்கும் போதும் சிக்கல் ஏற்படும். இதைப் பார்வையாளருக்குத் தெரியாதபடி சமாளிக்கலாம். பார்வையாளருக்கு ஏற்றபடி நம்முடைய நடிப்பை அமைத்துக் கொண்டால் பார்வையாளரிடத்திலும் சிக்கல் இருக்காது என்கிறார். பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காக என்பது எங்கள் காலத்தில் இல்லை; இப்போது கவர்ச்சி இல்லை என்றால் பெண் நடிகர்கள் இல்லை என்கிறார்.

இராஜேஸ்வரி, கே.பி.
வயது 22

29, 7ஆம் வீதி,
போஸ் நகர்,
புதுக்கோட்டை.

இவர் திருமணம் ஆகாதவர். தந்தை நாடக அமைப்பாளராகவும் தமக்கை நாடக நடிகராகவும் உள்ளனர். நாடகத்தின் மூலம் வரும் பணம் குடும்பத்திற்குப் போதுமானதாக இருக்கிறது என்கிறார். நாடகம் நடிப்பதால் குடும்பத்தில் பிரச்சனை ஏற்படுவது இல்லை. காரணம், இன்னும் திருமணம் ஆகவில்லை. தந்தை நாடக அமைப்பாளராக இருப்பதால் நாடகம் நடிக்கப்படும் சூழ்நிலை எல்லாம் தெரியும். வீட்டில் உள்ளவர்களும் நடிப்பதைப் பற்றி எதுவும் பேசுவதில்லை என்கிறார்.

நாடகத்தில் நடிப்பதைப்பற்றி ஊரில் உள்ளவர்கள் என்ன சொல்கின்றார்கள் என்று தெரியாது. ஆனால் நாங்கள் பணம் சம்பாதிக்கின்றோம் என்று பொறாமைப் படுபவர்கள் இருக்கின்றார்கள். நாடகம் நடிப்பதைத் தொழிலாக நினைப்பதால் இதைப்பற்றிக் குறை கூறினாலும் பரவாயில்லை என்கிறார்.

இவருடைய குழந்தைகளை நாடகத்தில் நடிக்க வைக்கும் எண்ணம் இல்லை என்கிறார். நாடகத்தைவிட வேறு நல்ல தொழில் கிடைத்தால் நாடகத்தில் நடிப்பதை நிறுத்தி விடுவாராம். நாடகத்தில் இவர் நடனம் ஆடும் பாத்திரம் ஏற்பதால், நாடகப் பாத்திரங்களைப் பற்றி எதுவும் கருத்துக் கூறுவதற்கு இல்லை என்கிறார்.

நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் முழுவதும் கணவரின் விருப்பத்திற்காகவே செலவு செய்வது மற்ற நடிகர்களுடைய வாழ்க்கை. ஆனால் எனக்கு அப்படி இல்லை. என் தந்தை நாடகப் பொறுப்புகளை கவனித்துக் கொண்டாலும் பணம் செலவு செய்வதில் கேள்வி கேட்பதில்லை. என் விருப்பத்திற்கேற்பச் செலவு செய்தாலும் நான் ஆடம்பரச் செலவுகள் செய்வதில்லை.

நாடகம் நிகழ்த்த வெளியூர்களுக்குப் போகும்போது தந்தை உடன் வருவார். குழுவினரோடு செல்வதால் நாடகம் நிகழ்த்தப்படும் கிராமத்தில் சிக்கல் ஏற்பட்டது இல்லை என்கிறார்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத்தில் அறிமுகப்படுத்தியவர் இவருடைய தந்தை. நடிப்பை விரும்பித் தேர்ந்தெடுக்கவில்லை. இப்போது உள்ள தொழிலில் நாடகத்தில்தான் குடும்பத்திற்குப் போதுமான வருமானம் கிடைக்கின்றது. ஆகையால்தான் நாடகத்தில் நடிக்கின்றேன் என்கிறார்.

நடிப்பது, பாடல் பாடுவது என்று இன்னும் எவரிடமும் முறையான பயிற்சி எடுக்கவில்லை. இவருடைய சகோதரி ஏற்கனவே நடனம் ஆடுபவராக இருப்பதனால், அவரிடமே நடனம் ஆடுவது பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்கிறார். திரைப்படப் பாடல்களை அவ்வப்போது பாடம் செய்து கொள்வதால், மேடையில் இயல்பாக இருக்க முடிகிறது என்கிறார். இவர் முதலில் ஸ்பெஷல் நாடகக்குழுவில் சேர்ந்து தற்பொழுதும் இவ்வடிவத்தில் நடித்து வருகின்றார்.

ஆண் நடிகர்களோடு நடிப்பது தொடர்பாகச் சில நேரங்களில் சிக்கல் ஏற்படும். இது உடன் நடிக்கும் பபூன் பாத்திரம் நடிப்பவர் மூலமாக ஏற்படும். திரைப்படப் பாடல்களைப் பாடும்போது சில நேரங்களில் பார்வையாளர்களுக்குப் பிடித்த வகையில் நடிப்பது சிக்கலானது. பார்வையாளர்கள் திரைப்படத்தில் நடனம் ஆடுவது போன்று எதிர்பார்ப்பார்கள். அதே போல் பபூன் பாத்திரம் செய்யக்கூடியவரின் நடன அசைவுகளுக்கு ஏற்றபடி பெண் நடிகரும் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். இதில் ஆண் நடிகர் செய்வது போல் பெண் நடிகரால் செய்ய முடியாது என்கிறார்.

குழுவில் இருப்பவரிலேயே இவர் சிறுவயதினராக இருப்பதனால் கலைஞர்களிடம் பழகுவதில் வேறுபாடு இல்லை. இவர் தந்தை நாடக அமைப்பாளராக இருப்பதனால் சிறு வயதிலிருந்து பெரும்பாலான கலைஞர்களிடம் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் குழுவினரிடம் இயல்பாகப் பழக முடிகிறது என்கிறார்.

உஷாராஜ்
வயது 42

30டி, மதுராந்தோட்டத் தெரு,
காஞ்சிபுரம்.

இவர் ஆறு வயதில் நாடகத்தில் நடிக்க வந்துள்ளார். மலையாள நாடார் இனத்தைச் சேர்ந்தவர். கலப்புத் திருமணம் செய்து கொண்டுள்ளார். கணவர் நாடக அமைப்பாளராக உள்ளார்.

நாடகத்தின் மூலம் வரும் பணம் குடும்பச் செலவுகளுக்குப் போதவில்லை என்கிறார். நிரந்தரமாகத் தொழில் இருந்தால் குடும்பத்தைச் சுலபமாக நடத்தலாம். இப்போது உள்ள நாடகச் சூழ்நிலையில் நாடகம் நடத்திக் குடும்பத்தை நடத்துவது கடினமான செயல் என்கிறார். நாடகம் நடிப்பதால் குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டது இல்லை. காரணம் கணவரும் நாடகக்கலைஞர்களைச் சார்ந்தவர் என்பதால், நடிப்பது தொடர்பாகவும் நாடகத்தில் பங்கு பெறுவது தொடர்பாகவும் சிக்கல் ஏற்பட்டதில்லையாம்.

நாடகத்தில் பங்கு பெறுவது தொடர்பாக ஊரில் என்ன சொல்கின்றார்கள் என்பதைப் பற்றிக் கவலை இல்லை என்கிறார். நாடகம் நடிப்பதால் குழந்தை வளர்ப்புமுறை பாதிக்கின்றது. இரவில் நாடகம் ஆடிவிட்டுப் பகலில் தூங்கி விடுவதால் குழந்தைகளைக் கவனிக்க முடிவதில்லை. என்னுடைய மகனையும் மகளையும் படிக்க வைக்க முடியாமல் போனதற்கு நாடக வாழ்க்கையும் ஒரு காரணமாக ஆகிவிட்டது என்கிறார்.

நாடகத்தைவிட அதிகப் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்திருந்தால் நாடகத்தில் நடித்திருக்க மாட்டேன். குடும்பச் சூழ்நிலை காரணமாகத்தான் அனைவரும் நாடகத்திற்கு நடிக்க வருகின்றார்கள் என்கிறார். நாடகத்தில் ஏற்கும் பாத்திரம் நிஜ வாழ்க்கையில் பாதிக்கவில்லை. நாடகத்தில் கற்பனைக் கதைகள் நடைமுறையில் இருந்து வேறுபட்டு அமைந்திருக்கும். எனவே இவை பாதிக்கச் செய்வதில்லை என்கிறார். நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணத்தைக் கணவரிடம் கொடுத்து விடுகிறார். கணவர் குடும்பத்தைக் கவனித்துக் கொள்வார். அதில் எனக்கு எந்தப் பங்கும் இல்லை என்கிறார்.

நாடக ஒப்பந்தம் என்னுடைய விருப்பத்திற்காக நடக்காது; குழு முதலாளி அல்லது ஆசிரியர் மூலமாகத்தான் நடைபெறும். குழுவில் இருக்கும் வரைக்கும் குழுவிற்குக் கட்டுப்பட்டு நடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்கிறார்.

நாடகம் நிகழ்த்தும் பகுதிக்குச் செல்லும்போது பாதுகாப்பிற்காகக் கணவர் வருவார். இல்லையென்றால் பஸ் நிலையத்தில் நடிகர்கள் ஒன்றுகூடிச் செல்வோம். பெரும்பாலான கிராமங்களில் ஏற்கனவே நாடகம் நிகழ்த்திப் பழக்கப்பட்டமையால் சிரமம் இல்லாமல் இருக்கும். சில கிராமங்களுக்கு பஸ்ஸில் இருந்து இறங்கி இரண்டு மூன்று கிலோமீட்டர்கள் நடந்து செல்ல வேண்டி இருக்கும். இது போன்ற பகுதிகளுக்குச் செல்வதுதான் கடினமாக இருக்கும் என்கிறார்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத் துறையில் அறிமுகப்படுத்தியவர் இவருடைய தந்தை. நடிப்பை, தொழிலுக்காகத் தேர்ந்தெடுத்துள்ளார். ஆறு வயதில் நாடகத்தில் நடிக்க ஆரம்பித்துள்ளார். "அமெச்சூர் நாடகங்களில் முதலில் நடித்துக் கொண்டிருந்தேன். பிறகு நாவல்ஸ் நாடகத்திற்கு வந்தேன். கதிர்வேலு நாடகக் கம்பெனியில் முதன் முதலில் நடித்தேன்" என்கிறார். ஆண் நடிகர்களோடு நடிக்கும் போது சிறிய வயதுப் பெண் நடிகர்களுக்குச் சிக்கல் இல்லை. ஆனால் நடுத்தர வயது உடையவர்களுக்குத்தான் சிக்கல் உண்டாகிறது என்கிறார். பொதுவாகப் பெண் நடிகர்களுக்கு வில்லன் பாத்திரத்துடன் துன்பப்படும் பாத்திரமும், கதாநாயகனுடன் காதல் நடனம் ஆடும் பாத்திரமும் கொடுப்பார்கள். திரைப்படப் பாடலை நம் விருப்பத்திற்கு ஏற்றபடி பாடிவிடலாம். நடனத்தில்தான் பிரச்சனை இருக்கும். கட்டிப் பிடிப்பது, ஒன்றாகச் சேர்ந்து ஆடுவது இவைகளைச் செய்வதற்கு ஆரம்பத்தில் தயக்கமாக இருக்கும். பிறகு எளிமையாக இருக்கும். உடன் நடிக்கும் ஆண் நடிகர் அதைத் தவறாகப் பயன்படுத்த நினைப்பார்.

வில்லன் பாத்திரம் ஏற்கும் ஆண் நடிகர், பெண் பாத்திரத்தைத் துன்புறுத்துவது போன்றுதான் அதிகமாக இருக்கும். இதை ஆண் நடிகர்கள் செய்யும் போது நடிப்பதில் சிக்கல் இருக்காது. சாட்டையால் அடி வாங்குவது, காலால் உதைப்பது இவைகளை ஆண் நடிகர் எளிதாக எடுத்துக் கொள்வார். பெண் நடிகர்கள் எளிதாக எடுத்துக் கொண்டாலும், வில்லன் பாத்திரம்

ஏற்பவர் பார்வையாளரிடத்தில் பாராட்டுப் பெற வேண்டி முரட்டுத்தனமாக நடந்து கொள்வார். இது பெண் நடிகர்களுக்கு மிகவும் கடினமானதாக இருக்கும் என்கிறார்.

குழுவினர் பழகுவதில் எந்த வித்தியாசமும் பார்ப்பதில்லை என்கிறார். குழுவைப் பொறுத்தவரையில் தொழிலில் பொறாமை இல்லை. ஒவ்வொரு நடிகருக்கும் இருக்கும் பிரச்சனைகளை மனம் விட்டுப் பேசிக் கொள்வோம் என்கிறார். இவருக்குச் சோகமான பாத்திரம்தான் அதிகமாகக் கொடுக்கின்றார்களாம். ஒப்பனை இவர் விருப்பத்திற்கேற்பதான் செய்து கொள்கிறார். ஒருசில நேரங்களில் குழுவினர் ஒப்பனை தொடர்பாகக் கருத்துக் கூறுவார்கள். அது மனத்திற்குச் சரி என்று பட்டால் அதன்படி மாற்றிக் கொள்வேன் அல்லது என் விருப்பப்படி செய்து கொள்வேன் என்கிறார்.

பிடித்த கதையம்சம் கற்பனைக் கதைகள். புராணக் கதைகளைவிட மக்கள் கற்பனைக் கதைகளைத்தான் அதிகம் இரசிக்கின்றார்கள். எங்களுக்கும் கற்பனைக் கதைகளை நடத்தி நடத்தி அதிலேயே விருப்பம் வந்து விட்டது என்கிறார். குழுவில் நடிப்பு அல்லாத பிற வேலைகளில் பங்கு கொள்வது இல்லை.

நடிப்பின்போது பெண் நடிகருக்குத்தான் நடைமுறைச் சிக்கல் அதிகம். பார்வையாளரின் இரசனைக்கு ஏற்றபடியும் நடிக்க வேண்டும். அதே சமயத்தில் கவர்ச்சி இல்லாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். இரண்டு பெண் பாத்திரங்கள் மேடையில் இருக்கும்போது (ஒருவர் ஆண் நடிகர், மற்றொருவர் பெண் நடிகர்) இரண்டு நடிகரும் பார்வையாளருக்காகப் போட்டி போட்டுக் கொண்டு நடிப்பார்கள். இதில் ஆண் நடிகர் எப்படி வேண்டுமானாலும் நடிக்கலாம். அவருக்குப் பிரச்சனை இல்லை. ஆனால் பெண் நடிகர்கள் எப்படி வேண்டுமானாலும் நடிக்க முடியாது. சில கட்டுப்பாடுகளுடன் நடிக்க வேண்டும் என்கிறார். பெண் பாத்திரம் ஏற்றிருக்கும் ஆண் நடிகர் மார்புத் துணியை விலக்கிக் கொண்டு இயல்பாகப் பேசிக்கொண்டு இருப்பார். பெண் நடிகரால் அப்படிச் செய்யமுடியாது என்கிறார். பெண் நடிகரின் செயல்பாட்டுக்கும் ஆண் நடிகரின் செயல்பாட்டுக்கும் அதிக வித்தியாசம் இருக்கும். பெண் பாத்திரம் ஏற்றிருக்கும் ஆண் நடிகர், கதாநாயகனுடன் காதல் காட்சிகளை நடித்துக் காட்டும் போது, மடியில் படுத்தல், கட்டிப் பிடித்தல், முத்தம் கொடுத்தல் போன்றவைகளின் மூலமாகப் பார்வையாளர்களை

உற்சாகப்படுத்துவார். இதைப் பெண் நடிகரால் செய்ய முடியாது. கதாநாயகனாகக்கணவன் இருந்தாலும் இதுபோன்ற செயல்களைப் பெண் நடிகரால் செய்ய முடியாது என்கிறார்.

பெண் நடிகர் கவர்ச்சிக்காகத்தான் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்ற கருத்து உண்மைதான் என்கிறார். பெண் நடிகர் இருக்கும் குழு பிரபலமான குழுவாகவும் இருக்கிறது. நாடகம் நிகழ்த்தக் கேட்பவர்களும் குழுவில் பெண் நடிகர்கள் இருக்கின்றார்களா என்று விசாரித்த பிறகுதான் நாடகம் ஒப்பந்தம் செய்கிறார்கள். இப்போது உள்ள சூழ்நிலையில், பெண் நடிகரின் கவர்ச்சியினால்தான் குழு இயங்கிக் கொண்டுள்ளது என்று கூறினாலும் தவறாகாது என்கிறார்.

கங்கா
வயது 18

ராஜகோபாலபுரம்,
வடமாம்பாக்கம் அஞ்சல்,
அரக்கோணம் தாலுக்கா,
வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம்.

இவர் பத்து வயதிலிருந்து நாடகத்தில் நடித்து வருகிறார். காட்டு நாயக்கர் இனத்தைச் சேர்ந்தவர். திருமணம் ஆகாதவர். தந்தை நாடக ஆசிரியர்.

நாடகத்தின் மூலம் வரும் பணத்தைத் தந்தையிடம் கொடுத்து விடுகிறார். நாடகம் நடிப்பது தொடர்பாகக் குடும்பத்தில் பிரச்சனை இல்லை. இவருடைய தந்தையும் சிறிய தாயும் நாடக நடிகர்கள். எனவே இவருக்கு நாடகத்தில் நடிப்பது சாதாரணமான தொழில் ஆகிவிட்டது என்கிறார். இவர் நாடகத்தில் பங்கு பெறுவது குறித்து ஊரில் ஏதும் நினைக்கவில்லை. பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போதுதான் தொந்தரவாக இருந்துள்ளது. பாடம் நடக்கும் போது உறங்கிக் கொண்டிருப்பேன். ஆசிரியர் பள்ளிக்கு வர வேண்டாம் என்று கூறுவார். மாணவர்கள் நாடகத்தில் நடிக்கத் தன்னையும் அழைத்துப் போகும்படி கூறுவார்கள். நான் நாடகத்தில் நடிப்பதால் என்னை நண்பர்களும் மற்றவர்களும் தவறாகக் கருதவில்லை. பெருமையாகத்தான் கருதுகின்றார்கள் என்கிறார்.

இவர் நடிப்பது தொடர்பாகத் தந்தையிடமோ அல்லது தாயாரிடமோ சிக்கல் ஏற்படுவதில்லை. நான் மேடையில் இருக்கும்போது என் தந்தை என்னைக் கவனிப்பது கூட இல்லை. நானும் அப்பா இருக்கின்றாரே என்று தயங்கியும் பயந்தும் நடிப்பதில்லை. என்னால் முடிந்தவரைக்கும் நல்ல முறையில் நடிப்பேன் என்கிறார். நாடகத்தைவிட அதிகம் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்தால் நாடகம் நடிப்பதை நிறுத்தி விடுவேன் என்கிறார். இப்போதே வேறு வேலைக்கு முயற்சி செய்து கொண்டு இருக்கின்றார். நாடகத்தில் ஏற்கும் பாத்திரங்களை வீட்டில் நினைத்துப் பார்ப்பதில்லை என்கிறார். திரைப்படப் பாடல் பிரபலமானது என்றால் அதை நாடகத்தில் பாடுவதற்காக, தனியாக இருக்கும்போது பாடுவதற்குப் பயிற்சி எடுத்துக் கொள்வாராம்.

நாடக ஒப்பந்தம் இவருடைய தந்தையின் விருப்பத்திற்கேற்ப நடக்கின்றது. நாடகக் குழுவினர் அனைவருக்கும் குழு முதலாளி அல்லது ஒப்பந்தக்காரர் மூலமாக ஒப்பந்தம் நடைபெறும். நடிகர் விரும்பவில்லை என்றால் முதலிலேயே கூறிவிட வேண்டும். இவருடைய தந்தையும் சிறிய தாயாரும் இவருடன் நடித்து வருவதால் பாதுகாப்பாகவும் இருக்கின்றார்கள். நாடகம் நடத்த வெளியூர்களுக்குப் போகும்போது மூன்று பேர்களும் ஒன்றாகச் செல்கின்றார்கள். பயணம் தொடர்பாகவும் பிரச்சனை இல்லை என்கிறார்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத்தில் அறிமுகப்படுத்தியவர் இவருடைய தந்தையார். நடிப்பு விரும்பி சேர்ந்தேன். தந்தையின் விருப்பப்படி என்றாலும், எனக்கு நாடகம் வேண்டாமென்று கூறினால் தந்தையும் நடிப்பதை நிறுத்திக் கொள் என்று கூறுவார். ஆனால் தற்போது உள்ள சூழ்நிலைக்கு நாடகம் எவ்வளவோ பரவாயில்லை என்கிறார்.

தொடக்கத்திலிருந்தே நாவல்ஸ் நாடக வடிவத்தில் நடித்துக் கொண்டு வருகிறார். ஆண் நடிகர்களோடு நடிக்கும்போது சிக்கல் ஏற்படுவதில்லை. கட்டியக்காரன் பாத்திரத்தோடு செய்யும் போது கவனமாக நடிக்க வேண்டும். காரணம், கட்டியக்காரன் பாத்திரம் நடிப்பவர் அனுபவம் பெற்றவராகவும் திறமை உள்ளவராகவும் இருப்பார். அவருக்கு ஒத்துழைப்புக் கொடுத்து நடிக்க வேண்டும் என்றால், கவனமாக நடிக்க வேண்டும் என்கிறார்.

குழுவில் இருப்பதில் சிறிய வயதாக உள்ளவர் என்பதால், இவரிடம் குழுவினர் அன்பாக நடந்து கொள்கின்றனர். பழகுவதிலும் வித்தியாசம் பார்ப்பதில்லை. குழுவில் சலுகைகளில் இவருக்கு முன்னுரிமை கொடுக்கின்றனர். நடு இரவில் இவருடைய காட்சி இல்லாத சமயங்களில் அரங்கத்தில் உறங்கும்போது குழுவினர் இடையூறு செய்வதில்லை என்கிறார்.

தற்போது இவருக்கு தோழிப் பாத்திரம், நடனம் ஆடும் பாத்திரம், சிறுவயதுள்ள ஆண் பாத்திரம் போன்றவை அதிகமாகக் கொடுக்கின்றனர். குழுவில் உள்ள கதைகளில் எந்தப் பாத்திரம் கொடுத்தாலும் செய்வேன் என்கிறார். குழுவில் நடிப்பு அல்லாத பிற வேலைகளில் பங்கு கொள்வதில்லை. நடிப்பின்போது நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுவது சாதாரணம். அதைச் சமாளிப்பதும் பழகிப் போய்விட்டதாகக் கூறுகிறார். ஒரு நாடகத்தில் காளி பாத்திரம் ஏற்று நடித்துக் கொண்டிருக்கும்

போது, பார்வையாளர்களுக்குச் சாமி ஆடிக் கொண்டிருந்தது. சில பார்வையாளர்கள் மேடைக்கே சாமி ஆடிக்கொண்டு வந்தார்கள். ஒரு பார்வையாளர் காளிக்கு இரத்தபலி வேண்டும் என்று கூறியதும் நாடகம் ஏற்பாடு செய்தவர்கள் ஒரு கோழியை இவரிடம் கொடுத்து விட்டிருக்கிறார்கள். காளி பாத்திரம் ஏற்றிருப்பவர் கோழியைப் பல்லால் கடித்துக் கோழியின் தலையைத் துண்டித்து போடுவது வழக்கமாக நடைபெறுவது. இவரிடம் கோழியைக் கொடுத்ததும் கோழியை வாய்க்கருகில் எடுத்துப் போகும் போதே குமட்டல் வந்திருக்கிறது. பல்லால் கடிக்க முடியவில்லை. பார்வையாளர்கள் கண்டிப்பாக காளி பாத்திரம் போட்டுள்ளவர்தான் கோழியைப் பலியாகக் கொடுக்க வேண்டும் என்று கூறிவிட்டார்கள். என்ன செய்வது என்று புரியாமல் இருந்தபோது, கட்டியக்காரன் பாத்திரம் ஏற்றவர் கோழியை வாங்கி, இப்படித்தான் கடிக்க வேண்டும் என்று கூறிக் கோழியின் தலையைத் துண்டித்துவிட்டிருக்கின்றார். பார்வையாளர்களும் சிரித்துவிட்டு கதையைத் தொடரச் சொல்லி இருக்கின்றார்கள். இது போன்ற புராணக்கதைகளை நிகழ்த்தும்போது நடைமுறைச் சிக்கல்கள் வரும் என்கிறார்.

பெண் பாத்திரத்தைப் பெண் நடிகர் ஏற்பதற்கும் ஆண் நடிகர் ஏற்பதற்கும் வித்தியாசம் இல்லை என்கிறார். நடனம் ஆடும் பாத்திரம் ஏற்பவர்கள் மட்டும், நடனம் ஆடுவதில் வித்தியாசம் காட்டுவார்கள். உடல் அசைவுகள் ஆபாசமாக இருக்கும். பெண் நடிகர்களால் அப்படிச் செய்ய முடியாது. அப்படிப் பெண் நடிகர் செய்தாலும் குழுவினரே வேண்டாம் என்று கூறி விடுகின்றனர். பார்வையாளர்கள் பெண் நடிகர் மேடையில் நின்றாலே போதும் என்று நினைக்கின்றார்கள். கதாநாயகி, ராணி போன்ற பாத்திரங்களை ஆண் நடிகரோ பெண் நடிகரோ யார் ஏற்றாலும் அதிகம் வேறுபாடு இல்லை என்கிறார்.

பெண் நடிகர் கவர்ச்சிக்காக நாடகத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்பதைச் சரி என்கிறார். ஆண் நடிகர்கள் எவ்வளவு ஆபாசமாக ஆடினாலும் பேசினாலும் அது மட்டும் பார்வையாளர்களுக்குத் திருப்தி அளிப்பதில்லை. ஆனால் ஒரு பெண் நடிகர் இருந்தாலே அக்குழு மற்றக் குழுவைக் காட்டிலும் பிரபலமாக உள்ளது. இதிலிருந்தே பெண் நடிகரின் பங்கு எதற்காக என்று புரிந்து கொள்ள முடியும் என்கிறார்.

கலாராணி, கே.ஆர்.
வயது 53

26/2, தடிகொண்ட அய்யனார் கோயில் தெரு,
தெற்கு பெரும்குளம்,
அய்யனார்புரம்,
புதுக்கோட்டை.

இவரது கணவர் நாடகக் கலைஞர். நாடகத்தின் மூலம் வரும் பணம் குடும்பச் செலவுகளுக்குப் போதவில்லை என்கிறார். நாடகத்தில் எவ்வளவு பணம் சம்பாதித்தாலும் அது நிரந்தரமாக நிற்காது. வாழ்க்கையும் வருமானத்திற்கு ஏற்றபடி அமைந்து விடுகிறது. வருமானம் வரும்போது சேமித்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் வராது. அதனால்தான் இப்போது சிரமப்படுகிறோம் என்கிறார்.

நாடகத்தில் நடிப்பதால் குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டதில்லை. நாடகத்தின் மூலம் வரும் வருமானத்தை வைத்துத்தான் குடும்பம் நடத்தி வந்தோம். நாடகத்தில் பங்கு பெறுவது தொடர்பாக வீட்டில் உள்ளவர்கள் கருத்துக் கூறமாட்டார்கள். நானும் நாடகம் தொடர்பானவைகளை வீட்டில் உள்ளவர்களிடம் பேசிக் கொள்வதில்லை என்கிறார். நாடகத்தில் நடிக்கும் பெண் நடிகர்கள் என்றாலே மற்றவர்கள் எண்ணம் தவறாகத்தான் இருக்கிறது. மற்றப் பெண்களுக்கு இருக்கும் மதிப்பு நாடகப் பெண்களுக்கு இல்லை. நாடகத்தில் நடிக்கும் பெண்களுடைய வாழ்க்கையும் அப்படி அமைந்து விடுகிறது. எப்படி நடந்து கொண்டாலும், அவள் நாடகக்காரி; அப்படித் தான் இருப்பாள் என்று கூறிவிடுகிறார்கள். நாடகத்தில் நடிக்கும் பெண்களைப் பற்றி மற்றவர்கள் இன்னும் தவறாகத்தான் நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்கிறார்.

நாடகத்தில் நடிப்பதால் குழந்தை வளர்ப்புமுறை பாதிக்கின்றது. நாடகத்தில் நடிப்பவர்களின் குழந்தைகள் பெரும்பாலும் படிப்பில் கவனம் செலுத்துவதில்லை. இந்நிலை பெற்றோர்களின் கவனக்குறைவால் ஏற்படுகிறது என்றாலும், இரவில் நாடகத்தில் நடிப்பது; பகலில் உறங்குவது என்று இருக்கும் சூழ்நிலையில் மற்றதில் கவனம் செலுத்த முடியாமல் போய்விடுகிறது என்கிறார்.

நாடகத்தில் நடிப்பதால் கணவருடன் சிக்கல் உண்டாவது இல்லை. நாடகத்தில் நடிப்பது பற்றிக் கணவர் கண்டித்தது இல்லை. என் விருப்பத்திற்கேற்பச் செயல்பட்டு வந்தேன். மகனையோ மகளையோ நாடகத்தில் நடிக்க வைக்க முயற்சிக்கவில்லை. இந்தத் தொழிலில் இருக்கும் பிரச்சனைகள் தெரிந்தும் எப்படிச் சேர்க்க முடியும் என்கிறார். நாடகத்தைவிட அதிகம் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்திருந்தால் நாடகத்தில் நடித்திருக்க மாட்டேன் என்கிறார்.

நாடகத்தில் நடிக்கும் பாத்திரங்கள் நிஜ வாழ்க்கையில் பாதிக்கவில்லை என்கிறார். நாடகத்தைப் பற்றி வீட்டில் நினைத்தும் பார்ப்பதில்லை. எந்தக் கதை, எந்த வேஷம் இருந்தாலும் மேடையோடு சரி என்கிறார். நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் இவர் விருப்பத்திற்கேற்றபடி செலவு செய்து கொள்கிறார். குடும்பப் பொறுப்புகளையும் இவரே கவனித்துக் கொள்கிறார். நாடக ஒப்பந்தம் சில நேரங்களில் கணவர் கவனித்துக் கொள்கிறார் அல்லது நாடக அமைப்பாளர்களே நேரடியாகப் பேசிக் கொள்கிறார்கள்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத்தில் அறிமுகப்படுத்தியவர் இவருடைய தந்தையார். கணவர் சங்கத்தில் உறுப்பினராக்கி நிரந்தரமாக்கியுள்ளார். நடிப்பை, தொழிலுக்காகத் தேர்ந்தெடுத்துள்ளார். பன்னிரெண்டு வயதில் இருந்து நடித்து வருகிறார். முதலில் ஸ்பெஷல் நாடக வடிவத்தில் பங்கேற்றுத் தொடர்ந்து இவ்வடிவத்திலேயே பங்கு பெற்றுள்ளார்.

பெண் நடிகர்களுக்கு ஆண் நடிகர்களோடு ஏற்படும் சிக்கல்கள் பார்வையாளர்களுக்கோ அல்லது மற்ற நடிகர்களுக்கோ தெரியாது. பெண் நடிகர்களுக்கு இரண்டு விதமான சிக்கல்கள் இருக்கின்றன. திருமணம் ஆன பெண் நடிகராக இருந்தால் கணவர் மூலமாக ஏற்படும் சிக்கல்தான் அதிகம். உடன் நடிக்கும் வேறு ஓர் ஆண் நடிகரிடம் பேசுவது, பார்ப்பது இவைகளில் பிரச்சனை இருக்கின்றது. உடன் நடிக்கும் ஆண் நடிகர் நம்மைத் தொட்டாலும் கணவர் அதே குழுவில் இருந்தால் என்ன நினைக்கிறார்களோ என்ற பயம் வருகின்றது. சில நேரங்களில் நடிப்போடு ஒன்றி நடிக்கும் போது நாடகம் முடிந்ததும் அவனை ஏன் அப்படி பார்த்தாய், ஏன் இப்படித் தொட்டு நடித்தாய் என்ற

கேள்விகளைக் கணவர் கேட்பார். இது எனக்கு மட்டும் இல்லை; பெரும்பாலான பெண் நடிகர்களுக்கு ஏற்படும் சிக்கல் என்று நினைக்கிறேன் என்று கூறுகிறார். இரண்டாவது பிரச்சனை, நமக்குப் பிடிக்காதவைகளை ஆண் நடிகர் செய்வது. ஆண் நடிகரின் விருப்பத்திற்குத் தொடுவது, தர்க்கத்தின்போது கேள்விகள் கேட்பது இவை பெண் நடிகருக்கு இயல்பாக ஏற்படக்கூடிய சிக்கலாகும். எனக்குப் பிடிக்காதவைகளை ஆண் நடிகர் செய்தால் மேடையிலேயே கேட்பேன். கணவர் குழுவில் இருக்கும்போது பொறுத்துக் கொள்வேன் என்கிறார்.

நாடகம் நிகழ்த்தப் போகும்போது குழுவாகச் செல்வோம். பழகுவதில் வித்தியாசம் இல்லை. பெண் நடிகர்களிடம் தொழில் பொறாமை இருக்கும். அதைக் கண்டு கொள்வதில்லை. இவருக்குப் பிடித்த பாத்திரங்கள் சந்திரமதி, வள்ளி, சாவித்திரி என்கிறார். புராணக் கதைகளில் வரும் பாத்திரங்களைத் தொடர்ந்து நடித்ததாலும் இந்த பாத்திரத்துக்குப் புகழ் பெற்றதாலும் பிடித்துவிட்டது என்கிறார்.

ஒப்பனை என் விருப்பத்திற்கேற்பச் செய்து கொள்வேன் என்கிறார். ஸ்திரீபார்ட் செய்பவர்கள் மட்டும் ஒப்பனையில் கவனம் செலுத்தினால் போதும். பார்வையாளரும் ஸ்திரீபார்ட் ஒப்பனையைத்தான் பார்க்கின்றார்கள். அதில் பொருத்தம் இருந்தால் நடிப்பு, பாடல் இவைகளைக் கண்டு கொள்ளமாட்டார்கள். தர்க்கம் பேசும் போது சிறப்பாகப் பேசினால் போதும்; பார்வையாளர்கள் பாராட்டுவார்கள் என்கிறார்.

நடிப்பு அல்லாத பிற வேலைகளில் பங்கெடுத்துக் கொள்வதில்லை. பார்வையாளரிடம் சிக்கல் ஏற்படுவது இல்லை. திரைப்படப் பாடலைப் பாடும்போது மட்டும் அவர்களுக்குப் பிடித்த நடிகரின் பாடலைப் பாடும்போது சத்தம் போடுவார்கள். சில இளைஞர்கள் அவர்களுக்குப் பிடித்த நடிகர்களின் பாடலைப் பாடச் சொல்லிக் கேட்பார்கள். இது இயல்பாக நடக்கும், பெரும் சிக்கலாகத் தெரியாது என்கிறார்.

பெண்கள் பாத்திரத்தோடு ஒன்றும்போது, மாற்றம் ஏற்படுவது நடிகரைப் பொறுத்து அமையும் என்கிறார். நான் பாத்திரமாக மாறி நடிக்கும் போது மனத்திற்குத் தைரியம் வருகின்றது. நமக்கு என்று ஒரு திறமை இருக்கின்றது என்பது அப்போது தெரிகின்றது.

ஆனால் இது மேடையில் மட்டும்தான், நடித்து முடிந்ததும் பாத்திரமாக இருக்க முடியவில்லை. மேடை மட்டும்தான் தைரியம் கொடுக்கின்றது. சொந்த வாழ்க்கையில் அப்படி இல்லை என்கிறார்.

பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காகத்தான் என்பது தவறான கருத்து என்கிறார். மேடைப் பொருத்தம் இல்லாதவர்களால் இது உருவாகிறது. பெண் நடிகர்களின் குரல்வளம், பேச்சுத்திறமை இவைதான் நாடகத்தில் தொடர்ந்து நடிக்க வைக்கின்றது. இப்போது போட்டிக்காகவும் பணத்திற்காகவும் இப்படி மாற்றி விட்டார்கள். திறமையான நடிகர்களை இப்படிச் சொல்லமுடியாது என்கிறார்.

கலைச்செல்வி, எஸ்.
வயது 28

9ஆ, கமாண்டிங் ஆபீஸ்,
1ஆவது சந்து, மேலமாசி வீதி,
மதுரை.

இவர் காதல் திருமணம் செய்து கொண்டவர். கணவரும் நாடக நடிகர். கணவர் பபூன் பாத்திரம் ஏற்பவர்.

நாடகத்தின் மூலம் கிடைக்கும் பணம் குடும்பச் செலவுகளுக்குப் போதுமானதாக உள்ளது. சிக்கனம் இருந்தால் நாடகக்காரர்கள் குடும்பத்தைச் சீராக வைத்துக் கொள்ளலாம் என்கிறார். நாடகத்தில் நடிப்பதால் குடும்பத்தில் சிக்கல் உண்டாகிறது. கணவர் நாடக நடிகராக இருந்தும் குடும்பத்தில் கசப்பு ஏற்படுகிறது. கணவர் எல்லாவற்றுக்கும் சந்தேகப்படுவார், அடிப்பார். நாடகத்தில் போதுமான பணம் கிடைப்பதால் இதை விடவும் முடியவில்லை என்கிறார். நான் நடனம் ஆடும் பாத்திரம் ஏற்பதால் மேடையில் மற்ற பெண் நடிகரைக் காட்டிலும் வித்தியாசமாக நிகழ்த்திக் காட்ட வேண்டியுள்ளது. இது கணவருக்குப் பாதிப்பாக உள்ளது. என் கணவர் எதற்கெடுத்தாலும் குற்றம் சொல்வார். எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு போகவேண்டி உள்ளது.

குழந்தையைப் படிக்க வைப்பேன் என்கிறார். நாடகத்தில் நடிக்கவைக்க விருப்பம் இல்லை. இப்போது நாடகக்காரர்களின் நிலை அப்படி உள்ளது. வேறு வேலை கிடைக்கவில்லை என்றால் நாடகத்தில் நடிக்க வைப்பேன் என்கிறார். நாடகத்தைவிட அதிகம் பணம் கிடைக்கும் வேறு தொழில் கிடைத்தால் நாடகத்தை விட்டு விடுவேன். ஆனால் எந்தத் தொழிலில் எங்களுக்கு இவ்வளவு பணம் கிடைக்கும்? அதனால் தொடர்ந்து நடிப்பேன் என்கிறார். நாடகத்தில் ஏற்கும் பாத்திரங்கள் நிஜவாழ்க்கையில் பாதிக்கவில்லை. மேடையில் என்னுடைய விருப்பத்திற்கு எது வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் வாழ்க்கையில் அப்படிச் செய்ய முடியாது. குடும்பத்தில் அனைவரும் புரிந்து கொள்பவராக இருந்தால் சிக்கல் இல்லை என்கிறார். நாடக ஒப்பந்தம் பெரும்பகுதி கணவர் பார்த்துக் கொள்வார். அவருடைய விருப்பத்திற்குத்தான் ஒப்பந்தம் ஏற்படும். என்னுடைய விருப்பத்திற்கு ஒப்பந்தம் நிகழ்வதில்லை

என்கிறார். நாடகம் நிகழ்த்தும் பகுதிக்குச் செல்வது தொடர்பாக எந்தச் சிக்கலும் இவருக்கு ஏற்பட்டது இல்லை. கணவரும் உடன் செல்வதால் பயணத்தின் போதும் நிகழ்த்தும் பகுதியிலும் எந்தச் சிக்கலும் ஏற்பட வாய்ப்பு இல்லை என்கிறார்.

நாடகப் பின்புலம் :

நடிப்பதை இவரே தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளார். நேரடியாக நடனம் ஆடும் பாத்திரத்தை ஏற்றதனால் ஆசிரியர் என்று தனியாகக் கூறமுடியாது. உடன் பழகியவர்களிடம் அவ்வப்போது நடனம் தொடர்பான நுணுக்கங்களையும் முறைகளையும் கேட்டுத் தெரிந்துகொள்வாராம்.

முதன் முதலில் ஸ்பெஷல் நாடகத்தில் பங்கு பெற்றுள்ளார். ஆண் நடிகர்களோடு நடிக்கும்போது ஏற்படும் சிக்கல் பார்வையாளர்களுக்கு நிகழ்த்தும் போது தெரியாது. ஆனால் நடிகருக்கும் கணவருக்கும் தெரியும். குறிப்பாக நடனம் ஆடும் பாத்திரங்களை ஏற்பவர்களுக்கு இதில் பிரச்சனை அதிகம். நடனம் ஆடுபவர் உடல் அசைவுகள், வசனம் போன்றவை பார்வையாளரின் பாலுணர்வைத் துண்டும்படியாக இருக்க வேண்டும். பார்வையாளர்களும் இதைத்தான் எதிர்பார்க்கின்றார்கள். இச்செயல் நிகழ்த்துநருக்கும் உறவினருக்கும் மனச் சிக்கலை ஏற்படுத்தும். நடனம் ஆடும் பாத்திரம் பெரும்பாலும் பபூன் பாத்திரம் ஏற்பவரோடு இணைந்தவையாக இருக்கும். சில ஆண் நடிகர்கள் நன்றாகப் பழகியவராக இருப்பர். அவருடன் நடிப்பது சிக்கல் ஏற்படாது. நடிகர்களின் அசைவுகள் பார்வையாளருக்கு மிக முக்கியம். இது ஆண் நடிகர், பெண் நடிகர் சேர்ந்து செய்யும் போது சில நேரங்களில் சிரமமாக இருக்கும்.

ஆண் நடிகர் சாதாரணமாக நடிப்பார். அவருக்கு எந்தச் சிக்கலும் இல்லை. அதே போல் இரண்டு பொருள்பட வசனங்களையும் பேசுவார். அவருக்குக் கட்டுப்பாடே இல்லை. உடன் நடிக்கும் பெண் நடிகரும் ஆண் நடிகருக்கு இணையாக நடிக்க வேண்டும். இல்லை என்றால் நிகழ்த்துதல் சிறப்பாக அமையாது. எனவே நாங்களும் ஆண் நடிகர் நிகழ்த்துதலுக்கு ஈடுகொடுத்து நடிப்போம். நடிகையின் கணவர் உடன் இருந்தால் மனச் சிதைவு உண்டாகும். வீட்டில் சண்டை ஏற்படும். ஆண் நடிகரின் எல்லாச் செயல்களுக்கும் ஈடு கொடுக்கும் பக்குவமும்

திறமையும் இருந்தாலும் தைரியம் இல்லை என்கிறார். ஆண் நடிகருக்கு இணையாக நடித்தாக வேண்டிய கட்டாயமும் உள்ளது. இல்லை என்றால் கிராமத்தார் அடுத்த ஆண்டு அழைப்பதற்கு யோசிப்பார்கள். வேறு நடிகரை ஒப்பந்தம் செய்து கொள்வார்கள். இதை எல்லாம் சமாளிக்கக்கூடிய பக்குவம் இருந்தால்தான் தொடர்ந்து நாடகத்தில் நடிக்க முடியும் என்கிறார்.

இவர் நடனம் ஆடும் பாத்திரம் ஏற்பவர் என்பதால், பெரும்பாலும் நடனம் ஆடும் பாத்திரமும் ஒருசில தோழிப் பாத்திரமும் கொடுக்கப்படுகிறது. ஸ்பெஷல் நாடகத்தில் தொடர்ந்து நடித்துக் கொண்டிருப்பதால் புராணக் கதைகளையே நடித்துக் கொண்டுள்ளார். இவருக்குப் பிடித்த பாத்திரம் சந்திரமதி பாத்திரம் என்கிறார்.

ஒப்பனைகள் இவர் விருப்பத்திற்கேற்பச் செய்து கொள்கின்றார். சில வேளையில் கணவர் ஒப்பனை தொடர்பாகக் கருத்துக் கூறுவார். இருந்தாலும் எனக்கு ஏற்ற வகையில் நானே செய்து கொள்வேன் என்கிறார். குழுவினரும் இதற்கு வரைமுறை கொடுப்பது இல்லை. இதுவரை ஆண் பாத்திரங்களை ஏற்றதில்லை; நடிக்க விருப்பம் உண்டு என்கிறார். குழுவில் நடிப்பது அல்லாத பிற வேலைகள் செய்வது இல்லை.

மேடையில் நடிப்பின்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் சூழ்நிலையைப் பொருத்து அமையும். சில கிராமங்களில் நடனம் அதிகமாக இரசிப்பார்கள். இவை மாறி அமையும் போது மேடையில் வித்தியாசம் ஏற்படும். இந்த வித்தியாசம் பார்வையாளரைத் திருப்திபடுத்தாது. தலைமைப் பாத்திரம் ஏற்பவரும் உடன் இருக்கும் பபூன் பாத்திரமும் நடனம் ஆடும் பாத்திரத்தைக் கட்டுப்பாட்டிலே வைத்திருக்க வேண்டும் என நினைப்பார்கள். எங்களுக்கு அது பெரும் சிக்கலாகத் தோன்றும் என்கிறார்.

நிகழ்த்துநரைப் பற்றிய விமர்சனங்கள் மீண்டும் அடுத்த ஆண்டு நிகழ்த்துவதற்கு அழைக்க யோசிக்கத் தோன்றும். இதைச் சமாளிக்கும் செயலை நடிகர் செய்ய வேண்டி உள்ளது. பொதுவாகப் பார்வையாளர்கள், நடிகர் இராகமாகப் பாட வேண்டும்; நடனம் திரைப்படத்தில் இருப்பது போன்று இருக்க வேண்டும் என்று நினைப்பார்கள். மேலும் நடிகர் குழந்தை பெற்றுக் கொள்ளாமல் இருக்க வேண்டும். வெள்ளையாக இருக்க வேண்டும்; அழகாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

இவை அனைத்தையும் தயார்படுத்திக் கொள்வது நடிகரின் நடைமுறைச் சிக்கலாகத் தோன்றும் என்கிறார்.

பெண் நடிகர் பெண் பாத்திரத் தன்மையை உள்வாங்கி நிகழ்த்தும்போது மாற்றம் ஏற்படுகிறது. பொதுவாக நான் கணவரிடம் எதிர்த்துப் பேசுவதில்லை. மேடையில் உடன் நடிப்பவரை எப்படி வேண்டுமானாலும் பேசலாம்; பேசவும் முடிகின்றது. ஆண் நடிகருக்கு இணையாகப் பேசவும் நடிக்கவும் முடிகிறது. இது நடனம் ஆடும் பாத்திரத்தால் உருவாகிறது என்கிறார்.

நடனம் ஆடும் பாத்திரத்தைப் பொறுத்தவரையில் பெண் நடிகர் கவர்ச்சிக்காகத் தான் செயல்படுகிறார்கள் என்று கூறலாம். காரணம், நடனம் ஆடுபவரின் வயது, நடிப்புத் திறமை இவைகளை வைத்துக் கூறலாம் என்கிறார்.

கலைச்செல்வி, கே.எம்.
வயது 65

கருணாநிதி நகர்,
5ஆவது சந்து,
பழனி ரோடு,
திண்டுக்கல்.

இவர் பறையர் இனத்தைச் சேர்ந்தவர். கணவர் நாடக நடிகர். நாடகத்தின் மூலம் வரும் பணம் ஆரம்பத்தில் போதவில்லை. பிறகு 200 ரூபாய்க்கு மேலே ஒரு நாளைக்குச் சம்பாதிக்க ஆரம்பித்ததும் வீட்டிற்குப் போதிய வருவாயாக இருந்தது. நாடகம் நடிப்பதால் இவர் வாழும் ஊரில் இவரை வித்தியாசப்படுத்திப் பார்ப்பதில்லையாம். நாம் நடந்து கொள்ளும் முறைகளும் பழக்க வழக்கங்களும் நம்மைப் பற்றிப் பேச வைக்கும் என்கிறார்.

நாடகம் நடிப்பதால் குழந்தை வளர்ப்புமுறை பாதிக்கின்றது. குழந்தைகளுக்குத் தாய்ப்பாசம் குறைந்து போகும். பிள்ளைகளின் வளர்ச்சியை நேரிடையாகக் கவனிக்க முடியவில்லை. அதனால் கல்வி தடைப்படுகிறது என்கிறார். மற்ற உறவினர்களின் தொடர்பும் நாடகம் நடிப்பதால் தடைப்படுகின்றது. ஒருசிலர் நாடகம் நடிப்பதால் ஒரு மாதிரியான கண்ணோட்டத்தில், தாழ்ந்தவர்கள் என்று சரியாகப் பழகுவதில்லை. ஒருசிலர் பழகினாலும் அவருடன் சரியான தொடர்பு வைத்துக்கொள்ள நம்மால் முடியவில்லை. இதுதான் நாடகக்காரர்களின் நிலை என்கிறார்.

இவருடைய கணவர் நாடக நடிகர் என்பதால், நாடகத்தில் நடிப்பதால் வீட்டில் சிக்கல் ஏற்படுவதில்லை. மேடையில் நான் நடித்துக் கொண்டிருக்கும் போது, கணவர் கவனித்துக் கொண்டு இருப்பார். தவறு செய்தால் அல்லது வசனம் சரியில்லை என்றால் அரங்கத்திலேயே எடுத்துக் கூறி திருத்திக்கொள் என்பார். வீட்டிலும் நடிப்பு நுணுக்கங்களைக் கூறுவார். புராணக் கதைகளைப் படித்துக் காட்டுவார். அவருக்கு ஏற்படும் பிரச்சனைகளையும் என்னிடத்தில் கூறி கருத்துக் கேட்பார். எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் நாங்கள் இருவரும் சேர்ந்து செல்வோம் என்கிறார்.

இவருடைய மகனையோ மகளையோ நாடகத்தில் நடிக்க வைக்கவில்லை. காரணம் கேட்டதற்கு, எவ்வளவு பணம் சம்பாதித்தாலும் புகழ் சம்பாதித்தாலும் வறுமையும் துயரமும் தான் நிற்கிறது. நாடகக்காரர்களின் நிலை அப்படி உள்ளது. அதனால்தான் நாம் பட்ட துயரங்களை நம்முடைய சந்ததியினரும் படக்கூடாது என்று நாடகத்தில் பங்கேற்கச் செய்யவில்லை என்கிறார்.

நாடகத்தைவிட அதிகப் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்திருந்தாலும் நடிப்பதை நிறுத்தி இருக்க மாட்டேன். நடிப்பது பழகிப்போய் விட்டதால் மனத்திற்கும் உற்சாகமாக இருக்கிறது. எவ்வளவு கவலை இருந்தாலும் மக்கள் முன் ஒப்பனை செய்து கொண்டு நிற்கும்போது எல்லாம் மறந்து போய் விடுகின்றது. எனவேதான் நாடகத்தில் தொடர்ந்து நடித்துக் கொண்டு வருகிறேன்.

நாடகத்தில் நடிக்கும் பாத்திரங்கள் நிஜவாழ்க்கையிலும் பாதிக்கின்றது என்கிறார். எனக்குத் துக்கமான நேரங்களில் நாடகப் பாடல்களைப் பாடி அழுவேன். மேடையில் நடிக்கும் போதும் துயரமான காட்சியில் அழும்போதும் மனத்தில் உள்ள துக்கங்களை எல்லாம் நினைத்து அழுவேன் என்கிறார்.

நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் முழுவதும் குடும்பத்திற்காகச் செலவு செய்து விடுவேன். எனக்காக எதுவும் செலவு செய்வதில்லை. அதற்கு அவசியமும் இல்லை என்கிறார். நாடகம், வீடு தவிர வேறு எதையும் நினைத்துப் பார்ப்பதில்லை. நாடகம் நிகழ்த்தப் போகும்போது பாதுகாப்பிற்காக என்று யாரும் உடன் வருவதில்லை. எல்லோரும் குழுவாகச் செல்கின்ற காரணத்தினால் பாதுகாப்புச் சிக்கல் இருக்காது. கிராமத்து மக்களும் நடிகர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடு செய்வார்கள் என்கிறார்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத்தில் அறிமுகப்படுத்தியவர் இவருடைய தந்தையார். இவர் நாடக ஆசிரியர். நடிப்புத் தொடர்பானவைகளை இவரிடமே பயின்றுள்ளார். முதலில் சேர்ந்த குழுவில் தந்தை இருந்ததால் இவருக்கு நாடகம் தொடர்பான கதைகள், நுணுக்கங்கள் எல்லாம் தந்தையே சொல்லிக் கொடுத்திருக்கிறார். இசை நாடகத்தில் முதலில் பங்கேற்று இடையில் சமூக நாடகங்களில் பங்கு பெற்றுள்ளார். மீண்டும் ஸ்பெஷல் நாடகத்தில் பங்கு பெற்று, தொடர்ந்து அதிலேயே நடித்தும் வருகிறார்.

நடிக்கும் போது ஆண் நடிகருடன் சிக்கல் இல்லை என்கிறார். நடிகர்களுக்குள் ஒற்றுமை இருந்தால் நடிப்பதில் விட்டுக் கொடுத்து நடிப்போம். தர்க்கத்தின் போதுதான் ஆண் பெண் என்று பாகுபடுத்திப் பேசுவோம். அதுவும், மேடையில் மட்டும் பார்வையாளர்களுக்கு சண்டை போட்டுக் கொள்வது போன்று தோன்றும். ஆனால் அரங்கத்தின் உள்ளே வந்ததும் வழக்கம் போல் இருப்போம். மேடையில் செய்து கொள்ளும் தர்க்கங்களில் ஒருசில நேரங்களில் கௌரவப் பிரச்சனையாக சில நடிகர்கள் நினைத்துக் கொண்டு, உடன் நடிக்கும் பெண் நடிகரிடம் வரம்புக்கு மீறிய வசனங்களைப் பேசும்போதுதான் சிக்கல் ஏற்படும். அனுபவமும் தைரியமும் இருந்தால் இதையும் சமாளிக்கலாம் என்கிறார்.

இவருக்குப் பிடித்த பாத்திரம் அனுசுயா பாத்திரம். 'சதி அனுசுயா' நாடகம் பிடித்தமான நாடகம். சமூக நாடகம், புராண நாடகம் இரண்டிலும் நடித்திருந்தாலும் புராணக் கதைகளை நிகழ்த்துவதுதான் விருப்பமானதாக இருக்கிறது. சமூக நாடகங்களில் நல்ல கருத்துக்கள் இருந்தாலும் புராணக் கதைகளில் நடிக்கும் திருப்தி சமூக நாடகங்களில் கிடைப்பதில்லை. ஒவ்வொரு நடிகரும் அவரது சொந்தத் திறமைகளைப் புராணக் கதைகளில்தான் வெளிப்படுத்த முடியும் என்கிறார்.

சிறுவயதில் ஆண் பாத்திரங்களை ஏற்றுள்ளார். ராஜநடிகை ஆனதும் ஆண் பாத்திரங்களை ஏற்றது இல்லை. குழுவில் நடிப்பு அல்லாத பிற வேலைகள் தற்போது செய்வதில்லை. ஆனால் ஆரம்ப காலத்தில் குழுவினர் அனைவரும் ஒன்றாகச் செயல்படும் போது குழு தொடர்பான வேலைகளைப் பகிர்ந்து கொண்டு செய்வோம் என்கிறார்.

நடிப்பின்போது நடைமுறைச் சிக்கல்கள் அனுபவம் பெற்றவர்களுக்குகூட ஏற்படும். உடன் நடிப்பவர், பார்வையாளர்கள், இசை வாசிப்பவர்கள் இவர்கள் ஒன்று சேர்ந்து நிகழ்த்தினால் நடிப்பதில் சிக்கல் ஏற்பட வாய்ப்பு இல்லை என்கிறார். நடிகருக்குள் பொறாமைக் குணம் அதிகமானாலும் நடிக்கும் போது சிக்கல் ஏற்படுகிறது. இவை எல்லாம் பழகிப்போய் விட்டதால் சாதாரணமாக ஆகிவிட்டது. பார்வையாளர்களிடமிருந்து சிக்கல் ஏற்படுவதில்லை. கதையை நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது கதையையும் பாடலையும் கவனித்துக் கொண்டு இருக்கின்றார்கள். பாடல் மாறும்போது எழுந்து கேள்வி கேட்கின்றார்கள். பார்வையாளர்களை அமைதியாக வைத்திருப்பது கலைஞர்களிடம் தான் உள்ளது என்கிறார்.

பெண் பாத்திரத்தைப் பெண் ஏற்பதற்கும் ஆண் ஏற்பதற்கும் நடிக்கும்போது மட்டும் வித்தியாசம் தெரியும். பாடல் பாடுவது, மற்ற நடிகர்களிடம் பழகுவது இவைகளில் எந்த மாற்றமும் தெரியாமல் நடித்தால் பெண் நடிகர் செய்வது போல் இருக்கும். பெண் பாத்திரத்தை ஆண் பெண் யார் வேண்டுமானாலும் ஏற்கலாம். குரல் வளம் முக்கியம்; பாடல் சாரீரத்தோடு பாடினால் போதும்; வேறுபாடு தெரியாது என்கிறார். பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காக மட்டும் நாடகத்தில் பங்குபெறச் செய்கிறார்கள் என்ற கருத்தை மறுக்கின்றனர். ஆண் நடிகர், பெண் நடிகர் இருவரும் பேசும் வசனம், ஒப்பனைகள், நடிப்பு இவைகள் பாத்திரத்திற்கு ஏற்றபடிதான் செய்வார்கள். ஆண் நடிகர்களும் கவர்ச்சியாகத்தான் ஒப்பனை செய்கின்றார்கள். இரண்டு பொருள் இருக்கும் வசனம் பேசுகின்றார்கள். அப்போது ஆண் நடிகர்களும் கவர்ச்சிக்காகத்தான் நாடகத்தில் நடிக்கின்றார்கள் என்று கூறினால் பொருந்துமா? அது போன்றுதான் பெண் நடிகர்களும் பார்வையாளர்களுக்குப் பிடித்த மாதிரி நடிக்கின்றார்கள்; அவ்வளவுதான் என்கிறார்.

காஞ்சனா, என்.எஸ். (எ) தேவிமாணிக்கம்
வயது 42

28, முஹமத் புரா தெரு,
3 ஆவது வீதி,
சேலம் - 636 001.

இவர் மலையாள பென்னா இனத்தைச் சேர்ந்தவர். தற்போது சொந்தமாகக் கலைக்குழுவை நடத்தி வருகிறார். இவருடைய கணவர் சீட்டுக் கம்பெனி நடத்தி வருகிறார். நாடகத்தின் மூலம் வரும் பணம் குடும்பச் செலவுகளுக்குச் சரியாகி விடுகிறது. சேமிப்பு அல்லது அவசரச் செலவுகளுக்கு நாடகத்தின் மூலம் வரும் பணம் போதவில்லை. கணவரும் தொழில் செய்வதால் குடும்பத்தைச் சமாளிக்க முடிகிறது என்கிறார்.

நாடகம் நடிப்பதால் குடும்பத்தில் சிக்கல் ஏற்படுவதில்லை. கணவர் நாடகச் சூழ்நிலையைப் புரிந்து கொள்பவராக இருப்பதால், நாடகத்தில் பங்கேற்பது குறித்துக் கருத்து வேறுபாடு ஏற்பட்டதில்லை. குடும்பத்தார் ஏற்கனவே நாடகத்துறையில் இருந்ததால் புரிந்து கொள்ளக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். நடிப்பதால் குழந்தை வளர்ப்பு முறை பாதிக்கின்றது. ஆனால் என் கணவர் குழந்தையின் மீது தனிக்கவனம் செலுத்துவதால் வளர்ப்பு முறை பாதிக்கவில்லை என்கிறார். இவருடைய மகளைப் பன்னிரண்டாம் வகுப்பு வரை ஆங்கில வழியில் படிக்க வைத்துள்ளார். தற்போது கணிப்பொறிப் பயிற்சியில் ஈடுபடுத்தி உள்ளார்.

இவருடைய மகளையோ மகனையோ நாடகத்தில் நடிக்க வைப்பதில்லை என்கிறார். நாடகம் புகழும் பணமும் கொடுத்தாலும், நிம்மதியும் நிரந்தரமும் இல்லாத தொழிலாக இருக்கிறது. குழந்தைகளின் படிப்பில் கவனம் செலுத்துபவராக இருக்கின்றார். நாடகத்தைவிட அதிகப் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்திருந்தாலும் நாடகத்தில் தொடர்ந்து நடித்திருப்பேன் என்கிறார். நாடகத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வந்ததாலும் முன்னோர்கள் நாடகத்தில் நடித்ததாலும் இயற்கையாகவே நாடகத்தில் ஈடுபாடு வந்து விட்டது என்கிறார்.

நாடகத்தில் ஏற்கும் பாத்திரங்கள் நிஜ வாழ்க்கையிலும் நினைக்கச் செய்கின்றது. சேலம் அன்னதானப்பட்டி

ஸ்ரீகாளியம்மன் கோயிலில் நடந்த 'சித்திரவல்லி' நாடகத்தில் நடித்தபோது, அம்மன் ஊர்வலம் முடிந்து திரும்பக் கோயிலுக்கு வரும் சமயம், சுமார் காலை 6.30 மணிக்கு, நான் மேடையில் பாடி நடித்துக் கொண்டிருந்த போது, மேடைக்கு முன் அம்மன் ஊர்வலத்தை நிறுத்தி என்னை ஆசீர்வதித்துப் பிரசாதம் வழங்கியது நீங்காத நினைவாகும். இது நான் நடித்த பாத்திரத்தை வாழ்க்கையில் மறக்க முடியாமல் செய்துவிட்டது என்கிறார்.

நாடகத்தின்மூலம் சம்பாதிக்கும் பணம் முழுவதும் கணவரிடம் கொடுக்கின்றார். குடும்பப் பொறுப்புகளைக் கணவரே கவனித்துக் கொள்கிறார். தேவைப்படும் போது செலவுகளுக்காகப் பணம் வாங்கிக் கொள்வேன். கணவரும் கணக்குக் கேட்பதில்லை என்கிறார். நாடக ஒப்பந்தம் கணவர் கவனித்துக் கொள்வார். சில நேரங்களில் இவரிடத்திலும் நடைபெறுகின்றது. ஒப்பந்தம் தொடர்பாகப் பிரச்சனை ஏற்பட்டதில்லை. நாடகம் நிகழ்த்தப் போகும்போது பாதுகாப்பிற்காக யாரும் வருவது இல்லை. கணவர் ஓய்வாக இருக்கும்போது சில நேரம் வருவார்.

நாடகப் பின்புலம் :

இவருடைய சிறிய தாயார் பிரபல நாடக நடிகராக இருந்ததால் இவரையும் நாடகத்தில் நடிக்க வைத்தார். சக்ரவர்த்தி சீனிவாசம் நாடக ஆசிரியர் ஆவார். ஆறு வயதில் சங்கீதப் பயிற்சி பெற்று பிறகு பாடல் குழு, நாடகம் என்று தொடர்ந்து பங்கு பெற்று வருகிறார். நடிப்பதை விரும்பியே தேர்ந்தெடுத்துள்ளார். ஏற்கனவே நாடகங்களைப் பார்த்த ஆர்வத்தாலும் பாடல் பாட பயிற்சி எடுத்துக் கொண்டதாலும் நாடகத்தில் சேர எளிமையாக இருந்தது என்கிறார்.

முதலில் பாடல் குழுவில் பாடிக் கொண்டிருந்திருக்கிறார். நாராயணன் என்னும் நடனக் கலைஞரிடம் முறையாகப் பயிற்சி பெற்றிருக்கிறார். தாயார் டி.வி. ராதா அவர்களும் சிறிய தாயார் டி.பி பாரிஜாதம் அவர்களும் நாடகத்தில் பிரபலமானவர்கள். நாடகத் துறையில் அறிமுகப்படுத்தியவர்களாக இவர்களைக் குறிப்பிடுகிறார். ஸ்பெஷல் நாடக வடிவத்தில் முதலில் நடித்துள்ளார். பிறகு அமெச்சூர் நாடகங்களை நிகழ்த்தியுள்ளார். ஆனால் ஸ்பெஷல் நாடகத்திலேயே தொடர்ந்து கவனம் செலுத்தியுள்ளார்.

ஆண் நடிகரோடு நடிக்கும் போது நடைமுறைச் சிக்கல் எதுவும் ஏற்படுவதில்லை. கலைஞர்கள், ஆண் பெண் என்று

வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. ஆண் நடிகர்கள் தர்க்கம் பேசும் போது மட்டும் பார்வையாளர்களிடத்தில் பாராட்டுப் பெற வேண்டி விட்டுக் கொடுக்காமலும் பெண்களைத் தாழ்த்தியும் பேசுவார்கள். இதுவும் ஒருசில கதைகளில்தான் வரும். குறிப்பாக வள்ளித் திருமணம் போன்ற கதைகளில்தான். ஆனால் பெரும்பாலான கதைகளில் ஆண் நடிகர், பெண் நடிகர் சமமாக இருக்கும்படியும் போட்டி மனப்பான்மை இல்லாமலும் நாடகம் நிகழ்த்தப்படும். குழுவினரும் பழகுவதில் வித்தியாசம் இல்லாமல் பழகுவார்கள். பெண் நடிகர்களுக்குள் தொழில் பொறாமை இருக்கும். இருந்தாலும் மேடையில் நடிக்கும்போது அதைக் காட்டிக் கொள்வதில்லை. சங்கரதாஸ் சுவாமிகளின் கதையில் உள்ள பெண் பாத்திரம் அத்தனையும் பிடித்தமானவை என்று கூறுகிறார்.

இவர் சாரீரம் சுத்தமாகவும் குரல் இனிமையாகவும் பாடுவதால், பாடலுக்கு முக்கியத்துவம் பெற்ற பாத்திரங்களையே கொடுக்கின்றார்கள். சமூக நாடகங்களில் நீண்ட நேரம் வசனம் பேசக்கூடிய பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கின்றார்கள். ஒப்பனைகளை இவர் விருப்பத்திற்கேற்ப செய்து கொள்வார். எந்தப் பாத்திரத்திற்கு எப்படி ஒப்பனை செய்ய வேண்டும் என்று சிறிய தாயார் நடித்துக் கொண்டிருக்கும் போது சொல்லிக் கொடுத்துள்ளார். இவர் பிரபலமானவுடன் இரசிகர்களின் இரசனைக்கேற்ப ஒப்பனைகளையும் செய்து கொண்டு நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்.

இவருக்குப் பிடித்த கதை புராணக்கதைகள் என்று கூறுகிறார். புராணக் கதைகளில் நல்ல கருத்துக்கள் இருக்கின்றது. நிகழ்த்திக் காட்டவும் எளிமையாக இருக்கின்றது. எனவேதான் புராணக் கதைகள் பிடிக்கின்றன என்கிறார். பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காக நாடகத்தில் பங்கு பெறுகிறார்கள் என்ற கருத்தை மறுக்கின்றார். சமூக நாடகங்களில் வேண்டுமானாலும் இருக்கலாம். ஸ்பெஷல் நாடகத்தில் பெண் நடிகர் பெண் பாத்திரத்தை நிகழ்த்துவது இயல்பானது. பெண் நடிகர்களின் சூழ்நிலை, கவர்ச்சிக்காக என்று பேச வைக்கின்றது என்கிறார்.

கீதா
வயது 25

பிண்டித்தாங்கல் கிராமம்,
புதூர் அஞ்சல்,
ஆற்காடு தாலுக்கா,
(வழி) கலவை,
வடாற்காடு அம்பேத்கர் மாவட்டம்.

இவர் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர். திருமணம் ஆனவர். கணவர் நாடக நடிகர். நாடகத்தின் மூலம் வரும் பணம் குடும்பச் செலவுகளுக்குப் போதவில்லை. ஆறுமாதம் தொழில் மும்முரமாக நடைபெறுகிறது. இந்த ஆறு மாதத்தில் குடும்பம் வறுமை இல்லாமல் இருக்கும். மற்ற ஆறு மாதத்தில் பல பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. நாடக சீசனில் சேமித்து வைக்கும் அளவிற்குப் பணம் கிடைப்பது இல்லை என்று கூறுகிறார்.

நாடகம் நடிப்பதால் குடும்பத்தில் சிக்கல் ஏற்படுவதில்லை. திருமணம் ஆவதற்கு முன் மாமாவுடன் நடித்துக் கொண்டிருந்ததாலும் பிரச்சனை இல்லாமல் இருந்தேன். நாடகம் நிகழ்த்த வெளியூர்களுக்கு செல்வது, நடிப்பது இவைகளில் வீட்டிலுள்ளோர் குறுக்கிட மாட்டார்கள். ஊரில் உள்ளவர்களும் நாடகத்தில் நடிப்பது குறித்து வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. எல்லோரையும் போலத்தான் நானும் அவர்களுடன் பழகுகின்றேன் என்கிறார்.

நடிப்பது தொடர்பாகக் கணவருடன் சிக்கல் உண்டாவதில்லை. கணவர் நாடக நடிகர் என்பதால் நாடகத்தில் இருக்கும் பிரச்சனைகள் அவருக்குத் தெரியும். நடிக்கும்போது மேடையில் நான் என்ன செய்தாலும் கேட்க மாட்டார். மற்ற நடிகர்களிடம் பழகுவது, பேசுவது போன்றவைகளில் சந்தேகப்பட மாட்டார். சில நேரம் கணவருடன் நடிக்கும்போது அதற்கேற்ற ஆடலும் ஆடுவார். உடன் நடிப்பவரும் அது போல் ஆடவேண்டும் என்று எதிர்பார்ப்பார். என்னிடம் நெருங்கி நடிப்பார். கணவர் என்றாலும் மேடையில் சில கட்டுப்பாடுகளோடு நடிப்பது. நடிகருக்கும் நல்லது; பார்க்கின்றவர்களுக்கும் நல்லது. எனவே, மற்ற நடிகர்களுடன் நடிப்பது போன்றுதான் கணவருடனும் நடிப்பேன். இது என்

கணவருக்கு இடையூறாக இருக்கும். இதனால் சில நேரங்களில் எனக்கும் என் கணவருக்கும் மனவருத்தம் ஏற்படுவதுண்டு. ஆனால், நாடகம் முடிந்ததும் எப்போதும்போல இயல்பாக இருப்போம் என்கிறார்.

குழந்தைகளை நாடகத்தில் நடிக்க வைக்க விருப்பம் இல்லை. படிப்பு படித்து வேறு வேலைக்குப் போவது நல்லது. வேறு வேலை இல்லை என்றால் நாடகத்தில் நடிக்கலாம். குழந்தைகளுக்கே நாடகத்தில் நடிக்க விருப்பம் ஏற்பட்டால் நாங்கள் தடை செய்ய மாட்டோம் என்கிறார்.

நாடகத்தைவிட அதிகப் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்திருந்தால் நாடகத்தில் நடித்திருக்க மாட்டேன். மற்றதை விட நாடகம் ஓரளவிற்கு வருமானம் உள்ள தொழிலாக இருப்பதால் நடிக்க வந்தேன் என்கிறார்.

நாடகத்தில் நடிக்கும் பாத்திரங்களை நிஜ வாழ்க்கையில் பொருத்திப் பார்ப்பதில்லை. பெரும்பாலும் கற்பனைக் கதைகளில் நடிப்பதால் கதைப் பாத்திரம் வலுவானதாக இருக்காது. அதனால் பாத்திரம் மேடையோடு சரி. பகலில் ஞாபகம் வருவது இல்லை என்கிறார். நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணத்தைத் திருமணத்திற்கு பிறகு இவர் விருப்பத்திற்கேற்ப செலவு செய்கின்றார். கணவரும் வரவு செலவுக் கணக்குகளைக் கேட்க மாட்டார் என்கிறார்.

நாடக ஒப்பந்தம் குழு மூலமாக நடைபெறும். குழுவில் இருக்கும் எல்லா நடிகர்களுடைய ஒப்பந்தமும் நாடக ஒப்பந்தக்காரர்கள் மூலமாக நடைபெறுவதால் எனக்குத் தொடர்பு இல்லை. நாடகம் நடத்த வெளியூர்களுக்குப் போகும்போது கணவரும் உடன் வருவதால் பயணம் தொடர்பாகச் சிக்கல் ஏற்படுவதில்லை. நாடகம் நிகழ்த்தக்கூடிய கிராமம் பழகியதாக இருக்கும். எனவே, அப்பகுதியிலும் சிக்கல் இருக்காது என்கிறார்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத்தில் அறிமுகப்படுத்தியவர் இவருடைய மாமன் சபாபதி என்பவர். சிறிய வயதில் இருந்தே இவருக்கு நடனம் ஆடுவது விருப்பமாக இருந்ததனால், நாடகத்தில் சேர்த்திருக்கிறார்கள். நடிப்பதை மாமனிடமே பயின்றுள்ளார். முதலில் நாவல்ஸ் நாடக வடிவத்தில் சேர்ந்து இவ்வடிவத்திலேயே தொடர்ந்து நடித்து வருகிறார்.

ஆண் நடிகர்களோடு நடிக்கும்போது நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படும் என்கிறார். பெண் நடிகரின் நடனமும் பாடலும் சிறப்பாக இருந்தால் பார்வையாளர்கள் பரிசுப் பணம் கொடுத்துப் பாராட்டுவார்கள். இது மாதிரியான நேரத்தில் சில ஆண் நடிகர்கள் கதையை வேகமாக ஓட்டுவார்கள். எங்களுக்குப் பாராட்டு வரும்போது பொறுத்துக் கொள்ளமுடியாது. வசனத்தைக்கூட மாற்றிக் கூறுவார்கள். பெண் பாத்திரம் ஏற்றிருக்கும் ஆண் நடிகர் மேடையில் இருக்கும் போது பெண் என்று மனத்தில் நினைக்க முடியாது. தோழியாக நடிக்கும்போது தொடுவதற்கே தயக்கம் ஏற்படும். காட்சியிலும் சிறப்பாக நடிக்க முடியாது. உடன் நடிக்கும் ஆண் நடிகர் பார்வையாளர்களை உற்சாகப்படுத்த உடல் அசைவுகளையும் நடனத்தையும் ஆபாசமாகச் செய்து காட்டுவார்கள். ஆனால் அதுபோல் என்னால் செய்யமுடியாது. இரண்டு பெண் பாத்திரத்திற்கும் ஆண் பெண் என்பதால் சிக்கல் ஏற்படுகிறது என்கிறார்.

குழுவினர் பெரும்பாலும் நண்பர்களாக இருப்போம். இரண்டு பெண்கள் இருந்தால்தான் தொழிலில் பொறாமை இருக்கும். ஆண் நடிகர்களுடன் இயல்பாகப் பழகுவோம். கணவரும் ஒரே குழுவில் இருப்பதால் வேறுபாடு இன்றிப் பழகுவோம். சில ஆண் நடிகர்களிடம் நடிக்கும் போது சிக்கல் ஏற்பட்டாலும், மேடையில் நடிப்பதோடு சரி, மீண்டும் அதை நினைத்துப் பார்ப்பதில்லை என்கிறார்.

இவருக்குப் பிடித்த பாத்திரம் என்று எதுவும் இல்லையாம். நடிக்கும் ஒவ்வொரு பாத்திரமும் பிடித்தமானவைதான். நடிக்காத ஒரு சில பாத்திரங்களும் (சந்திரமதி) பிடித்திருக்கின்றது. புராணக்கதைகளை அதிகம் நிகழ்த்தவில்லை என்றாலும், புராணக் கதையில் வரும் ஆண் பாத்திரங்களை உயர்வாக எழுதி இருப்பதால் எல்லா மக்களையும் கவர்கின்றன.

குழுவில் நடிப்பு அல்லாத பிற வேலைகள் செய்வதில்லை. குழு தொடர்பாக வேலை இருந்தாலும் பெண் நடிகரைச் செய்யச் சொல்வது இல்லை. ஆண் நடிகரே பெரும்பாலான வேலைகளைச் செய்துவிடுகின்றனர் என்கிறார்.

நடிப்பின்போது நடைமுறைச் சிக்கல் ஏற்படுவது நாடகத்துக்கே உரியது. சில கிராமங்களில் மேடைக்குப் பதிலாக மரத்தால் செய்யப்பட்ட பெஞ்சுகளை வரிசையாகப் போடுவார்கள். இவற்றின் மீது தான் நடிக்க வேண்டும். சுதந்திரமாக என்ன வேண்டுமானாலும் செய்ய முடியாது.

ஏற்கனவே மனத்திற்குப் பிடித்தவாறு நடிக்கும்போது சில நடிகர்கள் சந்தேகப்படுவார்கள். நடிக்கும்போது ஒத்துழைப்புத் தர மாட்டார்கள் என்கிறார்.

பார்வையாளர்களிடம் இருந்து சிக்கல் வருவதில்லை. கிராம மக்களுக்குள் சில இடங்களில் சண்டை ஏற்படும். அப்போது நடிப்பவர்களுக்கு இடையூறாக இருக்கும். சில கிராமங்களில் வேறுபட்ட கட்சியை சேர்ந்தவர்களுக்குள் சண்டை ஏற்படும் அல்லது திரைப்படப் பாடலைப் பாடும்போது இரசிகர்களுக்குள் சண்டை ஏற்படும். இதை கிராமத்தாரே சரி செய்து விடுவர். இது போன்ற நேரங்களில் நடிகர்களுக்கு எந்த ஆபத்தும் வராது. நாடகம் நிகழும் போது கூச்சல் ஏற்படும்; நாடகத்தை நிறுத்தி விடுவோம். அமைதியானவுடன் நாடகம் தொடர்வோம். இது சாதாரணமாகப் பழகிப் போய் இருப்பதால் சிக்கலாக நினைப்பதில்லை என்கிறார்.

பெண் பாத்திரத்தைப் பெண் ஏற்பதற்கும், ஆண் ஏற்பதற்கும் வேறுபாடு இருக்கின்றது என்கிறார். ஒப்பனை, குரல், ஆண் பாத்திரத்தோடு நடிக்கும் முறை இவைகளில் இரண்டு நடிகருக்கும் வேறுபாடு தெரியும். சில ஆண் நடிகர்கள் வேறுபாடு இல்லாதவாறு இயல்பாக நடிப்பார்கள். அப்படி இயல்பாக நடித்தால் பார்வையாளர்கள் இரசிப்பது இல்லை. பெண் பாத்திரத்தை ஆண் நடிகர் மிகைப்படுத்திக் காட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள் என்கிறார்.

பெண் நடிகர் குழுவில் கவர்ச்சிக்காகச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்பது உண்மை என்கிறார். காரணம், பெண் நடிகர் இருக்கும் குழுவிற்கே அதிகப் பணம் கொடுக்கிறார்கள். நிகழ்த்தும் நாட்களும் அதிகமாகக் கிடைக்கின்றது. நாடகம் ஏற்பாடு செய்பவர்களும் பெண் நடிகர் குழுவில் இருக்கின்றாரா என்று கேட்கிறார்கள். பெண் நடிகரின் நடிப்பில் கவர்ச்சி இல்லை என்றாலும், பார்வையாளர்கள் அவளைக் கவர்ச்சிக்குரியவளாகவே பார்க்கின்றனர் என்கிறார்.

கெங்காபாய், ஏ.எஸ்.
வயது 65

57, சுண்ணாம்புக்காரர் தெரு,
மதுரை - 1.

தற்போது நாடகத்தில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். மதுரை, திண்டுக்கல், புதுக்கோட்டை, சேலம் போன்ற பகுதிகளில் இவருடைய நடிப்பைப் பற்றியும் குரல் வளத்தைப் பற்றியும் கள ஆய்வின் போதே தெரிவித்தனர். சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களில் இருபத்திநான்கு நாடகங்களை அடிமாற்றாமல் பாடம் செய்து வைத்துள்ளார். தற்போது மகனுடன் வசித்து வருகிறார். மருமகள் ஸ்திரீபார்ட் நடிகை. மகன் நாடக அமைப்பாளர். தன் மகனையும் நடிக்க வைத்துள்ளார்.

கணவர் நாடக நடிகர். இவர் இரண்டாம் பாத்திரம் ஏற்கக் கூடியவர். நாடகம் நடிப்பதால் இவருடைய குடும்பத்தில் சிக்கல் உண்டாவதில்லை. கணவரும் நடிகர் என்பதால் ஓரளவிற்குப் பிரச்சனை இல்லாமல் வாழ்க்கை முறைமை அமைந்து விட்டது என்கிறார். இருந்தாலும் ஒருசில நேரங்களில், அவனுடன் அந்த வார்த்தை பேசாதே; இது போன்ற வசனத்தைப் பேசாதே என்று அரங்கத்தில் கூறுவார். ஆனால் பிரச்சனையாக ஆனது இல்லை. நான் ஸ்திரீபார்ட், என் கணவர் இரண்டாம் நிலைப் பாத்திரம் ஏற்பவர் என்ற நிலை மேடையில் இருந்தும், ஏற்றத்தாழ்வு மனப்பான்மையை நாங்கள் வளர்த்துக் கொள்ளவில்லை என்கிறார்.

இவர் நாடகத்தில் பங்கு பெறுவது தொடர்பாகச் சுற்றத்தாரின் நடைமுறை மற்றும் உறவு முறைகள் எப்படி இருந்தது என்று கேட்ட போது, மற்றவர்கள் கூறும் கருத்துக்கள், விமர்சனங்கள் இவைகளுக்காக நான் வாழ்க்கை வாழவில்லை. என்னைப் பற்றிய எந்த கருத்துரைகளுக்கும் நான் கவலைப்படுவதில்லை. நம்முடைய திறமையும் உழைப்பும்தான் நமக்குச் சோறு போடும் என்கிறார்.

இவர் நாடகத்தில் பங்கு பெற்றதால் இவருடைய குழந்தை வளர்ப்பு முறை பாதித்துள்ளது என்கிறார். தாய் குழந்தையை நேரடியாகப் பார்த்து கொள்ள முடிவதில்லை. தொடர்ந்து பத்து நாட்கள் எல்லாம் வெளியூரிலேயே தங்க வேண்டியிருக்கும். இதனால் குழந்தைகளைக் கவனிக்க முடியாமல் போகும். உறவினர்கள் குழந்தைகளைக் கவனித்துக் கொண்டாலும் போதுமான வளர்ப்பு முறை அமையாது என்கிறார். இரவு

நாடகம், பகல் பொழுது தூக்கம் என்று இருப்பதால் குழந்தை வளர்ப்பு முறை பாதிக்கின்றது என்று கூறுகிறார்.

நாடகத்தின் மூலம் வரும் பணம் குடும்பச் செலவுகளுக்குப் போதுமானதாக இருந்தது என்கிறார். சம்பாதிக்கும் பணத்தைக் கணவரிடம் கொடுத்து விடுவாராம். இவருடைய மகனை நாடகத்தில் நடிக்க வைக்க விருப்பம் இல்லையாம். நாடகத்தைவிட அதிகப் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்தால் ஆரம்ப காலத்தில் போயிருப்பேன். ஆனால் அனுபவம், மக்கள் தொடர்பு அதிகமானதும் நாடகத்தில் நடிப்பது மனத்துக்குப் பிடித்த தொழிலாக மாறிவிட்டது என்கிறார். கணவரும் நடிகர் என்பதால் பெரும்பாலும் இவரும் இவருடைய கணவரும் ஒன்றாகத்தான் செல்வார்களாம். பாதுகாப்பிற்காக யாரும் உடன் வரத் தேவையில்லை என்கிறார்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத் துறையில் அறிமுகப்படுத்தியவர் மதுரையைச் சேர்ந்த மாசிலாமணி என்ற நாடக ஆசிரியர். 8 வயதில் நாடகத்தில் பங்கு பெற ஆரம்பித்தார். நடிப்பதை முறையாகப் பயின்றேன் என்கிறார். இசக்கிமுத்து என்ற ஆசிரியர் இவருக்குப் பாடல்களைப் பயிற்றுவித்துள்ளார். இவர் முதலில் இசை நாடகத்தில் அறிமுகமாகிப் பிறகு அமெச்சூர் நாடகங்களிலும் பங்கு பெற்று உள்ளார். ஆனால் இவருக்கு இசை நாடகத்தில் தொடர்ந்து செல்வாக்கு இருந்து வரவே, அமெச்சூர் நாடகங்களில் பங்கு பெறுவதைக் குறைத்துக் கொண்டுள்ளார். இவருக்குப் பிடித்த வடிவமும் இசை நாடகம்தான்.

ஆண் நடிகர்களோடு சேர்ந்து நடிக்கும்போது பொதுவாகச் சிக்கல் ஏற்படுவதில்லை. சில ஆண் நடிகர்கள் பார்வையாளர்களிடம் புகழ்பெற வேண்டி, பெண் நடிகர்களிடம் தர்க்கத்தின் போது தேவை இல்லாதவைகளைக் கூறிப் பெண் நடிகர்களைத் தாழ்த்திப் பேசுவார்களாம். இதற்குப் பதிலாக இவரும் ஆண் நடிகரிடம் விட்டுக் கொடுக்காமல் பேசுவாராம். இவர் ஏற்கும் பாத்திரங்கள் அனைத்தும் மனத்துக்குப் பிடித்தே நிகழ்த்துகின்றார். பார்வையாளர்களுக்கு, இவர் சந்திரமதி பாத்திரம் ஏற்பது பிடிக்கும் என்கிறார்.

அமெச்சூர் நாடகங்களில் நடித்திருந்தாலும் புராணக்கதைகளே இவருக்குப் பிடித்தமானவை என்கிறார். இவர் ஆண் பாத்திரங்களை ஏற்றது இல்லை. சிறு வயதில் புலந்திரன், நல்லதங்காள் மகன், அரிச்சந்திரன் மகன் போன்ற பாத்திரங்களை ஏற்றுள்ளார். ஸ்திரீபார்ட் ஏற்றதிலிருந்து ஆண் பாத்திரம் ஏற்றது இல்லை என்கிறார்.

குழுவில் நடிப்பு அல்லாத பிற வேலைகள் செய்வதில்லை. அதற்கு நேரமும் இல்லை. சங்கம் தொடர்பான ஒருசில வேலைகளைச் செய்வேன். சங்க உறுப்பினராக்கும் குழுவில் உறுப்பினராக உள்ளார். இதில் அனுபவமும் ஆற்றலும் உள்ளவர் தான் தேர்வுக்குழு உறுப்பினராக இருப்பார்களாம்.

நடிப்பின்போது சிக்கல் ஏற்படுவது நாடகத்துக்கே உரியது என்கிறார். ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு மாதிரியாக அமையும். இவருடைய தம்க்கை நடனம் ஆடுவதில் புகழ் பெற்றவராக இருந்தபோது, இவரும் நடனம் ஆடும் பாத்திரம் ஏற்றுள்ளார். ஒரு நாடகத்தில், இவருடைய தமக்கை முதலில் செல்வதற்குப் பதிலாகக் குழு நிர்வாகம் இவரைப் போகச் சொல்லி இருக்கிறது. இவர் மேடைக்கு வந்ததும் பார்வையாளர்கள் கூச்சலிட்டு இவரை உள்ளே போகும்படியும், இவருடைய தமக்கையை வந்து நடனம் ஆடச் சொல்லியும் இருக்கின்றனர். இவருக்கு அழுகை வந்துவிட்டதாம். அடுத்த ஆண்டே - அதே கிராமத்தில் நடனம் ஆடி பார்வையாளரிடத்தில் பாராட்டுதல் பெற்றுள்ளார். இது போன்று பார்வையாளரைத் திருப்திப்படுத்த வேண்டிப் பல சிக்கல்களைச் சமாளிக்க வேண்டி உள்ளது என்கிறார். இந்தச் சிக்கல்கள் அனுபவம் ஆனவுடன், நடிப்பதற்கு ஏற்றதாக அமைந்து விடுகிறது என்கிறார்.

குழுவில் ஒருவருக்கொருவர் பாடலில் விட்டுக் கொடுத்து நடிப்போம் என்கிறார். ஒரு கதையில் அல்லது அந்தப் பருவத்தில் பார்வையாளர்களுக்குப் பிடித்த பாடல்கள் இருக்கும். இப்பாடல் நடிகர்கள் அனைவருக்கும் தெரியும். நடனம் ஆடும் பெண் நடிகர் மூன்று நான்கு பேர் இருந்தால் முதலில் மேடைக்குச் செல்கிறவர் எல்லாப் பாடல்களையும் பாடாமல் பின்னால் வருபவருக்கும் பாடல்களை விட்டுக் கொடுத்து நடிப்பது எங்களுக்கு இயல்பானதாக இருந்தது. ஆனால் இந்தக் காலத்தில் அவ்வளவு ஒற்றுமை இல்லை என்கிறார்.

சக நடிகருடன் சேர்ந்து நடிப்பது நம்முடைய பழக்க வழக்கங்களையும் பொருத்துத்தான் அமையும் என்கிறார். ஆண் நடிகர்களுடன் நடிக்கும்போது எந்த வேறுபாட்டுத் தன்மையும் இல்லாமல் நடிப்போம். ஒரே பகுதியில் நாடகம் நிகழ்த்துகின்ற காரணத்தினால் அனைவரும் பழகிவிடுகின்றனர். இது தொழிலாகவும் இருப்பதால் இயல்பாக நிகழ்ந்து கொண்டு இருக்கின்றது என்கிறார்.

சாந்தி, கே.வி.
வயது 31

29, 7ஆம் வீதி,
போஸ் நகர்,
புதுக்கோட்டை.

இவருடைய தந்தை நாடக அமைப்பாளர். தங்கை நடனமாடும் கலைஞராக உள்ளார். திருமணம் ஆனவர். 6 வயதில் மகன் உண்டு. கணவர் சிங்கப்பூரில் வேலை செய்கின்றார். தற்போது தாய் தந்தையுடன் வாழ்ந்து வருகின்றார். நாடகத்தின் மூலம் இவருக்குப் போதிய பணம் கிடைப்பதால், ஓரளவிற்குச் சிரமம் இல்லாமல் வாழ முடிகிறது என்கிறார்.

இவருடைய தந்தை நாடக அமைப்பாளராக இருப்பதால் இவர் நாடகத்தில் பங்கு பெறுவது குறித்து வீட்டில் எந்தச் சிக்கலும் ஏற்படுவதில்லை. இவருடைய தங்கையும் நடனக் கலைஞராக இருப்பதால் இவரை வித்தியாசப்படுத்திப் பார்ப்பதில்லை. நாடக ஒப்பந்தம் இவருடைய தந்தை மூலமாக நடைபெறும். இவர் நாடகம் நிகழ்த்த வெளியூர் போகும் போது இவருடன் பாதுகாப்பிற்காக எவரும் செல்வதில்லை. இவர் பொருளாதாரத்தில் சற்று உயர்ந்துள்ளதால் இவர் வீட்டிற்கு அருகில் உள்ளவர்கள் சுமுகமாக இருப்பதாகக் கூறுகிறார்.

நாடகத்தில் நடிப்பதால் குழந்தை வளர்ப்பு முறை பாதிக்கப்பட்டுள்ளது என்கிறார். தங்களோடு வைத்துக் கொள்ள முடிவதில்லையாம். எனவே, இருவருடைய குழந்தைகளை நாடகத்தில் நடிக்க அனுமதிக்கப் போவதில்லை என்கிறார். மாறாகப் பரதநாட்டியம் கற்றுத் தருகிறோம். நாடகத்தைவிட பரத நாட்டியத்திற்கு மதிப்பு அதிகம் ஆகையால், என்னுடைய மகனாவது மதிப்பாக இருக்கட்டும் என்கிறார்.

நாடகம் தொடர்பான அனுபவங்கள் :

இவர் நடனம் ஆடும் கலைஞராகப் பங்கேற்பதால், கதைத் தொடர்பான வசனம், அதற்கேற்ற தர்க்கம் இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மாறாகப் பிரபல திரைப்படப் பாடல்களைப் பாடி அதற்கேற்றாற் போல் நடனம் ஆடத் தேர்ச்சி பெற்றுள்ளார். வள்ளித் திருமணம், அரிச்சந்திரா

போன்ற கதைகளுக்கான முக்கியப் பாடலை மட்டும் தெரிந்து வைத்துள்ளார். பன்னிரெண்டு வயதிலிருந்து நடிப்பதால் பார்வையாளரின் ரசனைக்கு ஏற்றபடி நடிக்க முடிகிறது என்கிறார்.

தோழிப் பாத்திரம் ஏற்பது, நடனமாடும் பாத்திரம் ஏற்பது கதையின் பாத்திரத்தில் சிறியதாக அமைந்தாலும் நிகழ்த்துதலின் போது முக்கிய இடம் பெறுகிறது. இப் பாத்திரமேற்பவர் பார்வையாளருக்கு இன்ப நுகர்வுப் பொருளாக மாறிவிட வேண்டும். இரண்டு பொருள்பட வசனம் பேசுவது, பாலுணர்வைத் தூண்டும்படியான உடல் அசைவுகளைச் செய்தல் இப் பாத்திரங்களின் முக்கியச் செயல்பாடாகும். இதனால் இப் பாத்திரங்களை ஏற்பவர் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இக்கலைஞர் பன்னிரெண்டு வயதிலிருந்து பங்கேற்பதால் சிக்கல்களைச் சமாளிக்கக்கூடிய அனுபவம் உள்ளது என்கிறார். முக்கியப் பாத்திரங்களை ஏற்பவரைவிட நடனம் ஆடும் கலைஞர்களுக்கே பார்வையாளர் அதிக வரவேற்புக் கொடுக்கின்றனர். எனவே, எங்களுக்கு அதில் மகிழ்ச்சி இருக்கிறது என்கிறார்.

ஆண் நடிகர்களோடு சேர்ந்து நடிக்கும்போது பிரச்சனை தெரிவதில்லை. நடித்து முடித்த பிறகுதான் பிரச்சனைகள் தெரிகிறது. இவை எளிமையாகத் தீர்வு செய்யப்படுபவை என்பதால் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. குழுவில் எல்லோரும் உறுப்பினராக இருக்கின்ற காரணத்தினாலும், தந்தை நாடக அமைப்பாளராக இருக்கின்ற காரணத்தினாலும் குழுவில் சிக்கல் ஏற்படுவதில்லை.

இவருக்குப் பிடித்த பாத்திரங்கள் வள்ளி, நல்லதங்காள். பொதுவாக உடல்வாகு, நிறம், வயது இவைகளைப் பொறுத்துத் தான் நடனம் ஆடும் பாத்திரம் அல்லது தோழிப் பாத்திரம் கொடுக்கப்படும். இவர் இன்னும் இந்நிலையில் உள்ளதால் இவருக்கு இது போன்ற பாத்திரங்களையே கொடுக்கின்றனர். சிறிய வயதிலிருந்தே நடனம் ஆடுதல் அல்லது தோழிப் பாத்திரங்களை ஏற்றுள்ளதால் பிடித்த வடிவம் ஸ்பெஷல் நாடகம். பிடித்த கதையம்சம் புராணம் என்கிறார்.

ஒப்பனைகள் அவரவர் சொந்தமாக வைத்துள்ளதால், ஒப்பனை செய்து கொள்வதும் இந்நடிகரின் விருப்பத்திற்கேற்பச் செய்து கொள்கிறார். நடனம் ஆடும் பாத்திரம் ஏற்பதால் நிஜ வாழ்க்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்கிறார். நடனம் ஆடும் போது நம்மைப் பார்க்கும் கண்ணோட்டத்தோடே, நிஜ

வாழ்க்கையிலும் பார்க்க வைக்கிறது. இதனால் மனச்சிக்கல் உண்டாகிறது. ஆனால் நாளடைவில் அது சரியாகிவிட்டது என்கிறார்.

பெண் கலைஞர்கள் கவர்ச்சிக்காக மட்டும்தான் என்ற கருத்து, நடனம் ஆடும் பாத்திரமாக இருக்கும்போது சரி என்று தான் தோன்றுகிறது. ஏன் என்றால், இப்பாத்திரம் குறிப்பிட்ட வயது உடையவர் மட்டும்தான் செய்ய வேண்டும். அதிலும் அழகும் நிறமும் அவசியமாக இருப்பதால் இக் கருத்து சரி என்று படுகிறது.

சார்லிதேவி, ஆர்.
வயது 25

தந்தை பெரியார் நகர்,
உசிலங்குளம் எட்டாம் வீதி,
புதுக்கோட்டை,
முத்தமிழ் நாடக நடிகர் சங்கம்.

இவர் திருமணம் ஆனவர். கணவர் சீன் கம்பெனி நடத்தி வருகிறார். நாடகத்தின் மூலம் வரும் பணம் குடும்பச் செலவுகளுக்குப் போதுமானதாக உள்ளதாம். சிக்கனமாக இருப்பதனாலும் மற்ற நாடகக்காரர்கள்போல் இல்லாமல் சேகரிக்கும் பழக்கம் இருப்பதனாலும் குடும்பத்தில் பற்றாக்குறை ஏற்படுவதில்லை என்கிறார்.

நாடகம் நடிப்பதால் குடும்பத்தில் சிக்கல் உண்டாவதில்லை. கணவர் சீன் கம்பெனி நடத்துகிறார். கணவருடைய சகோதரியும் நாடக நடிகை. எனவே, கணவர் நாடகம் தொடர்பானவற்றில் எதுவும் கூறமாட்டார் என்கிறார். நாடகத்தில் பங்கு பெறுவது பற்றி ஊரில் உள்ளவர்கள் பொறாமைப்படுகிறார்கள். நானும் கணவரும் சேர்ந்து சம்பாதிப்பது பொறாமையை ஏற்படுத்துகிறது. எதிரிலே ஒரு மாதிரியாகவும் இல்லாதபோது வேறொரு மாதிரியாகவும் பேசுவார்கள். நாடகம் நடிப்பவர்களைப் பற்றி என்னிடமே புகார் கூறுவார்கள். அதே போல் தான் நம்மைப் பற்றியும் மற்றவர்களிடம் புகார் கூறுவார்கள் என்று நினைப்பேன். இருந்தாலும் அவர்கள் நம்மைப் பற்றிப் பேசி ஒன்றும் செய்ய முடியாது என்று கருதிக் கண்டு கொள்வது இல்லை என்கிறார்.

நடிப்பது தொடர்பாகக் கணவருடன் சிக்கல் ஏற்பட்டதில்லை. கணவர் இருக்கின்றாரே, ஏதாவது நினைத்துக் கொள்வாரே என்று நடிக்கும் போது சில நேரங்களில் தயக்கம் ஏற்படும். கணவர் அதை கவனித்தால் அப்படி இருக்கக்கூடாது என்று கூறுவார். நடிக்க வந்து விட்டால் அதைக் எல்லாம் பார்க்க முடியாது. நீ உன் விருப்பத்திற்கு நடிக்க வேண்டும்; அப்போதுதான் நடிப்பு சிறப்பாக அமையும் என்று கூறுவார்.

இவருடைய குழந்தைகளை நாடகத்தில் நடிக்க வைக்க விருப்பம் இல்லையாம். படிக்க வைக்க வேண்டும் என்று நினைக்கிறோம். நாடகத் தொழிலில் வருமானம் போதுமானதாக

இருந்தாலும் நிரந்தர வருமானம் இல்லை. அதனால்தான் குழந்தைகளை வேறு தொழிலில் ஈடுபடுத்த விரும்புகின்றோம் என்கிறார். அதிகப் பணம் வரும் வேறு தொழில் தெரிந்திருந்தால் நாடகத்தில் நடித்திருக்க மாட்டாராம். நாடகத்தில் சம்பாதிக்கும் பணம் முழுவதும் கணவரிடம் கொடுக்கின்றார். இவர் விருப்பத்திற்காகச் செலவு செய்தாலும் கணவரிடம் தெரிவித்த பிறகே செலவு செய்கின்றேன் என்கிறார்.

நாடக ஒப்பந்தம் இவருடைய கணவர் கவனித்துக் கொள்கிறார். நாடகம் நிகழ்த்த வெளியூர்களுககுப் போகும்போது பெரும்பாலும் கணவர் உடன் வருவார்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத்தில் அறிமுகப்படுத்தியவர் இவருடைய தந்தையார். நடிப்பை தொழிலுக்காக தேர்ந்தெடுத்துள்ளார். புகழும் பணமும் கிடைத்ததும் விரும்பிய தொழிலாக மாறிவிட்டது. முதலில் ஸ்பெஷல் நாடகத்தில நடித்தேன் என்கிறார்.

ஆண் நடிகர்களோடு நடிக்கும்போது சில நேரங்களில் சிக்கல் ஏற்படும். ஆண் நடிகர் சிலர் திரைப்படப்பாடலை அதிகம் பாட மாட்டார்கள். பழைய ராஜபார்ட் நடிகர்கள் இசை நாடகப் பாடல்களைப் பாடுவார்கள். இசைப் பாடல்களை குறிப்பாக. சங்கரதாஸ் சுவாமிகளின் பாடலை சுதி தாளம் தப்பாமல் பாடுவது கடினம். உடன் நடிக்கும் ஆண் நடிகர் அந்தப் பாடலைப் பாடினால் பெண் நடிகர் திரைப்படப் பாடலைப் பாட முடியாது. அப்படிப் பாடினாலும் இளைஞர்கள் மட்டும் ரசிப்பார்கள். முதியவர்களும் நடுத்தர வயதினரும் திரைப்படப் பாடல் வேண்டாம்; நாடகப் பாடலையே பாடவேண்டும் என்று கூறுவார்கள். எனக்குத் தெரியாது என்றும் கூறு முடியாது. இது போன்ற நேரங்களில் சமாளிப்பதுதான் கடினமாக இருக்கும் என்கிறார்.

இவருக்கு வள்ளி பாத்திரம் மிகவும் பிடித்தமானவையாம். 'வள்ளித் திருமணம்' நாடகத்தில் திரைப்படப்பாடலை பாடுவது இன்று சாதாரணமாகி விட்டதால், யார் திரைப்பாடலை இனிமையாகப் பாடுகின்றார்களோ அவர்களுக்குப் பாராட்டுகள் வரும். வள்ளிப் பாத்திரத்தில்தான் தர்க்கம் பேச முடியும் என்கிறார். குழுவில் நடிப்பு அல்லாத பிற வேலைகள் செய்வதில்லை

பார்வையாளரிடத்திலும் நடிகருக்குச் சிக்கல் ஏற்பட வாய்ப்பு உண்டு. சில கிராமங்களில் நாடகம் ஏற்பாடு செய்பவர்கள். நாடகம் நடக்கும் போது வேறு பிரச்சனைகள் வராத அளவிற்குப் பார்த்துக் கொள்வார்கள். ஒருசில கிராமங்களில் இளைஞர்கள்

தங்களுடைய ரசிகர் பாடலைப் பாடும்போது ஆரவாரம் செய்வார்கள். சிலர் சத்தம் போட்டுப் பெயர் சொல்லி அழைப்பார்கள். மேடையில் இருக்கும்போது கை அசைப்பார்கள். ஆனால் இவற்றைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டு இயல்பாக நடித்துக் கொண்டு இருப்போம் என்கிறார்.

பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காகத்தான் நாடகத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்ற கருத்து தவறானது. ஆண் பெண் நடிகர்கள், இருவரும் சேர்ந்துதான் கதையை நடத்துகின்றார்கள். அப்படி இருக்கும்போது பெண் நடிகர் மட்டும் கவர்ச்சிக்காக என்பது தவறானது. பெண் நடிகர் ஒப்பனையில் பார்வையாளரைத் திருப்திபடுத்துவது போல், ஆண் நடிகர் இரண்டு பொருள்பட வசனம் பேசுவதில் திருப்திபடுத்துகின்றார். பெண் நடிகரை மட்டும் தனியாகச் சொல்வது சரியானது இல்லை என்கிறார்.

சாவித்திரி, வி.
வயது 41

ராஜகோபாலபுரம்,
வடமாம்பாக்கம் அஞ்சல்,
அரக்கோணம் தாலுக்கா,
வடாற்காடு அம்பேத்கர் மாவட்டம்.

இவர் 10 வயதிலிருந்து நாடகத்தில் நடித்து வருகிறார். காட்டு நாயக்கர் இனத்தைச் சேர்ந்தவர். கணவர் நாடக ஆசிரியர். நடிப்பதை விரும்பித்தான் தேர்ந்தெடுத்துள்ளார். கணவரே நடிக்கவும் பாடல் பயிற்சி பெறவும் காரணமாக இருந்தார் என்கிறார். முதலில் நாவல்ஸ் நாடக வடிவத்தில் சேர்ந்து நடித்துள்ளார். மகேந்திரவாடி ராதா கம்பெனியில் முதலில் சேர்ந்து நடித்திருக்கிறார்.

நாடகத்தின் மூலம் வரும் பணம் குடும்பச் செலவுகளுக்குப் போதவில்லை. கடன் வாங்கிச் செலவு செய்த பிறகு மீண்டும் அடுத்த சீசனில் கடனை அடைப்போம். இப்படியே வாழ்க்கை நடந்து கொண்டு இருக்கிறது என்கிறார். நாடகத்தில் நடிப்பதால் குடும்பத்தில் பிரச்சனை இல்லை. காரணம், கணவர் நாடக ஆசிரியராகவும் நடிகராகவும் இருக்கின்றார். நாடகத்தில் பங்கு பெறுவது குறித்து ஊரில் வித்தியாசப்படுத்திப் பார்ப்பதில்லை. நாடக நடிகர் என்ற வித்தியாசம் வீட்டில் யாரும் பார்ப்பதில்லை. நான் நடந்து கொள்ளும் விதம் அப்படி உள்ளது என்கிறார்.

நாடகத்தில் நடிப்பதால் குழந்தை வளர்ப்பு முறை பாதிக்கின்றது. தொடர்ந்து ஒரு மாதம் வீட்டிற்குப் போகாமலேயே வெளி ஊர்களில் நாடகத்தில் நடித்துக் கொண்டிருக்கும் போது, குழந்தையைப் பார்க்காமலே இருப்போம். மகன் எப்படிப் படிக்கின்றான், என்ன செய்கின்றான் என்று தெரியாது. வீட்டில் கவனித்துக் கொள்ள ஆள் இருந்தாலும், அம்மா பாசம் குழந்தைகளுக்குக் குறைகின்றது. கணவருடன் நடிப்பது தொடர்பாகச் சிக்கல் ஏற்படுவது இல்லை. எனக்கு நாடகத்தில் நடித்து அனுபவம் ஆகிவிட்டதால், கணவர் கருத்துக்களையோ மற்ற நாடக நுணுக்கங்களையோ சொல்வது இல்லை. நாடகத்தில் சேர்ந்த ஆரம்ப கால கட்டங்களில் பாடல் சரியாகப் பாடவில்லை என்றாலும், அரங்கத்திலேயே கணவர் என்னை அடிப்பார். யார் தடுத்தாலும் விடமாட்டார். சில நேரங்களில் கிராமத்து மக்களே

வந்து சமாதானம் செய்து விடுவார்கள். அப்படி எல்லாம் சிரமப்பட்டுப் பயிற்சி பெற்றதால்தான் இப்போது பிரபலமாக இருக்க முடிகிறது என்கிறார்.

நாடகத்தை விட அதிகப் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்திருந்தால் அல்லது தெரிந்திருந்தால் நாடகத்தில் நடித்திருக்க மாட்டேன் என்கிறார்.

நாடகத்தில் ஏற்கும் பாத்திரங்கள் நிஜவாழ்க்கையிலும் பாதிக்கின்றது என்கிறார். காளி பாத்திரம் அதிகமாகச் செய்வேன்; அதிலிருந்து பிடித்த தெய்வமாகவும் இஷ்ட தேவதையாகவும் காளியை வணங்கி வருகிறேன் என்கிறார்.

நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் முழுவதும் குடும்பத்திற்காகத்தான் செலவு செய்கிறேன்; கணவரிடம் கொடுத்து விடுகிறேன் என்கிறார். நாடக ஒப்பந்தம் குழுவினர் விருப்பத்திற்காகச் செய்வது இல்லை. குழு முதலாளி அல்லது ஆசிரியரின் விருப்பத்திற்காகத்தான் நடைபெறும். சில நேரங்களில் கணவரும் ஒப்பந்தம் செய்வார். பெரும்பாலும் ஒப்பந்தக்காரர்கள் என்று தனியாக உண்டு. அவர்களின் விருப்பப்படிதான் ஒப்பந்தம் நடக்கும் என்கிறார்.

நாடகம் நடத்த வெளியூர் போகும்போது கணவருடன் செல்வதால் பிரச்சனை ஏற்பட வாய்ப்பு இல்லை. ஒருசில நாட்களில் கிராமத்திற்குப் போக வேண்டிய கடைசி பஸ்ஸை விட்டு விடுவோம். நடக்க வேண்டும் இல்லை என்றால் சைக்கிளில் போக வேண்டும். இது மாதிரியான நேரங்களில்தான் நாடகத் தொழில் மீதே வெறுப்பு ஏற்படும் என்கிறார். நாடகம் நிகழ்த்தும் பகுதிக்குச் செல்வது பழகிப் போய் விட்டதால் பிரச்சனை இல்லை என்கிறார். ஓர் ஊரில் இருந்து மற்றோர் ஊருக்கு நாடகம் நிகழ்த்தப் போகும்போது நாடகம் முடிந்த காலையிலேயே நாடகம் நிகழ்த்த வேண்டிய ஊருக்குச் சென்று விடுவோம். அந்த ஊரிலேயே தூங்கிவிட்டு இரவு நாடகம் நடத்துவோம் என்கிறார்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத் துறையில் அறிமுகப்படுத்தியவர் இவாது கணவர். நடிப்பதைக் கணவரிடம் பயின்றார். புராணக்கதைகளுக்கான பாடல்களையும் கணவரே கற்றுக் கொடுத்துள்ளார். முதலில் நாவல்ஸ் நாடக வடிவத்தில் பங்கு பெற்றுள்ளார்.

ஆண் நடிகரோடு சேர்ந்து நடிக்கும்போது பெண் நடிகருக்கு சிக்கல் இருக்கின்றது என்கிறார். காதல் காட்சிகளை நடித்துக்

காட்டும்போது திரைப்படத்தில் இருப்பது போன்று செய்ய வேண்டும். காதல் காட்சியில் ஆண் நடிகருடன் சேர்ந்து நடனம் ஆட வேண்டும். சிலர் கையை இறுக்கமாகப் பிடிப்பார்கள். சிலர் மேலே வந்து விழுவார்கள். அப்படி நடிக்கும்போது ஒரு ஆண் நடிகர் என்மேல் விழுந்து அவருடைய பல் என் நெற்றியில் பட்டுக் காயம் ஏற்பட்டது. இன்னொரு முறை கையை இறுக்கமாகப் பிடித்த போது கை வளையல் நொறுங்கிக் கையில் காயம் ஏற்பட்டது. வில்லன் பாத்திரத்தில் நடிப்பவரிடமும் சாட்டை அடி வாங்க வேண்டும். சாட்டையால் எவ்வளவு அடி வாங்குகின்றோமோ அந்த அளவிற்குப் பார்வையாளரிடத்தில் குழு பாராட்டுப் பெறும். இதனால் வில்லன் நடிகர் பெண் நடிகரை அடிக்க வேண்டி உள்ளது. இது ஒவ்வொரு கதையிலும் இருக்கும் என்கிறார்.

இந்தச் சிக்கல்களைச் சிரமமாகக் கருதாமல் நடிக்க வேண்டும்; இதைத் தவிர்க்கவும் முடியாது. குழுவினர் பழகுவதில் வித்தியாசம் பார்ப்பதில்லை. அது மட்டுமல்லாமல், நாடகத்தில் அனுபவம் பெற்றிருப்பதால், இடைக்காலத்தில் வந்து சேர்ந்தவர்கள் அன்புடனும் மரியாதையுடனும் நடந்து கொள்வார்கள் என்கிறார். இவருக்குப் பிடித்த பாத்திரங்கள் பாதிக்கப்பட்ட பாத்திரம் என்கிறார். சோகமான காட்சிகளை நிகழ்த்திக் காட்டுவதென்றால் மிகவும் ஆழ்ந்து நடிப்பேன் என்கிறார்.

இவருக்குக் கதையில் முக்கியப் பாத்திரம் கொடுக்கின்றார்கள். பெண் பாத்திரத்தில் முதன்மைப் பாத்திரத்தைக் கொடுக்கின்றார்கள். நடு இரவில் நிகழ்த்தப்படும் தனி நிகழ்ச்சியையும் செய்யச் சொல்கின்றார்கள். கணவரும் உடன் நடிப்பதால் குறவன் குறத்தி வேடம் போட்டு நடிப்போம். கணவர் குறவனாகவும் நான் குறத்தியாகவும் நடிப்போம். இது பெரும்பாலான நாடகங்களில் கதையோடு தொடர்பு இல்லாமல் இருந்தாலும் நிகழ்த்திக் காட்டப்படும். நாடகம் நிகழ்த்த ஒப்பந்தம் செய்யும்போதே குறவன் குறத்தி ஆட்டம் ஆட வேண்டும் என்று கூறி விடுவார்கள். நடனம் ஆடுவதாலும் குறவர் மொழி பேசத் தெரிவதாலும் எனக்கு இந்தப் பாத்திரங்களைத் தொடர்ந்து கொடுக்கின்றார்கள் என்கிறார்.

ஒப்பனை என் விருப்பத்திற்கேற்பதான் செய்து கொள்கின்றேன். சில நேரங்கள் என்னுடைய கணவரும் சில கருத்துக்களைக் கூறுவார். அது பிடித்திருந்தால் ஏற்றுக் கொண்டு அதன்படி ஒப்பனை செய்து கொள்வேன். இல்லை என்றால் மறுத்து விடுவேன் என்கிறார். இவருக்குப் பிடித்த கதையம்சம்

புராணக் கதை அம்சமாகும். புராணக் கதைகளில்தான் நாடகத்துக்கு உரிய பாடல்கள் இருக்கிறது. ஆபாசமாக நடிக்க வேண்டியதில்லை என்கிறார். நடிப்பின்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களைச் சமாளிப்பது அனுபவம் பெற்றவர்களுக்குக்கூடத் தடுமாறும். காளியம்மன் பாத்திரம் ஏற்றிருக்கும்போது, காளி பாத்திரத்தோடு சுடுகாட்டிற்குச் சென்று சாம்பல் எடுத்து வர வேண்டும். இதைச் செய்யும்போதுதான் சிரமமாக இருக்கும். இதைப் பெண் நடிகர் செய்வதைவிட ஆண்நடிகர் செய்யும்போது எளிமையாக இருக்கும்.

பார்வையாளரிடத்திலிருந்து பாடல் பாடும்போதுதான் சிக்கல் ஏற்படுகிறது. கட்சித் தொடர்பான பாடல்களைப் பாடச் சொல்லுவார்கள். இதனால் சண்டையும் ஏற்பட்டிருக்கிறது. எல்லாப் பாடலையும் பாட முடியாது. இதைச் சமாளிப்பதுதான் கடினமாக இருக்கும் என்கிறார்.

பெண் பாத்திரத்தைப் பெண் நடிகர் ஏற்பதற்கும் ஆண் நடிகர் ஏற்பதற்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. ஆண் நடிகர் கவர்ச்சியாக நடிப்பார், உடல் அசைவுகள், வார்த்தை உச்சரிப்பு இவைகளைப் பார்வையாளரின் எதிர்பார்ப்பைவிட அதிகமாகக் கூடத் தரலாம். ஆனால் பெண் நடிகரால் ஆண் நடிகரைப் போல் செய்ய முடியாது. நான் வில்லி பாரதம் செய்யும் போது ஓரளவிற்கு ஆண் நடிகரைப்போல் நடிப்பேன்; மற்ற பாத்திரங்களைச் செய்வது சரிப்பட்டு வராது என்கிறார்.

பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காகக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்பதை மறுக்கின்றார். நடிக்கும்போது பெண் பாத்திரத்தைப் பெண் நடிகரைவிட ஆண் நடிகர்கள் தான் கவர்ச்சியாக நடிக்கின்றார்கள்; பெண் நடிகர்கள் இயல்பாகத் தான் நடிக்கின்றார்கள். ஒப்பனை செய்து கொள்வதும் ஆண் பாத்திரத்தோடு பழகுவதும் ஆண் நடிகர்தான் கவர்ச்சியாகவும் ஆபாசமாகவும் நடந்து கொள்கிறார்கள். பெரும்பாலான பெண் நடிகர்கள் இயல்பாகத்தான் நடிக்கின்றார்கள். அப்படி இருக்கும் போது எப்படிக் கவர்ச்சி என்று கூற முடியும் என்கிறார்.

சித்ரா, டி.ஏ.
வயது 40

செல்லாண்டியம்மன் கோயில் தெரு,
5, 3ஆவது சந்து,
திண்டுக்கல்.

இவர் வெள்ளாளப் பிள்ளைமார் இனத்தைச் சேர்ந்தவர். காதல் திருமணம் செய்து கொண்டுள்ளார். கணவர் ஒலி அமைப்பாளர். நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் குடும்பச் செலவுகளுக்குப் போதவில்லை என்கிறார். நாடகம் எல்லா நேரத்திலும் நிகழ்த்துவதில்லை. நாடகம் நிகழ்த்தப்படாத காலத்தில் வட்டிக்குப் பணம் வாங்கிக் குடும்பத்தை நடத்துவோம். நாடக சீசனில், வாங்கிய கடனை அடைப்போம். இப்படியே தான் மாறி மாறி வாழ்க்கை நடத்த முடிகிறது என்கிறார்.

நாடகத்தின் மூலமாகக் குடும்பத்தில் சிக்கல் உண்டாவதில்லை. கணவர் நாடகம் தொடர்பானவர்களுக்கு ஒலி அமைத்துக் கொடுப்பார். இதனால் நாடகச் சூழ்நிலையைப் புரிந்து கொண்டிருக்கிறார். நான் நடிப்பது தொடர்பாக வீட்டில் சண்டை வந்ததில்லை என்கிறார். நாடகத்தில் பங்கு பெறுவது பற்றி ஊரில் தவறாகத்தான் நினைக்கின்றார்கள். உறவினர்களும் எங்களை ஒதுக்கி வைத்துவிட்டார்கள். பொதுவாக எங்கள் இனத்தில் ஆண்களும் சரி, பெண்களும் சரி நாடகத்திற்கு நடிக்க வர மாட்டார்கள். என்னுடைய குடும்பச் சூழ்நிலை காரணமாக நாடகத்தில் நடிக்க வந்தேன். இதைப் புரிந்து கொள்ளாமல் உறவினர்கள் எங்களிடம் இயல்பாகப் பழகுவது இல்லை. இதைப்பற்றி எல்லாம் கவலைப்பட்டால் நம்முடைய நிலை இன்னும் மோசமாக ஆகிவிடும். அதனால்தான் எதைப்பற்றியும் கவலைப்படாமல் நாடகத்தில் நடித்துக் கொண்டு இருக்கின்றேன் என்கிறார்.

நாடகத்தில் நடிப்பதால் குழந்தை வளர்ப்பு முறை பாதிக்கவில்லை. நம்முடைய நெருங்கிய உறவினர்கள் யாராவது இருந்தால் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வார்கள். இல்லை என்றால் குழந்தை வளர்ப்பதற்குச் சிரமம் என்கிறார். என்னுடைய மகனையோ மகளையோ நாடகத்தில் நடிக்க வைக்க மாட்டேன். நாடகத் தொழிலில் நிரந்தரமான வருமானம் இல்லை.

நாடகத்தில் ஏற்கும் பாத்திரங்கள் நிஜ வாழ்க்கையில் பாதிக்காது. எந்தப் பாத்திரம் ஏற்றாலும் அதைப்பற்றி ஒப்பனை செய்யும் போது நினைப்பதுண்டு. அதற்கடுத்து மேடையில் பாத்திரத்தோடு வாழ்வது. இதைத் தவிர வேறு எங்கும் பாத்திரத்தை நினைத்துப் பார்ப்பதில்லை என்கிறார். நாடகத்தின் மூலமாகச் சம்பாதிக்கும் பணம் முழுவதையும் குடும்பத்திற்குச் செலவு செய்கின்றார்.

நாடக ஒப்பந்தம் இவருடைய விருப்பத்திற்கேற்ப செய்யப்படுகின்றன. நாடகம் நிகழ்த்த வெளியூர் போகும்போது சில நேரங்களில் கணவர் உடன் வருவார். வெளியூர் செல்வதற்குப் பாதுகாப்பு நடிகருக்கு அவசியம் இல்லை என்கிறார். நாடகம் நிகழ்த்தும் பகுதியும் தலைஞர்களுக்குப் பழக்கப்பட்டவையாக இருப்பதால் அப்பகுதிக்குச் செல்வது தொடர்பாகவும் பிரச்சனை இல்லை.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத்துறையில் அறிமுகப்படுத்தியவர் இவருடைய மாமா. ஏழு வயதில் இருந்து நாடகத்தில் பங்கு பெற்றுள்ளார். நடிப்பதை யாரிடமும் தனியாகப் பயிற்சி பெறவில்லை. மாமா பபூன் பாத்திரம் செய்வார். அவர் சிலவற்றைச் சொல்லித் தந்திருக்கிறார். முதலில் சிறுவயதில் நாடகத்தில் சேர்ந்த போது மூன்று ரூபாய் கொடுப்பார்கள். அந்த மூன்று ரூபாய் எனக்குப் பெரியதாக இருந்தது என்கிறார்.

ஆண் நடிகர்களோடு நடிக்கும்போது, நடனம் ஆடும்போது சிக்கல் இருந்தது. ஸ்திரீபார்ட் ஏற்றதிலிருந்து சிக்கல் தெரியவில்லை. நடனம் ஆடும்போது பபூன் நடிகர்கள் பார்வையாளர்களிடத்தில் பாராட்டுப் பெறவேண்டி உடன் நடிக்கும் பெண் நடிகர்களை என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். கட்டிப் பிடித்தல், காலை மேலே போடுதல், கூந்தலை இழுத்தல் போன்றவைகள் செய்வார்கள், இவை பெண் நடிகர்களுக்கு சிக்கலாகத் தோன்றும். நடிக்கும்போது இவை சிக்கலாகத் தோன்றாது, மனத்திற்குள் நினைத்தால் வெறுப்பாக இருக்கும் என்கிறார்.

குழுவினர் பழகுவது தொடர்பாக வித்தியாசம் பார்ப்பதில்லை. பெண் நடிகருக்குள்ளே மட்டும் வித்தியாசம் பார்ப்பார்கள். இது தொழில் பொறாமை என்கிறார். இவருக்குப் பிடித்த பாத்திரம் சத்தியவான் சாவித்திரியில் சாவித்திரி பாத்திரம். பிடித்த கதையம்சம் புராணம். சமூக நாடகங்களில்

நல்ல கருத்துக்கள் இருக்கின்றது. ஆனால் அதில் நடிப்பதற்குப் பிடிக்கவில்லை. பணம் அதிகம் கிடைக்கின்றது என்றாலும் குறிப்பிட்ட வயது வரைக்கும்தான் சமூக நாடகத்தில் நடிக்க முடியும். குறிப்பாக் நடிகர்கள் கலராகவும் அழகாகவும் இருக்கவேண்டும். அவர்களைப் பார்வையாளருக்கு எப்படி எல்லாம் மகிழ்ச்சியாகப் பார்க்க வைக்க முடியுமோ, அப்படி எல்லாம் பார்க்க வைப்பார்கள். ஆனால் ஸ்பெஷல் நாடகத்தில் அப்படி இல்லை. இதிலும் பார்வையாளர்களைத் திருப்திப்படுத்தவும் தொழில் போட்டிக்காகவும் நிறைய மாற்றத்துடன் செய்கிறார்கள். இருந்தாலும் சமூக நாடகங்களில் இருக்கும் ஆபாசம் ஸ்பெஷல் நாடகங்களில் இல்லை என்கிறார்.

இவர் இதுவரை ஆண் பாத்திரங்களை ஏற்றதில்லை. சிறு வயதில் சந்திரமதியின் மகன், புலந்திரன், நல்லதங்காளின் முதல் மகன் போன்ற ஆண் பாத்திரங்கள் (பால பாத்திரங்கள்) ஏற்றுள்ளார். குழுவில் நடிப்பதோடு சரி, மற்ற வேலைகளில் பங்கு பெறுவது இல்லை.

நடிப்பில் ஏற்படும் சிக்கல்கள் பெரும்பாலும் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி பார்த்துக் கொள்வோம். உடன் நடிக்கும் ஆண் நடிகரின் வசனத்தைக் கவனித்து அதற்குப் பதில் அளிக்க வேண்டும். சில ஆண் நடிகர்கள் அனுபவம் உள்ளவர்கள்; கேள்விகளைப் பாடல் மூலமாகவே கேட்பார்கள். சில பாடல்கள் புரியும்; சில பாடல்கள் புரியாது. இந்தச் சூழ்நிலையைச் சமாளிப்பதுதான் சிக்கலானதாகின்றது. புராணக்கதைகள் நிறையத் தெரிந்திருக்க வேண்டும். சில கதைகளைப் புதியதாகக் கூறும்போது பார்வையாளர்கள் பாராட்டுவார்கள். ஆண் நடிகர், பெண் நடிகர் இருவரும் ஒத்துப் போய் நடித்தால் பெண் நடிகருக்குச் சிக்கல் ஏற்பட வாய்ப்பு இல்லை. ஆனால் உடன் தோழிப் பாத்திரம் ஏற்றிருக்கும் நடனப் பெண் நடிகரிடமும் சில நேரங்களில் சிக்கல் ஏற்படுவதுண்டு. நடனம் ஆடுபவர் ஸ்திரீபார்ட்டைவிட, திரைப்படப் பாடலைப் பாடிப் பாராட்டு வாங்குவார். இல்லை என்றால் ஸ்திரீபார்ட்டிற்கு முன் பிரபலமான பாடலைப் பாடிவிடுவார். பார்வையாளர்களுக்குப் பிரபலமான பாடல்கள்தான் முக்கியம். ஸ்திரிபார்ட் பாடிய பாடலைத் திரும்பவும் பாட முடியாது. இது நடைமுறைச் சிக்கல். இது தொழில் பயத்தால் ஏற்படுகிறது என்கிறார்.

பார்வையாளர்களிடமிருந்து எந்தச் சிக்கலும் ஏற்படுவதில்லை. நாடகம் ஏற்பாடு செய்வோர் கலைஞர்களுக்கு ஏற்ற பாதுகாப்புக் கொடுப்பார்கள். சில கிராமங்களில்

இளைஞர்கள் மட்டும் தான் திரைப்படப் பாடலைப் பாடச் சொல்லிச் சப்தம் போடுவார்கள். அப் பாடலைப் பாடியவுடன் அமைதியாகி விடுவார்கள்.

பொதுவாகப் பெண் நடிகரின் வாழ்க்கையில் மகிழ்ச்சி இருக்காது. ஏதாவது ஒரு வகையில் துக்கம் இருந்து கொண்டே இருக்கும். அப்படி இருக்கும்போது மேடையில் துயரமான பாத்திரங்களான சாவித்திரி, நல்லதங்காள், சந்திரமதி போன்றவைகளை ஏற்கும் காட்சிகளில் எல்லாம் உண்மையாகவே அழுது விடுவேன். மேடையில் எவ்வளவு அழ முடியுமோ அவ்வளவு நேரம் அழுவேன். நம்மைப் பார்த்துப் பார்வையாளர்கள் அழுவார்கள். துக்கமான காட்சிகளில் மட்டும் பாத்திரத் தன்மையை உள்வாங்கும்போது வாழ்க்கையோடு பொருந்தி விடுகிறது. இதை ஆண் நடிகர் ஏற்றால் இம்மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை என்கிறார்.

பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காகத்தான் நாடகத்தில் சேர்த்துக் கொள்கிறார்கள் என்ற கருத்து இப்போதைக்குப் பொருந்தும். தொழில் போட்டி அதிகமாவதால் பெண் நடிகர் எப்படி வேண்டுமானாலும் நடிக்கத் தயார் என்று கூறுகிறார்கள். இதனால் ஸ்பெஷல் நாடகத்தில் கவர்ச்சி தானாக வந்துவிட்டது என்கிறார்.

சுகுணா, வி.
வயது 42

3, வடக்கு முனியப்பன் கோயில் தெரு,
கருங்கல்பட்டி,
சேலம் - 6.

இவர் செட்டியார் இனத்தைச் சேர்ந்தவர். கணவர் ரெகார்டு நடனம் ஆடுபவர். கலப்புத் திருமணம் செய்து கொண்டார். கணவருடன் பிரிந்து தற்போது தங்கை வீட்டில் வாழ்ந்து வருகிறார். நாடகத்தில் நடிப்பதை நிறுத்திக் கொண்டுள்ளார்.

நாடகத்தின் மூலம் வரும் பணம் குடும்பத்திற்குப் போதவில்லை என்கிறார். கணவர் குடிப்பழக்கம் உள்ளவராக இருந்த காரணத்தால், குடும்பத்திற்குச் செலவுகள் செய்யாமல் குடிப்பழக்கத்திலேயே பணத்தைச் செலவு செய்து இருக்கிறார். நாடகம், நடனம் இவைகளில் குடும்பத்திற்குப் பிரச்சனை இல்லை. ஆனால் தனிப்பட்ட முறையில் இவருக்குப் பிரச்சனை இருந்திருக்கிறது. இவருடைய கணவர் எதற்கெடுத்தாலும் அடித்துத் துன்புறுத்துவார். சந்தேகப்படும் குணம் உடையவர். மற்ற ஆண் நடிகர்களிடம் பழகினாலும் அல்லது பேசினாலும் வீட்டில் குடித்துவிட்டுத் துன்புறுத்தி இருக்கிறார். நடனம் ஆடும் பெண்ணாக இருந்தபோது கணவரே கருக்கலைப்பு செய்யும்படி துன்புறுத்தி இருக்கிறார். கருவுற்றால் ஆறு மாதம் தொழில் பாதிக்கப்படும் என்று பயந்து கருக்கலைப்பு செய்திருக்கிறார். இவர் கருக்கலைப்புக்குச் சம்மதிக்கவில்லை என்றாலும் அடித்துத் துன்புறுத்தி கருக்கலைப்புக்குச் சம்மதம் வாங்கிக் கருக்கலைப்புச் செய்துள்ளார். இது போன்று ஆறு முறை இவர் கருக்கலைப்புச் செய்துள்ளார்.

நாடகத்தில் பங்கு பெறுவது குறித்து இவர் வாழும் பகுதியில் உள்ளவர்கள் பழகுவதில் வித்தியாசம் காட்டுவது இல்லை. ஆனால் நடனம் ஆடும் பெண்ணாக இருந்தபோது எனக்கு உரிய மரியாதையை யாரும் கொடுக்கவில்லை. ஸ்பெஷல் நாடகத்திற்கு வந்த பிறகுதான் நிலைமை மாறி அமைந்தது. எல்லார் போலவும் என்னையும் மதித்தார்கள் என்கிறார்.

நடிப்பது தொடர்பாகவும் கணவருடன் சிக்கல் ஏற்படும். நடனம் ஆடிக் கொண்டிருக்கும்போது கணவரும் உடன் வருவார்.

அவர் விருப்பத்திற்கு ஏற்றபடி நடனம் ஆடினால் அமைதியாக இருப்பார். என் விருப்பப்படி ஆடினால் சந்தேகப்படுவார். அன்றைக்கு வீட்டில் தகரார்று ஏற்படும். இது எனக்கும் பழகிப்போய் விட்டதால் துன்புறுத்தாதபடி இருப்பதற்காக, கணவரின் குணத்திற்கு ஏற்றபடி நடந்து கொள்வேன் என்கிறார்.

நாடகத்தைவிட அதிகம் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்திருந்தால் நடித்திருக்க மாட்டேன். நாடகத்தில் நடிக்கும் பாத்திரங்கள் நிஜ வாழ்க்கையிலும் பாதிப்பு ஏற்படுத்தவில்லை. நாடகத்தில் நடிக்கும் பாத்திரத்தை வீட்டில் நினைத்துப் பார்த்ததில்லை. நாடகத்தின்மூலம் சம்பாதிக்கும் பணம் முழுவதும் இவர் விருப்பத்திற்கேற்பச் செலவு செய்வதில்லை. கணவரின் விருப்பத்திற்கே செலவு செய்து கொள்வார். நாடக ஒப்பந்தம் கணவர் பார்த்துக் கொள்வார். இவருடைய விருப்பத்திற்காக ஒப்பந்தம் நடைபெறுவதில்லை. நடிக்க வெளியூர்களுக்குப்போகும் போதும் பாதுகாப்பிற்காகக் கணவரே உடன் வருவார். இவரைத் தனியாக நாடகம் நிகழ்த்த அனுப்பியது இல்லை என்கிறார்.

நாடகப் பின்புலம் :

இவர் முதலில் பாட்டுக்கு நடனம் ஆடுபவராக இருந்திருக்கிறார். வேலுச்சாமி என்பவர் ஸ்பெஷல் நாடக வடிவத்தில் நடனம் ஆடும் பெண் நடிகராக இணைத்துள்ளார். நடனம் ஆடுவது, நாடகத்தில் நடிப்பது விரும்பித் தேர்ந்தெடுக்கவில்லை. குடும்பத்தில் வேறு வழியில்லாமல் இத்தொழிலுக்கு அனுப்பினார்கள் என்கிறார்.

ஆண் நடிகர்களோடு நடிக்கும் போது சிக்கல் ஏற்பட வாய்ப்புக் குறைவு. ஆனால் நடனம் ஆடும் பெண் பாத்திரத்தில் இருக்கும் போது நிறைய சிக்கல்கள் இருக்கிறது. ஆண் நடிகர் மனத்திற்குப் பிடித்த காட்சிகளுக்குப் பார்வையாளரை உற்சாகப்படுத்த திரைப்படத்தில் வருவது போன்ற உடல் அசைவுகளைச் செய்ய முயற்சிப்பார்கள். பெண் நடிகரைப் பார்வையிடத்திலிருந்து எப்படி உற்சாகப்படுத்த வைக்க முடியுமோ அப்படி உற்சாகப்படுத்த வைப்பார்கள். இம் முயற்சிகள் பெண் நடிகருக்குப் பெரும் சிக்கலாக இருக்கும் என்கிறார்.

குழுவினர், நடனம் ஆடும்போது ஒரு மாதிரியாகவும் ஸ்பெஷல் நாடகத்தில் பங்கேற்றபோது ஒரு மாதிரியாகவும் பழகினார்கள். அவர்கள் பழகும் முறைகளிலேயே வித்தியாசம் தெரிந்தது என்கிறார். ஒப்பனை இவர் விருப்பத்திற்கேற்பச் செய்து

கொண்டு இருந்திருக்கிறார். ஆனால் நடனம் ஆடிக்கொண்டிருந்த போது கணவரின் கருத்துரைக்கு ஏற்பவே ஒப்பனை செய்து கொள்வார். கணவரின் மனத்திற்குச் சரி என்று பட்டதைத்தான் செய்ய வேண்டும். அப்படிச் செய்யா விட்டால் வீட்டில் சண்டை உண்டாகும்.

இவருக்குப் பிடித்த கதையம்சம் புராணம். புராணக் கதையில்தான் ஒப்பனை, நடிப்பு, வசனம் இவைகளை யாருடைய சொந்த விருப்பத்திற்காகவும் செய்ய முடியாது. கதைகளில் இருப்பதை அப்படியே கூறவேண்டும், இதில் கணவரோ அல்லது மற்றவரோ குறுக்கிட முடியாது. எனக்கும் மனத்திற்கு நிம்மதியாக நடிக்கத் தோன்றும் என்கிறார். நாடகத்தில் நடிக்கும்போது பார்வையாளர்கள் பிரச்சனையாகத் தெரியவில்லை. ஆனால் நடனம் ஆடிக் கொண்டிருக்கும்போது மேடையில் நடனம் ஆடுபவரைப் பார்வையாளர்கள் தரக்குறைவாக மதிப்பிட்டுப் பேசுவார்கள்.

பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காக நாடகத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்பது நாடகத்தைப் பொறுத்த வரையில் தவறாக இருக்கலாம். ஆனால் நடனம் ஆடும் குழுவில் பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காகத்தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்று கூற வேண்டும்.

சுகுணாராணி
வயது 35

57, சுண்ணாம்புக்காரத் தெரு,
மதுரை – 1.

இவர் சௌராஷ்டிரா இனத்தைச் சேர்ந்தவர். திருமணம் ஆகி இரண்டு குழந்தை பிறந்த பிறகு கணவர் இறந்துவிட்டார். தற்போது சகோதரியுடன் வாழ்ந்து வருகிறார்.

தற்போது சகோதரியின் வீட்டில் வாழ்ந்து வருவதால், நாடகத்தின் மூலம் பெறும் பணம் வாழ்க்கையை நடத்திச் செல்லப் போதுமானதாக இருக்கின்றதாம். ஆனால் தனிக்குடும்பம், பிள்ளைகளின் படிப்புச் செலவு என்று செலவு அதிகமானால் நாடகத்தின் மூலம் கிடைக்கும் பணம் போதாது. தற்போது நான் ஆடம்பரமாக இல்லாததால் இந்த வருமானம் போதுமானதாக உள்ளது என்கிறார். நாடகத்தில் நடிப்பது தொடர்பாக வீட்டில் பிரச்சனை ஏற்படுவது இல்லை. சகோதரியின் கணவர் வீட்டார் நாடகத்தில் பங்கு பெறுபவர்களாக இருக்கின்ற காரணத்தினால், நடிப்பது தொடர்பாகச் சிக்கல் ஏற்படவில்லை. அப்படிச் சிக்கல் ஏற்பட்டாலும் தொடர்ந்து நாடகத்தில்தான் நடிப்பேன் என்கிறார்.

நாடகம் நடிப்பதால் குழந்தை வளர்ப்பு முறை பாதிக்கின்றது. என்னுடைய குழந்தைகளைப் பொருத்தவரை இன்னும் பாதிப்பு அதிகமாகிறது. என் கணவர் இருந்திருந்தால் அவர் பார்த்துக் கொள்வார். அதற்கும் வாய்ப்பு இல்லை. உறவினர்கள் இருப்பதால் ஓரளவிற்குச் சமாளிக்க முடிகிறது என்கிறார். என்னுடைய குழந்தைகளை நாடகத்தில் நடிக்க வைக்கமாட்டேன். நாடகத்தை விட அதிகப் பணம் கிடைக்கும் தொழில் கிடைத்தால் நாடகத்தை விட்டுவிடுவேன். இது எனக்காக அல்ல. என் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளவும் அவர்களின் படிப்புச் செலவுகளை நேரடியாகக் கவனித்துக் கொள்ளவும் ஏற்றதாக இருக்கும் என்கிறார்.

நாடகத்தில் ஏற்கும் பாத்திரங்கள் நிஜ வாழ்க்கையிலும் பாதிக்கின்றது. நடனம் ஆடும் பெண் என்பதால் இந்நிலை ஏற்படுகிறது. சாதாரணமாக, பாத்திரத்தை ஏற்று நடிப்பவராக இருந்தால் அப்பாத்திரம் நிஜ வாழ்க்கையில் பாதிக்க வாய்ப்பு இல்லை. ஆனால் நடனம் ஆடும் பாத்திரத்தின் செயல்பாடுகள்

இந்நிலையை அடைய வைக்கிறது. நடனம் ஆடுபவர், இரண்டு பொருள்படும் வசனம் பேசுவது, பாலுணர்வைத் தூண்டும் படியான உடல் அசைவுகளைச் செய்து காட்டுவது போன்றவைகள் பார்வையாளரிடத்தில் நடனம் ஆடுபவரைப் பற்றிய கண்ணோட்டம் தவறாக அமைகிறது. இதனால் நடனம் ஆடுபவரைப் பார்வையாளரும் குறிப்பிட்ட அளவில் இருந்து வித்தியாசப்படுத்திப் பார்க்க வைக்கின்றது. சாதாரணமாக வீட்டில் உள்ளபோது இதைப்பற்றிய கவனம் இல்லை என்றாலும், வெளியில் என்னைப் பார்ப்பவர்களுக்கு நான் சாதாரணமான பெண் என்று எண்ணத் தோன்றாது. நடனம் ஆடுபவள் என்றே என்னைப் பார்க்கின்றார்கள். இதை நான் பலமுறை உணர்ந்துள்ளேன்' என்கிறார்.

நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் என் விருப்பத்திற்குச் செலவு செய்கின்றேன். கணவர் இருந்தபொழுது கணவரிடம் கொடுத்துவிடுவேன். தற்போது எல்லாவற்றையும் நானே கவனித்துக் கொள்கிறேன் என்கிறார். நாடக ஒப்பந்தம் சகோதரியின் கணவர் கவனித்துக் கொள்கிறார். நாடகம் நடத்தும் பகுதிக்குச் செல்வது எளிதாக நடக்கின்றது. நாடகம் ஏற்பாடு செய்தவர் அல்லது நாடக அமைப்பாளர் குழுவை ஒருங்கிணைத்துச் செல்வது வழக்கம். அப்படிச் செல்லும்போது என்னுடன் பாதுகாப்பிற்காக யாரும் உடன் வருவதில்லை. வெளியூர் செல்வதால் எந்த விதமான சிக்கலும் இல்லை என்கிறார்.

நாடகப் பின்புலம் :

நடிப்பை, தொழிலுக்காக விரும்பித் தேர்ந்தெடுத்தேன். நடிக்க யாரிடமும் தனியாகப் பயிற்சி பெறவில்லை. நடனம் ஆடி முடித்ததும் குழுவினரிடம் கருத்துக்கள் கேட்டு குறைகளைச் சரி செய்து கொள்வேன். முதலில் ஸ்பெஷல் நாடக வடிவத்தில் சேர்ந்து தொடர்ந்து இவ்வடிவத்திலேயே நடித்து வருகிறேன் என்கிறார்.

ஆண் நடிகரோடு நடிக்கும்போது நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுவது நம்மைப் பொருத்துதான் அமையும். நடிகர்களின் பழக்கம்தான் சிக்கல் இல்லாமல் நடிக்க வைக்கின்றது. நடனம் ஆடும் பெண் நடிகருக்கு ஆண் நடிகருடன் சிக்கல் ஏற்பட வாய்ப்பு அதிகம். கோமாளிப் பாத்திரம் ஏற்றிருக்கும் ஆண் நடிகருடன் இரண்டு பொருள்பட வசனம் பேசுவது, பாலுணர்வைத் தூண்டும் படியான உடல அசைவுகளைச் செய்து காட்டுவது போன்றவைகளைச் செய்யவேண்டும். இச்சூழலில் கோமாளிப்

பாத்திரம் ஏற்றிருக்கும் நடிகர் நண்பராக இருந்தால் சிக்கல் இல்லாமல் நிகழ்த்திவிடலாம். நண்பர் அல்லது அறிமுகம் இல்லாதபோது ஆண் நடிகர் பெண் நடிகரை வேறுவகையில் உபயோகப்படுத்துவார். மனத்திற்குப்பட்டபடி எல்லாம் நடந்து கொள்வார். இது பெண் நடிகருக்குப் பெரும் சிக்கலாக அமைந்து விடுகிறது என்கிறார்.

இவருக்குப் பிடித்த பாத்திரம் நல்லதங்காள் பாத்திரம் என்கிறார். இவர் நடனம் ஆடும் கலைஞராக இருக்கின்ற காரணத்தினால் இவருக்கு, நடனம் ஆடுபவராகவும் அல்லது தோழி பாத்திரமும் கொடுக்கின்றனர். ஒப்பனை இவர் விருப்பத்திற்கேற்பதான் செய்து கொள்கின்றார். நடனம் ஆடும் பெண் நடிகராக இருக்கின்ற காரணத்தினால் ஸ்திரீபார்ட் பாத்திரம் ஏற்பவருக்கும் இவருக்கும் போட்டி ஏற்படும் என்கிறார்.

நடிப்பின்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் நடனம் ஆடும் பாத்திரங்களை ஏற்பவருக்கு அதிகம். பார்வையாளருக்கும் இவருக்குமான தொடர்பு இதைத் தீர்மானிக்கிறது. இவர் செய்யும் செயல்பாடுகள் பார்வையாளர் அனைவருக்கும் பிடித்தவையாக இருக்க வாய்ப்பு இல்லை என்கிறார்.

இரண்டு பொருள்படப் பேசும் வசனம் ஒருசிலருக்குப் பிடிக்காது; ஒரு சிலருக்குப் பிடிக்கும். பிடிக்காதவர்கள் நடிக்கும்போதே எழுந்து சண்டை போடுவார்கள். ஊர் மக்களே அதை அமைதிப்படுத்துவார்கள். திரைப்படப் பாடல்களுக்கு ஏற்றபடி நடனம் ஆடும்போது சில பார்வையாளர்கள் நடனத்தைக் குறைகூறி, திரைப்படத்தில் வருவது போன்று செய்யச் சொல்வர். இல்லை என்றால் சத்தம் போடுவார்கள். சில நேரங்களில் பார்வையாளர்களுக்கு இடையேயும் குழப்பம் வரும். அதுபோன்ற நேரங்களில் நடிகருக்குக் கதை நிகழ்த்துவதில் கவனம் செல்லாது. சில நேரங்களில் அச்சமாகவும் இருக்கும் என்கிறார்.

பெண் பாத்திரத்தை ஏற்கும்போது, பாத்திரத் தன்மையை உள்வாங்கும்போது நடனம் ஆடுபவராக இருப்பதால் பல மாற்றங்கள் ஏற்படுகிறது. இயல்பாக நாம் பேசும்போது இரண்டு பொருள்படும் வசனம் பேச வேண்டியதில்லை. ஆனால் மேடையில் ஒவ்வொரு செயல்களின் வசனங்களுக்கும் இரண்டு பொருள் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். உடல் அசைவுகள் சாதாரணமானதைவிட வேறு மாதிரியாகவும், அது பாலுணர்வைத் தூண்டும்படியாகவும் இருக்க வேண்டும் என்பது இப்பாத்திரத்திற்கான தற்காலச் செயல்பாடாகின்றது. இவை ஏதாவது ஒருவிதத்தில் மனத்தை பாதிக்கச் செய்யும் என்பது உண்மை என்கிறார்.

பெண் பாத்திரத்தைப் பெண் ஏற்பதற்கும் ஆண் ஏற்பதற்கும் அதிகம் வேறுபாடு இருக்கின்றது. ஆண் நடிகர் (கோமாளிப் பாத்திரம் ஏற்பவர்) பெண் வேடம் போன்று ஒப்பனை செய்து கொண்டு வருவார். அவர் சேலையைக் கால் முட்டிப் பகுதிக்குமேல் தூக்குவதும், மார்புச் சேலையை விலக்கிக் கொள்வதும் செய்வார். இதைப் பெண் நடிகர் செய்ய முடியாது. பார்வையாளர்கள் இரண்டையும் வித்தியாசப்படுத்திப் பார்க்கின்றார்கள் என்கிறார்.

பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காகக் குழுவில் சேர்த்துக் கொள்கிறார்கள் என்ற கருத்து தவறானது. ஆண்களும் கவர்ச்சியாக நடிக்கின்றார்கள். இதைப் பாத்திரத்தின் மூலமாகப் பார்க்க வேண்டும்; நடிகர்களை வைத்துப் பார்ப்பது சரியல்ல என்கிறார்.

சுந்தரலட்சுமி, கலைமாமணி டி.ஏ.
வயது 77

11ஆ, சீசிரோடு, வெங்கடாசலபுரம், மதுரை–1.

இவர் தற்போது நாடகத்தில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவர் வெள்ளாளர் சாதியைச் சேர்ந்தவர். தாய் மாமனைத் திருமணம் செய்து கொண்டார். தந்தை இறந்தவுடன் மாமா இவரை வளர்த்தார். மாமன் நாடக நடிகரானதால் இவரையும் நாடகத்தில் பங்குபெற வைத்தார். நாடகத்தின் மூலம் பெறும் பணம் அந்தக் காலத்தில் குடும்பச் செலவுகளுக்குப் போதுமானதாக இருந்தது. நாங்களும் ஆடம்பரம் இல்லாமல் வாழ்ந்தோம். அதனால் வறுமை இல்லாமல் வாழ்ந்து வந்தோம் என்கிறார்.

நாடகத்தில் பங்கு பெற்றதால் குடும்பத்தில் சிக்கல் ஏற்பட்டது. என்னுடைய மாமன் மட்டும்தான் நாடக நடிகர். மற்றவர்கள் நாடகத் தொடர்பு இல்லாதவர்கள். எனவே புரிந்து கொள்ளாத சூழ்நிலை உருவாகி, குடும்பத்தில் சிக்கல் ஏற்பட்டு, என்னை நடிப்பதில் இருந்தே சிறிது காலம் நிறுத்தி வைத்திருந்தனர். பிறகு ஆண் பாத்திரம் ஏற்று நடித்ததால் தொடர்ந்து நடிக்க அனுமதித்தார்கள். நாடகத்தில் நடிப்பதால் குழந்தை வளர்ப்பு முறை பாதித்துள்ளது. நேரடியாகக் கவனிக்க முடிவதில்லை. உறவினர்கள் கவனித்துக் கொண்டாலும் போதிய அரவணைப்பு இருக்காது; பெற்றவருக்கும் மனம் கேட்காது. நாடகத் தொழிலில் இருப்பதால் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு இருக்க வேண்டிய கட்டாயம் இருந்தது என்கிறார்.

நாடகத்தைவிட அதிகப் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்திருந்தால், ஆரம்பத்தில் நடித்திருக்க வாய்ப்பு இல்லை. இருந்தாலும் நாடகத்தொழில் மனத்திற்கு நிறைவு தரும் தொழிலாக உள்ளது. இதில் கிடைக்கும் மரியாதையும் புகழும் எங்களுக்கு வேறு தொழிலில் கிடைக்காது என்கிறார். நாடகத்தில் ஏற்கும் பாத்திரங்கள் நிஜ வாழ்க்கையில் அனுபவம் காரணமாகப் பாதிக்கின்றது. இவர் பெரும்பாலும் ஆண்பாத்திரம் ஏற்பவராக இருக்கின்ற காரணத்தினால், மனத்தில் ஆணாக நினைத்துக் கொண்டு மேடையில் செயல்படுவேன் என்கிறார். இதனால் தைரியமும் இயல்பாக வருகின்றது. நம்முடைய பழக்க வழக்கங்களும் மாறி அமையும் என்கிறார்.

நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணத்தை மாமனிடம் கொடுத்துவிடுவேன். செலவுகளை மாமன் பார்த்துக் கொள்வார். நாடகம் நிகழ்த்த வெளியூர்களுக்குப் போகும்போது பாதுகாப்பிற்காக மாமன் வருவார் என்கிறார்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத்தில் அறிமுகப்படுத்தியது இவருடைய தாய் மாமன். முதன் முதலில் மலேசியா அரங்கசாமி நாயுடு கம்பெனியில் நடித்தார். பொட்டக்கண் நடேசன் பிள்ளை என்ற ஆசிரியர் இவருக்குப் பாடம் சொல்லித் தந்தவர். இசை நாடகத்தின் மூலம் பயிற்சி பெற்று, தொடர்ந்து இசை நாடகங்களில் நடித்து வந்துள்ளார்.

ஆண் நடிகர்களோடு நடிக்கும்போது பல பிரச்சனைகள் வரும். அவைகளைத் தெரியாதபடி நடிப்பதுதான் முக்கியம். இப்பிரச்சனைகள் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி பார்த்துக் கொள்வோம் என்கிறார். இவர் ஸ்திரீபார்ட் ஏற்று நடிக்கும்போது உடன் நடித்த ஆண் நடிகர் தோளின்மேல் கையைப் போட்டதைப் பார்த்த இவருடைய மாமன், அன்று முதல் நாடகத்தில் பங்கேற்பதை நிறுத்திவிட்டிருக்கிறார். வேறோர் ஆண் நம்முடைய பெண்ணிடத்தில் காதல் மொழி பேசுவதும், மேலே கை போடுவதும் நன்றாக இல்லை என்று இவருடைய மாமன் கூறுவாராம். இதனால் சிறிது காலம் நாடகத்தில் பங்கேற்காமல் இருந்து வந்திருக்கிறார். உடன் நடிக்கும் ஆண் நடிகரால் சிறிது காலம் என் நாடக வாழ்க்கை நின்றுபோனது என்று குறைபட்டுக் கொள்கிறார்.

சிறிது கால இடைவெளிக்குப் பிறகு, இவர் ஆண் பாத்திரம் ஏற்று இன்னொரு பெண் நடிகருடன் பேசுவதும் தொடுவதும் சாதாரணமாக இருந்ததால், இவருடைய மாமன் இவரைத் தொடர்ந்து நடிக்க வைத்துள்ளார்.

குழுவினர் அனைவரும் ஒற்றுமையாக இருப்போம் என்கிறார். எல்லாரும் மிகுந்த அக்கறையுடன் நடந்து கொள்வார்கள். இவர் அரங்கத்தில் ஒப்பனை செய்து கொள்ளும்போது, பார்வையாளர்கள் வேடிக்கை பார்த்தால் சக நடிகரே பார்வையாளரைக் கேள்வி கேட்பார்கள். குழுவினர் அனைவரும் மிகுந்த ஒற்றுமையோடு இருப்போம். அனைவரும் ஒன்றாகப் படுப்போம். அதில் மூச்சுக் காற்றுகூட மாறுபாடு தெரியாது என்கிறார்.

இவருக்குப் பெரும்பகுதி ஆண் பாத்திரங்களையே கொடுத்திருக்கின்றனர். இவருக்கும் ஆண் பாத்திரம் ஏற்பது பழகிவிட்டதால் தொடர்ந்து நடித்துக் கொண்டு இருந்திருக்கின்றார். ராஜபார்ட் பாத்திரம் ஏற்பதால் முக்கிய ஆண் பாத்திரங்களைச் செய்துள்ளார். சில நேரங்களில் பெண் பாத்திரம் கொடுத்தால் எனக்கு ஒப்பனைகூடப் பெண் பத்திரம் போல் செய்யத்தெரியாது உடன் இருக்கும் பெண் நடிகர் ஒப்பனை செய்து விடுவார். ஒப்பனைகள் இவருடைய விருப்பத்திற்குகேற்பதான் செய்து கொள்வார். ஆனால் பெண் நடிகர் ஆண் பாத்திரம் ஏற்பதால் கவனமாக ஒப்பனை செய்ய வேண்டியுள்ளது; அதற்கேற்றபடி செய்து கொள்வோம் என்கிறார். இவருக்குச் சங்கரதாஸ்சுவாமிகளின் கதைகள் அத்தனையும் பிடித்தவைகளாம்.

பெண் நடிகர் ஆண் பாத்திரங்களை ஏற்பது கடினமானது என்கிறார். பெண் போல நடிக்கப் பயிற்சி தேவையில்லை. ஆனால் ஆணாக நடிக்கப் பயிற்சி தேவை என்கிறார். குரல், உடை, நடை, பார்வை இவைகளை ஆண்கள் போலவே செய்து காட்ட வேண்டும். சில நேரங்களில் பார்வையாளர்களுக்குள் போட்டி ஏற்படும். சிலருக்குப் பெண் என்று கண்டுகொள்ளவே முடியாது. சிலர் போட்டியிட்டுப் பந்தயங்களும் கட்டுவார்களாம். இவர் ஆண் பாத்திரங்களை ஏற்று நடித்தாலும், உடன் இருக்கும் பெண் நடிகர்களுடன் சில வரன்முறைக்கு உட்பட்டுதான் நடிப்பாராம் இன்னொரு பெண் நடிகரைத் தொடாமலே நடிக்க தனியாகப் பயிற்சி எடுத்துக் கொண்டேன் என்கிறார்.

நான் ஆண் பாத்திரங்களை ஏற்பதால், .எனக்குப் பார்வையாளர்களிடத்திலிருந்து சிக்கல் ஏற்படுவதில்லை. பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காகத்தான் நாடகத்தில் பங்கு பெறுகிறார்கள் என்ற கருத்தை மறுக்கிறார். திறமை இருந்தால் வேறு எதுவும் தேவை இல்லை என்கிறார்.

சுமதி, ப.
வயது 32

57, சுண்ணாம்புக்காரத் தெரு,
மதுரை – 1.

இவருடைய கணவர் நாடக அமைப்பாளர். இவருக்கு ஒரு மகன் உள்ளார். தற்போது ஸ்திரீபார்ட் செய்து வருகிறார். எட்டு வயதில் நாடகத்தில் பங்கு பெற ஆரம்பித்துள்ளார். இவர் சௌராஷ்டிரர் வகுப்பைச் சேர்ந்தவர்.

நாடகத்தின் மூலம் பெறும் பணம் குடும்பச் செலவுகளுக்குப் போதும். ஆனால், நாடக நடிகரின் வாழ்க்கை முறைகளுக்கு எவ்வளவு சம்பாதித்தாலும் பணம் சரியாக ஆகிவிடுகிறது என்கிறார். நாடகத்தில் நடிப்பதால் இவருடைய குடும்பத்தில் சிக்கல் ஏற்படுவதில்லை. இவருடைய மாமியார் நாடக நடிகாராக இருந்தவர். கணவர் நாடக அமைப்பாளராக இருக்கிறார். இவருடைய தங்கையும் நாடக நடிகர். எனவே நாடகத்தில் நடிப்பது தொடர்பாகக் குடும்பத்தில் சிக்கல் ஏற்படுவதில்லை என்கிறார்.

நான் நாடகத்தில் பங்கு பெறுவதைத் தொழிலாகப் பார்க்கிறேன். நாடகத்தில் பங்கு கொள்வதுபற்றிப் பலர் கேவலமாகப் பேசலாம். அதைப்பற்றிக் கவலைப்படுவது இல்லை. இது ஒரு தொழில்; இந்த தொழிலில் நேர்மையாக இருந்து பணம் சம்பாதிக்க வேண்டும். தொழில் மரியாதை இருந்தால் இதில் எந்தவிதமான சிக்கல் ஏற்படுவதற்கும் வாய்ப்பு இல்லை என்கிறார்.

நாடகத்தில் நடிப்பதால் குழந்தை வளர்ப்பு முறை பாதிக்கின்றது. நாம் நடிப்பதில் எவ்வளவு சிரமங்கள் இருந்தாலும் அதைப் பற்றிக் கவலை கொள்ளாமல் குழந்தைகளை வளர்ப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். நாடகக்காரர்களுக்கு இது முடியாது போய்விடுகின்றது. குழந்தையை வளர்த்து, படிக்க வைத்து, வேலை வாங்கிக் கொடுப்பது என்பது சாதாரண குடும்பத்தில் இருப்பவருக்கே கடினமாகின்றது. கணவர் இதைக் கவனித்துக் கொள்கிறார். பள்ளியில் சேர்ப்பது, படிக்க வைப்பது போன்றவைகளில் கணவர் அக்கறை காட்டுகின்றார். இல்லை என்றால் நாடகம் நடிப்பவர்களுக்கு அவர்களுடைய குழந்தை வளர்ப்பு முறை கண்டிப்பாகப் பாதிக்கும் என்கிறார்.

நாடகத்தைவிட அதிகம் பணம் கிடைக்கும் வேறு தொழில் கிடைத்திருந்தால் நடிக்க வந்திருக்க மாட்டேன். குடும்பத்தில் பெரும்பாலானோர் நடிகர் என்பதால் எனக்கு இத்தொழில் எளிமையாக அமைந்துவிட்டது. இப்போது உள்ள சூழ்நிலைக்கு நாடகத்தில் பணம் கிடைப்பது போல் வேறு வேலையில் கண்டிப்பாகப் பணம் கிடைக்காது என்கிறார். இவருடைய குழந்தையை நாடகத்தில் நடிக்க வைக்க மாட்டேன் என்று கூறுகிறார். காரணம், நாடகம் நிரந்தரமான வருமானம் உள்ள தொழில் இல்லை. எவ்வளவுதான் பணம் கிடைத்தாலும் நிம்மதி இருக்காது; அமைதி இருக்காது என்கிறார். நாடகத்தில் ஏற்கும் பாத்திரங்கள் நிஜவாழ்க்கையில் பாதிப்பு ஏற்படுத்துவதில்லை. நடிப்பது வேறு; வாழ்க்கை வேறு. நான் நடிக்கும் பாத்திரங்களைப்பற்றி ஒருசில நேரங்களில் வீட்டில் உள்ளவர்களிடம் கருத்துக் கேட்பதுண்டு. ஆனால் பாத்திரமாக மாறுவது இல்லை. நடிக்கும்போதுகூட, நாம் உடன் நடிப்பவருக்கு ஈடுகொடுத்து நடிக்கின்றோமா என்ற கேள்விகள் மனத்தில் எழுந்து கொண்டு இருக்கும். எனவே நாடகத்தில் நடிக்கும்போது பாத்திரம் நம்மைப் பாதிக்காமல் பார்த்துக் கொள்வது நல்லது. நான் என்னை அந்த அடிப்படையில்தான் தயார் செய்து கொள்கிறேன் என்கிறார்.

நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணத்தைக் கணவரிடம் கொடுத்து விடுகிறேன். என்னுடைய செலவுகளுக்குத் தேவைப்பட்டால் தனியாக எடுத்துக்கொள்வேன். என்னுடைய தனிப்பட்ட செலவுகளுக்கு எவரும் தடை செய்வது இல்லை என்கிறார். நாடகம் ஒப்பந்தம் என்னுடைய விருப்பத்திற்கேற்ப நடக்கின்றது. என் கணவரும் இதைப் பார்த்துக்கொள்வார். நாடகத்தில் நடிக்க வெளியூர்களுக்குப் போகும்போது பாதுகாப்பிற்காக எவரும் உடன் வருவதில்லை. சில வேளைகளில் கணவர் வருவார். கணவர் நாடக அமைப்பாளராக இருப்பதால் நாடகம் நிகழ்த்தும் இடத்திற்குத் தொழில் ரீதியாக வருவார்.

நாடகப் பின்புலம் :

இவர் நடிப்பைத் தொழிலாக எண்ணித் தேர்ந்தெடுத்துள்ளார். நடிப்பதற்கு என்று யாரிடமும் தனியாகப் பயிற்சி எடுத்துக் கொள்ளவில்லை. நடனம் மட்டும் நடன ஆசிரியரிடம் பயிற்சி எடுத்துக் கொண்டுள்ளார். முதலில் ஸ்பெஷல் நாடகத்தில் நடிக்க ஆரம்பித்துள்ளார். முதலில் சிறு பாத்திரங்களை ஏற்று, பிறகு

நடனம் ஆடுபவராக மாறியுள்ளார். அதன்பிறகுதான் ஸ்திரிபார்ட், தலைமைப் பாத்திரம் ஏற்பவராக மாறி இருக்கிறார்.

இவர் அதிகமாக வள்ளித் திருமணம் நாடகத்தில் நடித்துள்ளார். ஆனால் அரிச்சந்திராவில் சந்திரமதி பாத்திரம்தான் மனத்திற்குப் பிடித்தது என்கிறார். ஆண் நடிகர்களோடு நடிக்கும்போது எந்தச் சிக்கலும் ஏற்படுவது இல்லை. சில ஆண் நடிகர்கள் தர்க்கத்தில் வரம்பு மீறிப் பேசுவார்கள். சிலர் மனத்திற்குப் பிடிக்காத வகையில் நடந்து கொள்வார்கள். அப்படி நடிப்பவர்களுடன் இனி நடிக்கக்கூடாது என்ற முடிவும் நாமே எடுத்துக் கொள்ளலாம். எந்த நடிகர் பிடிக்கவில்லையோ அவருடன் இனி நடிக்கமாட்டேன் என்று காலண்டரில் (நாட்குறிப்பேடு) எழுதி வைத்துவிட்டால், அவருடன் சேர்ந்து நமக்கு ஒப்பந்தம் செய்யமாட்டார்கள். இதனால் நடிகருக்கும் சிக்கல் இல்லை என்கிறார்.

இவருக்குப் பிடித்தவை புராணக் கதைகள். புராணக் கதைகளை (சங்கரதாஸ் சுவாமிகளின் கதை) அதிகம் நிகழ்த்திய காரணத்தினால், புராணக் கதைகளை நிகழ்த்தும் ஸ்பெஷல் நாடக வடிவம் பிடித்த வடிவம் என்கிறார். இவர் அமெச்சூர் நாடகங்களிலும் நடித்துள்ளார் ஆனால் அமெச்சூரில் ஒத்திகை வைப்பது, பிரதியை மனப்பாடம் செய்வது இவைகள் நடைமுறைக்குக் கடினமாக இருக்கின்றது. எனவேதான் அமெச்சூர் நாடகங்கள் மனத்திற்குப் பிடித்தவைகளாக இல்லை. நாடகத்தில் ஒப்பனைகளை நம்முடைய விருப்பத்திற்கேற்பச் செய்து கொள்ளலாம். அது பார்வையாளருக்குப் பிடித்தவையாக இருந்தால் போதும் என்கிறார்.

குழுவில் பொதுவாக ஆண் நடிகரோடு போட்டியும் இல்லை; சிக்கலும் இல்லை. இவை பெண் நடிகர்களிடம்தான் உள்ளது. நடனம் ஆடும் பெண் பாத்திரம் முதலில் மேடைக்குச் சென்றால் அவர் திரைப்படப் பாடலில் முக்கியமானதைப் பாடுவார். ஸ்திரீபார்ட்டிற்கு (கதாநாயகிக்கு) பிரபலமான பாடல் இருக்காது. எனவே நடனம் ஆடுபவரை ஏன் அந்தப் பாடலைப் பாடிவிட்டு வந்தாய்; நான் எந்தப் பாடலைப் பாடுவது என்று கேட்பார்கள். நடனம் ஆடுபவர் ஸ்திரீபார்ட்டைவிட அதிகமாக ஒப்பனை செய்து கொண்டால் ஸ்திரீபார்ட் நடிகர் ஏன் அவ்வளவு அதிகமாகச் செய்து கொள்கிறாய் என்று பொறாமையால் கேட்பார்கள். இதுபோன்று பெண் நடிகர்களுக்குள்ளேதான் சிக்கல்கள் ஏற்படும். பார்வையாளர்களிடத்தில் பாராட்டும் பரிசும் பெற வேண்டி இரண்டு பெண் நடிகரும் போட்டி போட்டுக்கொண்டு நடிப்பார்கள் என்கிறார்.

பார்வையாளர்களிடத்திலிருந்து சிக்கல் ஏற்படுவது குறைவு. நடிகர்கள் நடந்து கொள்ளும் முறையைப் பொறுத்து அமையும். சில பெண் நடிகர்கள் கிராமத்து மக்களிடம் நேரடியாகத் தொடர்பு வைத்துக் கொள்வார்கள் அல்லது அந்தக் கிராமத்தில் தொடர்ந்து நாடகம் நிகழ்த்திப் பழக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். இப்படிப் பழக்கப்பட்டவர்கள் நடிக்கும்போது பார்வையாளர்கள் உற்சாகத்துடன் இரசிப்பதுடன், நடிகரை மேடைமேலேயே வாழ்த்துப் பொருள் கொடுத்துப் பாராட்டுவார்கள். இப்பாராட்டுகள் அதிகமானதும், நடிகர்களிடம் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள முயற்சிப்பார்கள். இந்த விளைவுகளால் நடக்கும் செயல்கள் மேடையில் நடிக்கும்போது நடிகருக்குச் சிக்கலான செயல்பாடாகத் தோன்றும் என்கிறார்.

பெண் நடிகர் நாடகத்தில் கவர்ச்சியாக நடிப்பதில் தவறு இல்லை. பார்வையாளர்கள் அப்படித்தான் எதிர்பார்க்கின்றார்கள். இது தவறாகப் பயன்படுத்திக் கொள்ளும்போது, பெண் நடிகர் கவர்ச்சிக்காகத்தான் நாடகத்தில் பங்கு பெறுவார்கள் என்ற கருத்து நிலவுகிறது.

பாரிஜாதம், டி.பி.
வயது 63

நல்லுக்கவுண்டர் ரோடு,
எருமாபாளையம் அஞ்சல்,
சேலம் – 15.

இவர் மலையாள பென்னா இனத்தைச் சேர்ந்தவர். கலப்புத் திருமணம் செய்து கொண்டவர். தற்போது நலிவுற்ற கலைஞர்களுக்கான ஓய்வு ஊதியம் பெற்றுக் கணவருடன் வாழ்ந்து வருகின்றார். நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் குடும்பச் செலவுகளுக்குப் போதுமானதாக இருக்கிறது என்கிறார். ஆனால் நாடகத்தின் மூலமாகச் சேர்த்த பணத்தை ஆடம்பரச் செலவுகளினால் அழித்திருக்கிறார். தற்போது ஓய்வு ஊதியத்தை நம்பிக் குடும்பம் நடந்து கொண்டிருக்கிறது.

நாடகத்தில் நடிப்பதால் குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டதில்லை. கணவர் தொடர்ந்து இவருடைய நாடகங்களைப் பார்த்திருக்கும் போது இருவருக்கும் நட்பு உண்டாகி திருமணம் நடந்துள்ளது. நாடகத்தில் நடிப்பதால் குடும்பத்தில் சிக்கல் ஏற்படவில்லை. ஆனால் குழந்தை வளர்ப்பு முறை பாதிக்கின்றது. குழந்தைகளின் வளர்ச்சியை நேரடியாகக் கண்டு கொள்ள முடியவில்லை. இதனால் குழந்தைகளின் இயல்பான வளர்ச்சி தடைப்படுகின்றது என்கிறார். இவருடைய மகனையோ மகளையோ நாடகத்தில் நடிக்க வைக்கவில்லை. நம்முடைய தொழிலில் எவ்வளவோ பிரச்சனைகள் இருக்கிறது. அது நம்முடைய பிள்ளைகளுக்கும் வரவேண்டாம் என்று கருதி யாரையும் நாடகத்தில் நடிக்க வைக்கவில்லை என்கிறார்.

நாடகத்தைவிட அதிகப் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்திருந்தால், நாடகத்தில் நடித்திருப்பீர்களா என்று கேட்டதற்கு நடித்திருப்பேன் என்கிறார். நாடகம் நடிப்பதால் அதிகப் பணம் கிடைத்தது. அது மட்டுமல்லாமல் புகழ் கிடைக்கின்றது. நாடகத்தில் கிடைக்கும் புகழ் வேறு வேலையில் கிடைப்பது இல்லை. நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் கணவரின் விருப்பத்திற்கேற்பச் செலவு செய்யப்படும். கணவரிடம் சம்பாதிக்கும் பணத்தைக் கொடுத்துவிட்டு, தேவைப்படும் போதெல்லாம் வாங்கிக் கொள்வேன் என்கிறார். நாடக ஒப்பந்தம் இவரே பார்த்துக் கொள்வார். கணவரின் விருப்பத்திற்காகவும் ஒப்பந்தம் நடைபெறும்.

நாடகம் நிகழ்த்தும் இடத்திற்குச் செல்லப் பாதுகாப்பிற்காகக் கணவர் உடன் வருவார். திருமணம் ஆகாதபோது சகோதரி உடன் வருவார். நாடகம் நிகழ்த்தும் பகுதிகளும் தொடர்ந்து நடித்துப் பழக்கப்பட்டவையாதலால், செல்வது தொடர்பாகப் பிரச்சனை ஏற்படுவதில்லை என்கிறார்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத்தில் அறிமுகப்படுத்தியவர் இவருடைய சகோதரி ராதா என்பவர். டி.வி. சுப்ரமணியப்பிள்ளை, டி.வி. ரத்தினப்பா இருவரும் ஆசிரியர்கள். நடிப்பை விரும்பி சேர்ந்தேன் என்கிறார். இவருடைய சகோதரியின் நாடகத்தைப் பார்த்ததனால் இவருக்கும் நடிப்பதற்கு ஆர்வம் வந்ததாகக் கூறுகிறார். முதலில் ஸ்பெஷல் நாடகத்தில் பங்குபெற்றுப் பிறகு அமெச்சூர் நாடகங்களிலும் பங்கு பெற்றுள்ளார். அமெச்சூர் நாடகங்களில் நடைமுறைச் சிக்கல்கள் அதிகம் இருப்பதால் ஸ்பெஷல் நாடகங்களில் முழுக்கவனம் செலுத்தி இருக்கிறார்.

ஆண் நடிகர்களோடு நடிக்கும்போது நடிப்பில் வேறுபாடு தெரியவில்லை என்கிறார். குழுவினரிடம் சில கருத்து வேறுபாடுகள் இருக்கும். இது தொழில் தொடர்பாக வரும். இவருக்குச் சந்திரமதி பாத்திரம் பிடிக்கும். சந்திரமதியின் பாடல்களைப் பாடுவது இவருக்குத் தனி ஆர்வம் ஏற்படுமாம். பாத்திரத்தோடு ஒன்றிப்போய் மேடையிலேயே நிஜமாக அழுதுவிடுவாராம். பார்வையாளரும் இவருக்குப் பாராட்டுக்களைத் தெரிவிப்பதால் இது போன்ற பாத்திரங்களுக்காகவே இவரை ஒப்பந்தம் செய்கின்றார்கள். ஒப்பனை இவர் விருப்பத்திற்கேற்பவே செய்து கொள்கின்றார். சமூகக் கதைகளையும் வரலாற்றுக் கதைகளையும் தொடர்ந்து நடித்திருந்தாலும், புராணக் கதைகள் மட்டும் பிடித்தமான கதை என்று கூறுகிறார்.

இவர் ஆண் பாத்திரங்களை ஏற்றதில்லை. சிறு வயதில் பால பாத்திரங்களில் நடித்துள்ளார். ஸ்திரீபார்ட் நடித்ததிலிருந்து ஆண் பாத்திரம் ஏற்றதில்லை. இவருக்கு நடிப்பின்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் பிற நடிகரால் வந்தது இல்லை என்கிறார். ஆனால் இவராலேயே சிக்கல் ஏற்படுகிறது என்கிறார். சந்திரமதி பாத்திரத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போது தன்னுடைய சொந்த வாழ்க்கையை நினைத்துக் கொண்டு நடிப்பாராம். இதனால் துயரமான காட்சியை நிகழ்த்தும்போது அழுகை உண்மையாகவே இருக்குமாம். பாத்திரத்திற்கான பாடல்களைப் பாடி முடித்தும் கூட இவரால் அழுகையை நிறுத்த முடியாதாம்.

சில நேரங்களில் அரங்கத்தினுள் போய் இயல்பாக்கிக் கொண்டு, மீண்டும் மேடையில் கதையை நிகழ்த்த வருவாராம்.

பார்வையாளரிடத்திலிருந்து நடிகர் பிரபலமானால் சிக்கல் ஏற்படும் என்று கூறுகிறார். இவர் சந்திரமதி பாத்திரத்திற்காக மிகவும் பிரபலமானவர். எனவே, யார் நாடகம் நிகழ்த்தக் கேட்டாலும் சந்திரமதி பாத்திரம் பாரிஜாதம்தான் செய்ய வேண்டும் என்று கூறுவார்களாம். இதனால் சில கிராமங்களில் இவருடைய நாள் கிடைக்கவில்லை என்றாலும் மற்ற எந்த நடிகரையாவது ஒப்பந்தம் செய்து பாரிஜாதம்தான் நடிக்கிறார் என்று கூறி நடித்துவிட்டு வந்து விடுவார்களாம். இது கிராமத்து மக்களுக்குத் தெரிய வந்ததும் யார் வந்தாலும் கோயில் முன் கற்பூரம் அணைத்துச் சத்தியம் செய்யச் சொல்லிப் பிறகு நாடகத்தில் நடிக்கச் சம்மதிப்பார்களாம். ஒரு கிராமத்தில் இவரையே "நீ பாரிஜாதம் என்பதற்கு என்ன அடையாளம்" என்று கேட்டு இவரை நான்தான் பாரிஜாதம் என்று கூறிக் கற்பூரம் அணைத்துச் சத்தியம் செய்யச் சொல்லி இருக்கிறார்கள். இவர் சத்தியம் செய்தபிறகே நடிக்க அனுமதித்து இருக்கின்றார்கள். பார்வையாளரிடத்திலிருந்து இது மாதிரியான சிக்கல்களும் ஏற்படுவதுண்டு என்கிறார்.

புவனாஸ்திரீ
வயது 18

57, சுண்ணாம்புக்காரத் தெரு,
மதுரை - 1.

இவர் சிறிய வயதில் இருந்து நாடகத்தில் தன் அம்மாவுடன் நடித்திருந்தாலும், 12 வயதில் இருந்துதான் முறையாக நாடகத்தில் பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளார்.

இவர் குடும்பத்தார் நாடகத் துறையில் இருந்தவராகையால், இவர் நாடகத்தில் பங்கு பெறுவது குறித்துச் சிக்கல் ஏற்பட்டது இல்லை. நாடகத்தில் பங்கு பெறுவது பற்றித் தம்மைச் சுற்றி உள்ளவர்கள் நாடகக்காரி என்பார்கள். என்னுடைய நண்பர்கள் நாடகம் நடிப்பதால் என்னை வித்தியாசப்படுத்திப் பார்ப்பதில்லை என்கிறார்.

நாடகத்தைவிட அதிகப் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்தால் நடிப்பதை நிறுத்தி விடுவாராம். நாடகத்தில் இவர் நடனம் ஆடுபவராக இருக்கின்ற காரணத்தினால், பாத்திரங்களை ஏற்று நடித்ததில்லை. நாடகக் கதைகளை நடிப்பவர்களுடன் கேட்டு அறிந்ததால் பிடித்த பாத்திரம் கண்ணகிப் பாத்திரம் என்கிறார்.

நாடகத்தின் மூலம் பெறும் பணம் என் விருப்பத்திற்குச் செலவுகள் செய்யமாட்டேன். வீட்டில் கொடுத்துவிட்டுத் தேவையான செலவுகளுக்குக் கேட்டு வாங்கிக் கொள்வேன் என்கிறார். இவருக்கு நாடக ஒப்பந்தம் இவருடைய அண்ணன் மூலமாக நடைபெறுகிறது. நாடகத்தில் நடிக்க வெளியூர்களுக்குச் செல்லும்போது இவரது அம்மா பாதுகாப்பிற்காக வருவார். குழுவினர் இவருடைய அம்மாவிற்குப் பழக்கப்பட்டமையாலும் குழுவாக வெளியூர்களுக்குச் செல்வதாலும் எந்தச் சிக்கலும் இல்லாமல் வெளியூர்களுக்குச் செல்ல முடிகிறது என்கிறார்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத் துறையில் அறிமுகப்படுத்தியவர் இவருடைய அம்மா. இவருடைய அம்மா பிரபல நாடக நடிகர். நடிப்பை விரும்பிச் சேர்ந்தேன். சிறுவயதில் இருந்தே நாடகங்களை பார்த்துக் கொண்டு வந்ததால், நடிப்பது எனக்குப் பிடித்துவிட்டது

என்கிறார். இவர் முதலில் பங்கு பெற்றதும், தற்போது பங்கு பெற்று நடித்து வருவதும் ஸ்பெஷல் நாடக வடிவம்.

ஆண் நடிகர்களோடு நடிக்கும்போது சிக்கல் இல்லை. நடனம் ஆடும் போது பபூனுக்கு ஏற்றபடி நடனம் ஆடினால் போதும் என்கிறார். இவர் சிறியவராக இருப்பதால் குழுவினர் இவரை எதிலும் பங்குபெறச் செய்வதில்லை; நடிப்பது மட்டும் தான். இவருக்குத் தோழிப் பாத்திரம் மட்டும் கொடுக்கின்றனர். நடனம் ஆடுபவர் என்றாலே தோழிப் பாத்திரம் மட்டும்தான் செய்யச் சொல்வார்கள். இன்னும் சிறு வயதாக இருந்தால் பால பாத்திரங்களைச் செய்யச் சொல்வார்கள்.

இவருக்குப் பிடித்த கதையம்சங்கள் புராணக் கதைகள். சிறிய வயது முதல் இவருடைய அம்மா புராணக் கதைகளைக் கூறி இருக்கின்றார். தொடர்ந்து புராணக் கதைகளை நாடகத்தின் மூலம் பார்க்கின்ற காரணத்தால் புராணக் கதைகள் இயல்பாகவே பிடித்திருக்கிறது என்கிறார்.

இவர் ஆண் பாத்திரங்களை ஏற்றுள்ளார். நாடகத்தில் சேர்ந்த போது சிறிய வயதில் பால பாத்திரங்கள் செய்வது வழக்கம். அப்படிப் பால பாத்திரங்களைச் செய்யும் போது, சந்திரமதியின் மகன், நல்லதங்காள் மகன் போன்ற பாத்திரங்களைச் செய்யச் சொல்வார்கள். ஆனால் நடனம் ஆடுபவராக மாறியபோது ஆண் பாத்திரங்களைச் செய்யச் சொன்னதில்லை என்கிறார். குழுவில் நடிப்பு அல்லாத பிற வேலைகள் செய்வதில்லை. எனக்கு வேறு எந்த வேலைகளையும் கொடுக்க மாட்டார்கள் என்கிறார்.

நடிப்பின்போது நடைமுறைச் சிக்கல்கள் அதிகம் உள்ளது. அனுபவம் பெற்றவர்களுக்கு இது எளிமையாக இருக்கின்றது. எனக்கு இன்னும் முழுமையாக அனுபவம் வராததால் கடினமாக இருக்கின்றது. நடனம் ஆடும்போது கவனமாக ஆடவேண்டி உள்ளது. திரைப்படத்தில் செய்வது போன்று பாவனைகள் செய்ய வேண்டும்; இல்லை என்றால் பார்வையாளர்களைத் திருப்திபடுத்த முடியாது. அதேநேரத்தில் கவர்ச்சியாக இல்லாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். உடன் நடிக்கும் பபூனின் செயல்பாடுகளுக்கு ஈடுகொடுக்க வேண்டும். இது மிகவும் சிக்கலாக இருக்கும். பெரும்பாலான பபூன் பாத்திர நடிகர்கள் அனுபவம் பெற்றவர்களாக இருப்பார்கள். அவர்களுடன் நடிப்பதுதான் சிரமமாக இருக்கும். திரைப்படப் பாடலை இராகமாகப் பாடினால் போதும், இரசிகர்களிடம் பாராட்டு வாங்கிவிடலாம் என்கிறார். பபூன், நடனம் ஆடுபவர் இருவரும் சேர்ந்து செய்யும்

நடிப்புகள் தான் மக்களுக்குப் பிடித்தவையாக இருக்கின்றன. நடனம் ஆடுவது எளிமையாக இருந்தாலும், வசனம் பேசுவது, பார்வையாளர்களை உற்சாகப்படுத்துவது இவைகளில் கவனம் செலுத்துவதுதான் கடினமான செயல்பாடாகும் என்கிறார்.

நடிக்கும்போது பார்வையாளர்கள் தொந்தரவு செய்வதில்லை. அவர்களுக்குப் பிடித்தமான பாடல்களைப் பாடும்போது மட்டும் கைத் தட்டல், விசில் போன்றவைகளில் ஈடுபடுவார்கள். இது நடிக்கும்போது தொந்தரவாக இருக்காது. திரைப்படப் பாடல்களில் எதைப் பாடுவது, எதைப் பாடினால் பாராட்டுவார்கள் என்று யோசித்துப் பாடினால் பரிசுகளும் பாராட்டுக்களும் வரும். அடுத்த ஆண்டும் நம்மையே அழைக்க வேண்டும் என்பதற்காக கவனமாகவும் பாடி ஆட வேண்டும் என்கிறார்.

பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காக மட்டும் நாடகத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்று கருத்து தவறானது. சில கிராமங்களில் நடனம் ஆடுபவர் இரண்டு பொருள் வசனம் பேசக்கூடாது என்கிறார்கள். கதைக்கு உரிய வசனங்களையும் பாடல்களையும் பாடினால் போதும் என்கிறார்கள். இது கவர்ச்சி வேண்டாம் என்பதைத் தெரிவிப்பதாகும். சில நடிகைகள் தொழில் போட்டிக்காக நடந்து கொள்வது எல்லாரையும் அதுபோல் பேச வைக்கின்றது என்கிறார்.

புஷ்பா ராஜாமணி
வயது 65

8அ/3, சுண்ணாம்புக்காரத் தெரு,
திண்டுக்கல் சாலை,
மதுரை - 1.

இவரது கணவர் நாடக நடிகர். தற்போது கணவர் உயிருடன் இல்லை. பெர்னான்டஸ் (பரதவர்) இனத்தைச் சேர்ந்தவர். தற்போது ஆதரவுக்கு யாரும் இல்லை. அரசின் கலைஞர்களுக்கான ஒய்வு ஊதியத்தைப் பெற்று வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்.

இவர் நடிப்பை விரும்பித் தேர்ந்தெடுக்கவில்லை; பிழைப்பிற்காக நடிக்க வந்தேன் என்கிறார். தந்தை இறந்தவுடன் குடும்பம் நலிவுற்று விட்டது. இவருடைய தாயால் குடும்பத்தைச் சமாளிக்க முடியாத சூழலில் கோவிந்தசாமி என்னும் நாடக ஆசிரியர் இவரை நாடகக் குழுவில் சேர்த்துள்ளார். அக்குழுவில் இவருக்கு உணவு கொடுத்துப் பணமும் கொடுக்கப்பட்டுள்ளது. நாடகத்தில் வரும் வருவாயை வைத்துக் குடும்பத்தை நடத்திக் கொண்டு தன் தாயாரையும் கவனித்து வந்துள்ளார்.

கிட்டுப்பாய் வாத்தியார் என்பவரிடம் நடனமும், மணி என்பவரிடம் பரத நாட்டியமும், தணிகைக்கவி குஞ்சரம்பிள்ளை என்பவரிடம் ஸ்திரீபார்ட் பாத்திரமும் முறையாகப் பயிற்சி எடுத்துள்ளார். இசை நாடக வடிவத்தில் முதலில் பங்கேற்றுள்ளார். ஆண் நடிகரோடு சேர்ந்து நடிப்பதில் எந்தவிதச் சிக்கலும் ஏற்பட்டதில்லை. ஆண் நடிகர்கள் பெண் நடிகரை எந்தவித வேறுபாடும் இன்றி நடத்துவார்கள். எங்கள் காலத்தில் நடித்த நடிகர்கள் அப்படி நடந்து கொண்டார்கள். பெண் நடிகரை மேடையில்தான் வாக்குவாதம் செய்து திணற வைப்பார்கள். சாதாரண நிலையில் அன்பாக நடந்து கொள்வார்கள். நிறைய கருத்துக்கள் கூறுவார்கள் என்கிறார்.

பொதுவாக, குழுவினர் அனைவரும் ஒரு குடும்பமாக இருப்பதுதான் நாடகக்காரர்களின் நடைமுறைப் பழக்கம். ஆனால் இவரை ஆரம்ப காலங்களில் ஒதுக்கி வைத்துள்ளனர். எல்லாக் கலைஞர்களும் இயல்பாகப் பழகுவதில்லை. இதற்கு சாதி முக்கிய காரணமாக இருந்திருக்கும் என்று நினைக்கிறேன் என்றார்

இவர் ஸ்திரீபார்ட் ஏற்று சிறப்பாக நடித்துப் பெயர் பெற்றதும் அனைத்துக் கலைஞர்களும் சமமாகப் பழக ஆரம்பித்திருக்கிறார்கள். இவருக்குப் பிடித்த பாத்திரம் நல்லதங்காள் பாத்திரம். சோகமான பாத்திரம் பெரும்பாலும் பிடிக்கும் என்கிறார். புராணக் கதைகளை நிகழ்த்துவது பிடிக்கும். இதில்தான் பாடல்கள் நாடகத்திற்கு ஏற்றபடி இருக்கின்றன. இப்பாடல்கள் மக்களுக்கும் புரியும்படி இருக்கின்றன என்கிறார்.

இவர் நாடகத்தில் பங்கு பெறுவது பற்றி, ஆரம்பத்தில் இவருடைய ஊரில் ஏளனமாகப் பேசி இருக்கிறார்கள். இவர் நாடகத்தில் புகழ் பெற்றதும் மரியாதை கொடுத்துக் கௌரவித்துப் பேசி இருக்கிறார்கள்.

கணவரும் நாடக நடிகர் என்பதால் நடிப்பது தொடர்பாகச் சிக்கல் ஏற்பட்டதில்லை. கணவர் எனக்குச் சில நாடக அனுபவங்களைக் கூறி அதன்படி என்னை நடிக்கச் சொல்லுவார். நானும் அவர் கூறும் யோசனைகளைக் கேட்டு நடித்ததால் புகழ் பெற்றுள்ளேன் என்கிறார்.

ஆரம்ப காலத்தில் அதிகப் பணம் கிடைக்கும் தொழில் கிடைத்து இருந்தால் நாடகத்தில் நடித்திருக்க மாட்டாராம். ஆனால் அனுபவமும் புகழும் அதிகமானதும் இத்தொழிலை விட முடியாமல் ஆகிவிடுகிறது என்கிறார். நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணத்தை ஆரம்பத்தில் என் குடும்பத்திற்காகச் செலவு செய்தேன். திருமணம் நடந்தவுடன் கணவரிடம் கொடுத்து வந்தேன். எனக்காகச் செலவு செய்து கொள்ளும்போது என் கணவர் என்னை கேட்கமாட்டார் என்கிறார்.

நாடகத்தில் ஏற்கும் பாத்திரம் நிஜ வாழ்க்கையில் பாதிப்பு ஏற்படுத்துகின்றது. நாடகத்தில் வள்ளியாக, நல்லதங்காளாக, சந்திரமதியாக நடிக்கும்போது மனத்திற்கும் நிம்மதியாக இருக்கும். நம் வாழ்க்கையிலும் இது போன்று வாழ முடியவில்லையே என்று ஏங்கியதுண்டு. நடித்துப் பழக்கப்பட்ட பிறகு இது போன்று நினைப்பது இல்லை என்கிறார். நாடகம் நிகழ்த்த வெளியூர் போகும்போது பாதுகாப்பிற்காக எவரும் உடன் வருவதில்லை. திருமணம் ஆனவுடன் கணவர் நடிகர் என்பதால் அவர் உடன் வருவார். இருவரும் ஒன்றாக நடித்திருக்கிறோம் என்கிறார்.

பார்வையாளர்கள் கிராமத்துக்கு கிராமம் வேறுபடுகின்றார்கள். சில கிராமங்களில் நாங்கள் உறவினர்கள் போல் பழகி வந்துள்ளோம். நாடகம் அல்லாத மற்ற நாட்களில் பார்த்தாலும் அன்பாகப் பேசுவார்கள். நாடகம் நிகழ்த்தப் போகும் போதும் கௌரவிப்பார்கள்; உபசரிப்பார்கள்.

நிகழ்த்தும்போதும் இடையூறு இல்லாமல் கவனித்துக் கொண்டிருப்பார்கள். இளைஞர்கள் மட்டும் ஒருசிலர் ஆர்வத்தால் சத்தம் போடுவார்கள். அவர்களையும் பார்வையாளர்களே அமைதிப்படுத்தி விடுவார்கள். பார்வையாளர்களிடம் இருந்து நடிகர்களுக்குச் சிக்கல் ஏற்படுவதில்லை என்கிறார்.

நடிப்பின்போதுதான் சிக்கல் ஏற்பட வாய்ப்பு அதிகம். ஆண் நடிகருடன் தர்க்கம் செய்யும்போது சமமாகப் பேசினால் ஆண் நடிகருக்குப் பொறுக்க முடியாது. ஆகையால் கதையிலிருந்து விலகி மற்ற செய்திகளை மேடையில் பேசுவார்கள். இது நடிகரைப் புண்படுத்தும். ஒருசில நடிகர்கள் இதை சாதாரணமாக எடுத்துக் கொள்வார்கள்; ஒருசிலர் தவறாக எடுத்துக் கொள்வார்கள். அப்படித் தவறாக எடுத்துக் கொண்டால் நடிப்பின் போது சிக்கல் ஏற்படும் என்கிறார்.

பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காக நாடகத்தில் பங்கேற்கவில்லை. மேடைப்பொருத்தம், சாரீரம், கதை பற்றிய ஞானம் இல்லாதவர்கள் நடிப்பதைக் கவர்ச்சியாக்கிவிட்டார்கள் என்கிறார்.

மகாலட்சுமி
வயது 45

அமிர்தலிங்கம் கலைக்குழு,
3, வடக்கு முனியப்பன் கோயில் தெரு,
கருங்கல்பட்டி,
சேலம் - 6.

இவர் செட்டியார் இனத்தைச் சேர்ந்தவர். கலப்புத் திருமணம் செய்து கொண்டுள்ளார். கணவர் நாடக நடிகர். சொந்தமாகக் கலைக்குழு நடத்தி வருகின்றார். சிக்கனமாகக் குடும்பத்தை நடத்துவதால், நாடகத்தின் மூலம் வரும் பணம் குடும்பத்திற்குச் சரியாகப் போய்விடுகிறது என்கிறார்.

நாடகத்தில் நடிப்பது தொடர்பாகக் குடும்பத்தில் பிரச்சனை உண்டாகவில்லை. நாடகத்தில் நடித்துக் கொண்டிருக்கும்போது தான் கணவருடன் நெருக்கம் ஏற்பட்டுத் திருமணம் செய்து கொண்டோம். அதனால் நடிப்பது தொடர்பாக எங்களுக்குள் வேறுபட்ட கருத்துகள் இல்லை என்கிறார். நான் முக்கியப் பெண் பாத்திரம் ஏற்பேன். கணவரும் முக்கியப் பாத்திரம் ஏற்பார். இருவரும் மேடையில் விட்டுக் கொடுக்காமல் நடிப்போம். சில சமயங்களில் எனக்கு விட்டுக் கொடுத்து நடிப்பார். தர்க்கத்தின் போது தேவை இல்லாதவைகளைக் கேட்டு என்னைத் திணற வைக்கமாட்டார். மற்ற ஆண் நடிகர்களுடன் நடிக்கும்போதும் இவர் கணவர் கருத்துகள் கூறுவதில்லை.

குழந்தைகளை நாடகத்தில் நடிக்க வைக்க மாட்டேன் என்கிறார். இவருடைய சகோதரிகள் நான்கு பேரும் நாடக நடிகைகள். மூன்று பேர் நாடக நடிகரைத் திருமணம் செய்து கொண்டனர். அதில் இவர் மட்டும்தான் கணவருடன் குடும்பம் நடத்துகின்றார். மற்றவர்கள் கணவருடன் சிக்கல் ஏற்பட்டுப் பிரிந்து வாழ்கின்றார்கள். எனவேதான் இவர்களுக்குப் பிறகு பிள்ளைகள் எவரையும் நாடகத்தில் நடிக்க வைக்கப் போவதில்லை என்று கூறுகிறார்.

நாடகத்தைவிட அதிகம் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்தால் ஆரம்பத்திலேயே நடிப்பதை நிறுத்தியிருப்பேன். இப்போது என் கணவருடன் எல்லாப் பொறுப்புகளையும் நானும் சேர்ந்து கவனித்துக் கொண்டு வருகிறேன். வேறு வேலை

கிடைத்தாலும் நாடகத்தில் இருக்கும் திருப்தி மற்றதில் வராது. இப்போதைக்கு நாடகம் பிடித்த தொழிலாக இருக்கிறது. அதனால் இத்தொழிலை விடமுடியாது என்கிறார். நாடகத்தில் நடிக்கும் பாத்திரங்கள் சொந்த வாழ்க்கையில் பாதித்திருக்கிறது. அரிச்சந்திராவில் சந்திரமதியின் பாத்திரம் எனக்கும் பொருத்தமாக இருக்கும். எனக்கு என் குடும்பத்தினர் நினைவு வந்தால் சந்திரமதியின் ஒப்பாரிப் பாடல்களைப் பாடி அழுவேன் என்கிறார். .

நாடகத்தின் மூலம் வரும் பணத்தைக் கணவரிடத்தில் கொடுத்து விடுவேன். என் எல்லாத் தேவைகளையும் கணவர் பூர்த்தி செய்கின்றார். என் விருப்பத்திற்கேற்ப நடந்து கொள்கிறார். நாடக ஒப்பந்தம் என் கணவரே பார்த்துக் கொள்கின்றார். நாடகம் நிகழ்த்த வெளியூர்களுக்குப் போகும்போது பாதுகாப்பிற்காக யாரும் வருவதில்லை. திருமணம் ஆகும் முன்பு ஈன்னுடன் யாராவது ஒருவர் வருவார்கள். திருமணத்திற்குப் பிறகு கணவருடன் செல்வேன்; கணவர் இல்லை என்றால் என்னைத் தனியாகவும் அனுப்புவார். பயணம் தொடர்பாகச் சிக்கல் ஏற்பட்டதில்லை. நாடகம் நிகழ்த்தும் பகுதியிலும் நாடகம் ஏற்பாடு செய்வோர் எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுப்பார்கள். பெரும்பாலும் கலைஞர்களுக்குப் பிரச்சனை ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வார்கள்.

இவருக்கு நாற்பது வயது வரைக்கும் திருமணம் ஆகாமல் இருந்து வந்தது. இவருக்கு அப்பா, அம்மா பாதுகாப்பு சரியாக இல்லை. இவர் குழுவினர் அனைவரையும் ஒரே வீட்டில் தங்க வைத்திருந்து இருக்கிறார். இவரை நம்பிக் குழு செயல்பட்டுக் கொண்டு இருந்திருக்கிறது. அக்குழுவிற்கு இந்நடிகரின் பாடல், குரல் வளம், நடிப்பு முக்கியமாக இருந்திருக்கிறது. ஆகையால் குழுவில் உள்ள அனைவரும் திட்டமிட்டு இவருக்குத் திருமணம் ஆகாதபடி பார்த்துக் கொண்டுள்ளனர். இந்நடிகருக்கு எவ்வளவு வருமானம், செலவு என்பதுகூடத் தெரியாமல் இருந்திருக்கிறது. இவர் விருப்பத்திற்குச் செலவுகள் செய்ய அனுமதிப்பதில்லை. அடிமைபோல் நடத்தி வந்திருக்கின்றனர். திருமணம் நாற்பதாவது வயதில் ஆனதும் கணவருடன் தனியே வந்து வாழ்கின்றார். பழைய குழுவை விட்டுவிட்டுக் கணவருடன் தனியாகக் குழு உருவாக்கித் தற்போது அதில் நடித்து வருகிறார்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத்தில் அறிமுகப்படுத்தியவர் வேலுச்சாமி ஆசிரியர். நடிப்பைப் பிழைப்புக்காகத் தேர்ந்தெடுத்துள்ளார்.

இவருடைய தந்தை சொந்தமாகத் தொழில் செய்து கொண்டிருந்திருக்கிறார். தொழிலில் நஷ்டம் ஏற்படவே குடும்பத்தோடு சேலம் வந்திருக்கின்றனர். சேலத்தில் உணவுக்கு வழியில்லாமல் குடும்பம் கஷ்டமான நிலையில் இருக்கும்போது, குடும்பத்தார் அனைவரும் இறப்பதற்கு முடிவு செய்திருக்கின்றனர். இச்சூழ்நிலையில் நாடகக் கம்பெனி நடத்தி வந்த ஒருவர் இவர் தந்தையிடம் பெண்களை நாடகத்தில் நடனம் ஆடும்படி கேட்டிருக்கிறார். இவருடைய தந்தையும் ஒப்புக்கொண்டு மகள்களை நடிக்க வைத்திருக்கிறார்.

இவர் முதலில் பங்கு பெற்ற வடிவம் ஸ்பெஷல் நாடகம். நடனம் ஆடுபவராகவும் குழுவில் பாடுபவராகவும் ஆரம்பத்தில் இருந்திருக்கின்றார். குரல் வளம் சிறப்பாக இருக்கவே அமெச்சூர் நாடகங்களுக்குப் பாடல் பாடத் தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறார்.

ஆண் நடிகர்களோடு நடிக்கும்போது பாடலில்தான் போட்டி வரும். இவருக்கு நல்ல குரல் வளம் இயற்கையாக இருப்பதால், உடன் நடிக்கும் ஆண் நடிகர்கள் இதைச் சமாளிக்க தர்க்கங்களில் கவனம் செலுத்துவார்கள். தர்க்கத்தில் புதிய புதிய கருத்துக்களைக் கூறிப் பாராட்டும் பெறுவார்கள். நான் சிறப்பான பாடல்களைப் பாடியே பாராட்டுப் பெறுவேன் என்கிறார். அமெச்சூர் நாடகங்களில் நடிக்கும்போது ஆண் நடிகர்களுடன் சிக்கல் ஏற்படுவது அதிகமாக இருக்கும். ஆண் நடிகருடன் நெருங்கி நடிப்பது, காதல் காட்சிகளில் நடனம் ஆடுவது போன்றவைகள் முக்கியமாகச் செய்ய வேண்டும். இதைச் செய்யும் போது பார்வையாளருக்குத் திருப்தியாகவும் இருக்கவேண்டும்; நடிகரின் கட்டுப்பாடும் மீறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சில நடிகைகள் கெட்ட பெயரை எடுத்திருக்கின்றனர். நான் அது போன்ற பெயரை எடுக்காமல் பார்த்துக் கொண்டேன் என்கிறார்.

குழுவினர் இவரை நாடகத்தில் உயர்வாகவே நடத்தி வந்துள்ளனர். பாடல் பாடுவதில் இவருக்குச் சிறப்பிடம் இருந்ததால் நாடகம் தொடர்பாக இவரைச் சிறப்பித்தே கூறுவார்களாம். குழுவை நிர்வாகம் நடத்தியவர்கள் இவரிடம் வருவாய், செலவுகள் எதையும் காண்பிப்பது இல்லை. இவர் நடிப்பதோடு சரி; மற்றவைகளைக் குழு நிர்வாகிகளே பார்த்துக் கொண்டிருந்திருக்கின்றனர்.

இவருக்குச் சந்திரமதி பாத்திரம் மிகவும் பிடித்த பாத்திரமாகும். இவருக்குப் பாடலில் முக்கியத்துவம் பெற்ற

பாத்திரங்கள் கொடுக்கப்படுகின்றது. ஒப்பனை இவர் விருப்பத்திற்கேற்பச் செய்து கொள்கிறார். இவருக்குப் பிடித்த கதையம்சம் கற்பனைக் கதைகள். கற்பனைக் கதைகளைத்தான் மக்களும் இரசிக்கின்றார்கள். நடிக்கவும் உற்சாகமாக இருக்கிறது. ஆனால் அமெச்சூர் நாடகங்கள், ஸ்பெஷல் நாடகங்களைப் போல நடிகர்களுக்கு எளிமையானது இல்லை. குழுவில் நடிப்பு அல்லாத பிற வேலைகளில் பங்கெடுப்பது இல்லை. இவர் நடித்து சுயமாகச் சம்பாதிக்கும் பணத்தின் கணக்கைக்கூடச் சரி பார்ப்பது இல்லை. எவ்வளவு வருகின்றது என்பதையும் இவருக்குக் காட்டுவதில்லை. செலவுகளும் இவர் விருப்பத்திற்கேற்பச் செய்து கொள்வதில்லை. திருமணத்திற்கு முன் வீட்டில் உள்ளவரின் முழுக்கட்டுப்பாட்டில் இருந்திருக்கிறார். திருமணத்திற்குப் பின் நிம்மதியுடன் இருப்பதாகக் கூறுகிறார்.

பெண் பாத்திரத்தைப் பெண் ஏற்பதற்கும் ஆண் ஏற்பதற்கும் வித்தியாசம் இல்லை என்கிறார். குரல் வளம் யாருக்கு இருந்தாலும் பாடலைப் பாடி பார்வையாளரைத் திருப்திபடுத்தலாம். பெண் நடிகர்கள் பாத்திரத்திற்குப் பொருத்தமானவர்களாக இருப்பார்கள். ஆனால் நடிப்பதற்குக் குரல் வளம், நடிப்புத் திறமை இருப்பவரே பொருத்தமாக இருப்பார்கள் என்கிறார்.

பெண்கள் கவர்ச்சிக்காக நாடகத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்பதை மறுக்கின்றார். குரல் வளமும் தைரியமும் இருப்பவர்களுக்குக் கவர்ச்சி அவசியம் இல்லை என்கிறார்.

மல்லிகா, கே.எஸ்.டி.
வயது 52

3ஆவது வீதி,
திருவள்ளுவர் நகர்,
புதுக்கோட்டை.

இவர் கணவர் நாடக நடிகர். நாடகத்தின் மூலம் வரும் பணம் குடும்பத்திற்குப் போதவில்லை என்கிறார். கணவன் மனைவி இருவரும் நடிகராக இருந்தும் குடும்பத்திற்குப் போதிய வசதிகள் செய்து கொள்ள முடியவில்லை. நாடகத்தில் சம்பாதித்தபோது சேகரிக்காமல் செலவு செய்ததனால் இப்போது குடும்பச் செலவுகளுக்காக மிகவும் கஷ்டப்படுகிறோம் என்கிறார்.

நாடகத்தில் நடிப்பதால் குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டதில்லை என்கிறார். கணவர் நாடக நடிகர் என்பதால், நடிப்பது தொடர்பாக இரண்டு பேருக்கும் சிக்கல் ஏற்பட்டதில்லை. மற்ற ஆண் நடிகர்களிடமும் இயல்பாக நடிக்க வேண்டும், தைரியமாக நடிக்க வேண்டும் என்று கணவர் கூறுவார். நடிப்பது பற்றி ஆண் பெண் என்று பார்க்கக்கூடாது. நடிகர்கள் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள்; பழகுவதிலும் வேறுபாடு பார்க்கக்கூடாது என்றும் கணவர் கூறுவார்.

நாடகத்தில் பங்கு பெறுவது குறித்து ஊரில் உள்ளவர்கள் ஒரு மாதிரியாகத்தான் நினைக்கின்றார்கள். நாடகம் தெரிந்தவர்கள், நாடகத்தைப் பார்த்தவர்கள் கலைஞர்கள் என்ற மரியாதையோடு பழகுவார்கள். மற்றவர்கள் கேவலமாகத்தான் பேசுகின்றார்கள். உறவினர்கள்கூடச் சரியாகப் பழகுவதில்லை. பணம் சம்பாதிக்கும்போது இந்தப் பிரச்சனைகள் தெரியவில்லை. இப்போதுதான் தெரிகின்றது என்கிறார். எங்களுக்குப் பிறகு எங்களுடைய மகனையோ மகளையோ நாடகத்தில் நடிக்க வைக்கக்கூடாது என்று முடிவு செய்துவிட்டோம். வேறு தொழில் இல்லை என்றாலும் பரவாயில்லை, நாடகத்தில் மட்டும் நடிக்கக் கூடாது. எவ்வளவுதான் பணமும் புகழும் சம்பாதித்தாலும் கூத்தாடிதானே என்று கூறிவிடுவார்கள். நாடகத் தொழிலுக்கு வயதும் அழகும் முக்கியம். இது இல்லை என்றால் வேறு தொழிலும் செய்ய முடியாமல் நாடகத்திலும் நடிக்க முடியாமல் நடுத் தெருவில் நிற்க வேண்டிய நிலை வந்து விடும் என்கிறார்.

நாடகத்தைவிட அதிகம் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்திருந்தால், நாடகம் நடிப்பதை நிறுத்தி இருப்பேன் என்கிறார். நாடகத் தொழிலில் இருப்பவர்களுக்கு இதைவிட அதிகப் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைப்பது இல்லை. அப்படிக் கிடைத்தாலும் நாடகத்தில் இருக்கும் சுகம் மற்றதில் வராது. நாடகத்தை விடவும் முடியாமல் நடிக்கவும் முடியாமல் இருப்பதுதான் இப்போதைய வாழ்க்கை நிலை என்கிறார்.

நாடகத்தில் நடிக்கும் பாத்திரங்கள் சொந்த வாழ்க்கையிலும் அப்படியே அமைவதுண்டு. சில நேரங்களில் நல்லதங்காள், சந்திரமதி போன்றவர்களைப் போலத்தான் நாமும் துன்பப்படுவதுண்டு. நாடகத்தில் பேசும் வசனங்களையும் விளக்கங்களையும் வாழ்க்கையில் நினைத்துப் பார்த்து சமாதானப்படுத்திக் கொள்வேன் என்கிறார்.

நாடகத்தின் மூலம் சம்பாதித்த பணம் என்னுடைய விருப்பத்திற்காகச் செலவு செய்து கொள்வேன். கணவர் பணம் செலவு செய்தால் எதுவும் கேட்பதில்லை. நாடகத்தில் வரும் பணம் கணவரிடம் கொடுத்து செலவுகளுக்காகத் திரும்பி வாங்கிக் கொள்வேன் என்கிறார். நாடக ஒப்பந்தம் கணவர் மூலமாகவே நடக்கும். என் விருப்பத்திற்கு மாறாக ஒப்பந்தம் செய்யமாட்டார். நாடகம் நடிக்கும் பகுதிக்குக் கணவருடன் செல்வதால் பயணம் தொடர்பான சிக்கல் இல்லை. நிகழ்த்தும் பகுதியிலும் நாடகம் நிகழ்த்த ஏற்பாடு செய்வோர், அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பார்கள் என்று கூறுகிறார்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத்தில் அறிமுகப்படுத்தியவர் இவாது தந்தையார். நடிப்பைப் பிழைப்பிற்காகத் தேர்ந்தெடுத்துள்ளார். பத்து வயதில் இருந்து நாடகத்தில் நடித்து வருகின்றார். முதலில் நடித்த வடிவம் ஸ்பெஷல் நாடகம்.

ஆண் நடிகர்களோடு நடிக்கும்போது நடைமுறைச் சிக்கல் ஏற்படுவது தவிர்க்க முடியாதவையாகும். தர்க்கம் பேசும்போது நடிகர் என்று பார்க்காமல் தனிப்பட்ட மனிதர் என்று நினைத்து நடிக்க வேண்டும். மரியாதைக் குறைவான வார்த்தைகளால் பேசக்கூடாது. அப்படிப் பேசினாலும் நடித்து முடித்ததும் கேட்பார்கள். அதனால் கவனமாகப் பேச வேண்டும் என்கிறார்.

நடிப்பில் புகழ் பெற்றாலும் குழுவினரிடம் பழகுவது எளிதாக அமையாது. ஆண் நடிகர்களிடமும் நடிகர் சங்கத்திடமும் எவர் அடிக்கடி தொடர்பு வைத்துக் கொள்கிறார்களோ, அந்நடிகரே

சங்கத்தின் எல்லாச் செயல்பாடுகளிலும் பங்கு பெறுவார். மற்றக் கலைஞர்கள் அவரவர் சொந்த முயற்சியில்தான் பிரபலமாகின்றனர் என்கிறார்.

சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகப் பாத்திரங்கள் பிடித்தமானவையாம். பவளக்கொடி, அல்லி அர்ச்சுனா பாத்திரங்கள் மிகவும் பிடித்தமானவை என்கிறார். இவருக்கு வள்ளித் திருமணம், அரிச்சந்திரா ஆகிய இரண்டு கதைகளில் உள்ள பெண் பாத்திரங்கள் அதிகமாகக் கொடுக்கப்படுகிறதாம். ஒப்பனை இவர் விருப்பத்திற்கேற்பவே செய்து கொள்கின்றார். வள்ளித் திருமணத்தைத் தவிர மற்ற பெரும்பாலான கதைகளில் எளிமையான ஒப்பனையுடன் மேடைக்கு வர வேண்டும். வள்ளித் திருமணத்தில் மட்டும் ஒப்பனை பளபளப்பாகச் செய்து கொள்ள வேண்டும். வள்ளி பாத்திரத்திற்கு என்று தனி ஒப்பனை உண்டு. அதைச் செய்து கொண்டு மேடைக்கு வந்தால்தான் பார்வையாளருக்கும் திருப்தியாக இருக்கின்றது. ஒப்பனை எளிமையாகச் செய்து கொண்டு வந்தால் பாத்திரம் எடுப்பாக இருக்காது என்று பார்வையாளர்களே கூறுவார்களாம்.

நடிப்பின்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல் பெண் நடிகர்களுக்கு அதிகம். தோழி பாத்திரத்தைவிடச் சிறப்பாகப் பாட வேண்டும். ஒப்பனை சிறப்பாகச் செய்ய வேண்டும். ஆண் பாத்திரத்தோடு சமமாகப் பேச வேண்டும். இவை சமமாக இருந்தால்தான் நடிப்பு சிறப்பாக இருக்கிறது என்பார்கள். இல்லை என்றால் அடுத்த நிகழ்ச்சிக்கு அழைப்பதற்கு யோசிப்பார்கள் என்கிறார்.

பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காகத்தான் நாடகத்தில் இருக்கின்றார்கள் என்ற கருத்து இப்போதைக்குச் சரியானதாகும். ஏனென்றால் பாடல் பாடும் திறமை, பேச்சுத் திறமை, அனுபவம் இவை இருந்தும் இளமையாகவும் வெள்ளை நிறமாகவும் இருக்கும் பெண் நடிகர்களுக்கே அதிகம் வாய்ப்பு வருகின்றது. பாடவோ, பேசவோ தெரியவில்லை என்றாலும் மேடையில் அழகான ஒப்பனை செய்து கொண்டு நின்றாலே போதும் என்று நினைக்கிறார்கள். இப்படி நடிக்கும் நடிகைகளும் இப்போது அதிகமாகி வருகின்றனர் என்கிறார்.

மீனா, எஸ்.பி.
வயது 56

11ஆ, கிளாஸ்காரத் தெரு,
மதுரை - 1.

இவர் எட்டு வயதில் நாடகத்தில் பங்கு பெற ஆரம்பித்திருக்கிறார். கணவர் நாடகத்தில் பங்கு பெறவில்லை. இவருடைய சிறிய தாய் இவரை நாடகத்தில் அறிமுகப்படுத்தியுள்ளார். இவர் வெள்ளாளர் வகுப்பைச் சார்ந்தவர். தற்போது நடிப்பில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். மகன்கள் இருவரையும் நாடகத்தில் அறிமுகப்படுத்தவில்லை.

ஆரம்ப காலங்களில் நடிப்பின் மூலம் பெறும் பணம் குடும்பத்திற்குப் போதுமானதாக இருந்துள்ளது. இப்போது உள்ள சூழ்நிலைக்குச் சம்பளம் போதாது என்கிறார். இவர் நாடகத்தில் பங்கு பெறுவதால் குடும்பத்தில் எந்தவிதச் சிக்கலும் ஏற்பட்டதில்லையாம். இவருடைய சிறிய தாயாரும் இவருடன் நடிப்பதால் குடும்பத்தில் பிரச்சனை எழவில்லை என்கிறார்.

நாடகத்தில் நடிப்பதால் குழந்தை வளர்ப்புமுறை பாதிக்கின்றது. நெருங்கிய உறவினர்கள் இருந்தால் இப்பிரச்சனை தீரும். இருந்தாலும் தாய்ப் பாசம் நேரிடையாகக் குழந்தைக்கு சென்றடையாது. இது நாடகக்காரர்களுக்குப் பெரும் குறை என்கிறார். குழந்தைகளை நாடகத்தில் நடிக்க வைக்கக்கூடாது. நானும் என்னுடைய மகன்களை நாடகத்தில் பங்கு பெறச் செய்யவில்லை. நாங்கள் பட்ட சிரமங்களே போதும்; நம்முடைய பிள்ளைகளும் ஏன் அதைப் பெறவேண்டும் என்கிறார். நாடகத்தைவிட அதிகப் பணம் கிடைக்கும் தொழில் வேறு கிடைத்தாலும் நாடகத்தில்தான் இருந்திருப்பேன். இதில் மனத்திற்குச் சுகம் கிடைக்கிறது. நம்முடைய விருப்பு வெறுப்புகளை மேடையில் கொட்டித் தீர்த்துவிடலாம் என்கிறார்.

நாடகத்தில் நடிப்பது உடம்பில் ஊறிப்போய்விட்டது. இதில் கிடைக்கும் பணத்தைவிட, அதிகப் பணம் வரும் வேறுவேலை கிடைத்தாலும் நாடகத்தை விட்டிருக்க மாட்டேன். இதில் உள்ள சுகம் மற்றதில் வராது. எவ்வளவோ பேர்கள் முன்னால் நாங்கள் நாடகம் நிகழ்த்துகின்றோம்; எங்களுடைய திறமைகளை வெளிப்படுத்துகின்றோம் என்கிறார். இதில் ஒருசில கிராமங்களில்

நடிகரைக் கௌரவிப்பார்கள்; மரியாதை செய்வார்கள். கிராமத்து மக்களின் ஒட்டு மொத்த அன்பு கிடைக்கின்றது. இது வேறு வேலையில் கிடைக்காது என்கிறார்.

நாடகத்தில் ஏற்கும் பாத்திரங்கள் நிஜவாழ்க்கையில் பாதிப்பு ஏற்படுத்த வாய்ப்பு இல்லை. நாடகத்தில் பாத்திரங்களை ஏற்பதோடு சரி; வீட்டில் அதைப்பற்றி நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை என்கிறார்.

நாடகத்தின் மூலம் பெறும் பணம் இவருடைய விருப்பத்திற்கே செலவு செய்து கொள்கிறார். திருமணம் ஆனபிறகு குடும்பப் பொறுப்பின் காரணமாக எல்லாவற்றையும் இவரே கவனித்துக் கொள்வாராம். நாடகம் நிகழ்த்தும் பகுதிக்குச் செல்லும்போது பாதுகாப்பிற்காக யாரும் இவருடன் செல்வதில்லை. நமக்குத் தைரியம் இருந்தால் யாரும் பாதுகாக்க அவசியம் இல்லை. வீட்டிலும் நம்மை நம்பி வெளியில் அனுப்புவார்கள் என்கிறார். பயணம் தொடர்பான சிக்கல் ஏற்பட வாய்ப்பு இல்லை. பெரும்பகுதி நிகழ்த்தும் பகுதிக்குக் குழுவினர் அனைவரும் ஒன்றாகச் செல்வது வழக்கம். ஆகையால் பயணம் கலைஞர்களுக்கு எளிதாகின்றது.

நாடகப் பின்புலம் :

சிறு வயதில் நாடகத்தில் சேர்ந்ததால் நடிப்பது விரும்பியா அல்லது விரும்பாமலா என்று கூறமுடியாது. ஏழு வயதில் நாடகத்தில் நடிக்க ஆரம்பித்திருக்கிறார். முதல் நாடகம் நல்லதங்காள் நாடகம். நல்லதங்காளின் முதல் மகன் பாத்திரம் ஏற்று நடித்தது இன்றும் நினைவு இருக்கின்றது என்கிறார். சிறு வயதில் சேரும் நடிகர்களுக்குப் பால பாத்திரம் கொடுப்பார்கள். இதில் ஆண் பாத்திரம், பெண் பாத்திரம் என்று வேறுபாடு இல்லாமல் செய்யச் சொல்லுவார்கள். எங்களுக்கும் எதுவும் புரியாமல் சொன்னதைச் செய்வோம் என்கிறார். இவருக்கு நாடக வாழ்க்கையில் முதலில் ஐந்து ரூபாய் சம்பளம் கொடுத்துள்ளார்கள். முதலில் பங்கேற்ற நாடக வடிவம் ஸ்பெஷல் நாடக வடிவம். தொடர்ந்து இவ்வடிவத்தில் நடித்து வந்திருக்கிறார்.

ஆண் நடிகர்களோடு நடிக்கும்போது தர்க்கத்தில்தான் சிக்கல் ஏற்படும். சில ஆண் நடிகர்கள் பெண்ணுக்கு இளைப்பல்ல என்று நினைத்துக்கொண்டு பேசுவார்கள். பாத்திரத்தை விட்டு விலகிப் போய் வேறுபல தகவல்கள் எடுத்துக் கூறுவார்கள். இதே போல் பெண் நடிகரால் செய்ய முடியாது. பெண் நடிகர் ஆண்

நடிகரிடம் தோற்றுப் போகவும் கூடாது. அதே சமயம் ஆண் நடிகரிடம் எல்லைக்கு உட்பட்டுப் பேச வேண்டும். இச்சூழல்தான் பெண் நடிகர்களுக்குச் சிக்கலாகத் தோன்றும். இது பார்வையாளர்களைப் பொறுத்தும் அமையும். சில கிராமங்களில், தர்க்கத்தில் விட்டுக் கொடுக்காமல் ஆண் நடிகரோடு பேசினால், 'ஒரு பெண் ஆணை எப்படிப் பேசுகின்றாள் பார்த்தாயா' என்று கூறுவார்கள். எனவே நடிகரின் கவனம் உடன் நடிக்கும் நடிகர், பார்வையாளரின் மனநிலை இவைகளை அறிந்து கொண்டு நடிக்கும்போது சிக்கல் ஏற்பட வாய்ப்பு இல்லை என்கிறார்.

குழுவினர் நடத்தும் முறைகள் நடிகரின் பழக்கத்திற்கு ஏற்றபடி அமையும். ஒவ்வொரு நடிகரும் ராஜபார்ட், தோழி, வில்லன், பபூன் என்று நினைத்துப் பழகாமல் நடிகர், கலைஞர் என்று பழகினால் குழுவினருக்குள் ஒற்றுமை இருக்கும். ஆனால் ராஜபார்ட், ஸ்திரீபார்ட் இவர்களை வேறுமாதிரியான கண்ணோட்டத்தில் பார்ப்பதால் குழுவினருக்குள் ஒற்றுமை சீர்குலைகிறது. என்னிடம் குழுவினர் அன்பாக நடந்து கொள்வார்கள் என்கிறார்.

இவருக்குப் பிடித்த கதையம்சம் புராணங்கள். சிறுவயதில் இருந்தே ஸ்பெஷல் நாடகங்களில் நடித்து வருவதால் புராணக் கதைகளையே நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இதனால் புராணக் கதைகளின்மீது ஈடுபாடு வர ஆரம்பித்தது என்கிறார். நடிக்கும்போது மேடையில் ஒரு சில நேரங்களில் சிக்கல் ஏற்படும். அவைகளை அனுபவம் காரணமாக எளிதாகத் தீர்த்துக் கொள்ளலாம் என்கிறார்.

பார்வையாளர்களிடமிருந்து ஒருசில சிக்கல் ஏற்படுவதுண்டு. நடிப்பது பழகிவிட்டதாலும் தொழிலாகக் கருதுவதாலும் அதை எளிதில் சமாளிக்கக்கூடிய அனுபவம் வந்துவிடுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாகத் தைரியம் வந்துவிடுகின்றது என்கிறார். ஒரு கிராமத்தில் நாடகம் நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது, பார்வையாளர் ஒருவர் இவருடைய இடுப்பிற்குமேல் டார்ச் விளக்கை அடித்திருக்கிறார். இவருடன் இவருடைய சிறிய தாயார் நடிக்கவே இதைப் பார்த்து விட்டிருக்கிறார். உடனே நாடகத்தை நிறுத்தி விட்டிருக்கிறார்கள். ஒளி அடித்தது யார் என்று தெரிய வேண்டும் என்றும் அவர் இந்நடிகரிடத்தில் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்றும் கூறிக் கதையை நிகழ்த்தாமல் நிறுத்தி விட்டிருக்கிறார்கள். ஒளி அடித்தவர் நாட்டாண்மைக் காரரின் மகன் என்று கண்டு பிடிக்கப்பட்டு, அவரை இந்நடிகரின் காலில்

விழுந்து மன்னிப்பும் கேட்க வைத்திருக்கிறார்கள். இது போன்று சில கிராமங்களில் பார்வையாளர்களும் நாட்டாண்மைக் காரர்களும் நடிகர்களுடன் ஒத்துழைப்பதுண்டு என்கிறார்.

பெண் நடிகர் கவர்ச்சிக்காகத்தான் என்ற கருத்து இப்போதைய சூழலுக்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆனால் எங்கள் காலத்தில் நிலைமை வேறுமாதிரியாக இருந்தது. பெண் நடிகர் என்றால் பாத்திரப் பொருத்தம், மேடைப் பொருத்தம், குரல் வளம் இவை இருந்தால் போதும். நடிகைகள் கவர்ச்சியாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. தற்போது தொழில் போட்டிக்காகப் பெண் நடிகர்கள் ஒப்பனையைப் பார்வையாளருக்கு ஏற்றபடி செய்து கொள்வதால், கவர்ச்சிக்காக என்ற கருத்து உருவாகிறது. இது தவறான கருத்து என்கிறார்.

ரேணுகாதேவி, எம்.எஸ்.
வயது 59

செல்லப்பா பவனம்,
1, தட்டாரச்சங்கு,
மேலமாசி வீதி, மதுரை–1.

இவர் பிராமணர் வகுப்பைச் சேர்ந்தவர். இவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர். காதல் திருமணம் செய்து கொண்டவர். கணவர் பிரபல நாடக நடிகர்.

நாடகத்தில் பெறும் பணம் குடும்பச் செலவுகளுக்குப் போதுமானதாக இருந்தது. சிக்கனமாக இருப்பதால வருவாய் போதுமானதாக இருந்தது என்கிறார். நாடகத்தில் நடிப்பதால் குடும்பத்தில் சிக்கல் ஏற்பட்டதில்லை. கணவரும் நடிகர். கணவருடைய குடும்பம் நாடகத்தில் பங்கு பெற்றுள்ள மரபாகையால், நடிப்பது தொடர்பாகச் சிக்கல் ஏற்பட்டது இல்லை என்கிறார். நாடகத்தில் பங்கு பெறுவது பற்றிச் சுற்றத்தாரும் ஊரில் உள்ளவரும் பலவிதமான கருத்துகளைக் கூறுகின்றனர்.. நடிகர்களைச் சமூகம் குறைத்து மதிப்பிடாது. அது நாம் நடந்து கொள்ளும் நடத்தையை வைத்துத்தான் பேசும் என்கிறார். பொதுவாக சக மனிதர்களைப் போல்தான் நாங்களும் வாழ்கின்றோம்; எந்தவித வேறுபாட்டுத் தன்மையும் இல்லாமல் பழகுகின்றார்கள் என்று தோன்றுகிறது. ஒருசில கலைஞர்கள் செய்யும் தவறுகளுக்கு எப்படி எல்லாரும் பொறுப்பாக முடியும் என்கிறார்.

நாடகத்தில் நடிப்பதால் குழந்தை வளர்ப்பு முறை பாதிக்காது. என்னுடைய குழந்தைகளை நல்லமுறையில் படிக்க வைத்து அரசாங்க வேலையில் சேர்த்துள்ளேன். கணவன் மனைவி இருவரும் கலைஞர்களாக இருக்கும்போது, வளர்ப்பில் கவனக்குறைவு ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதையும் ஆழ்ந்து கவனித்தால் போக்கலாம் என்கிறார்.

இவரது கணவரும் நடிகர் என்பதால் நாடகத்தில் பங்கு பெறுவதில் கணவருடன் சிக்கல் ஏற்படுவதில்லை. இவருடைய மகனையோ, மகளையோ நாடகத்தில் பங்கு பெற வைக்கவில்லை. இவர்கள் படிப்பில் கவனம் செலுத்தியதால் நாடகத்தில் பங்குபெற வாய்ப்புக் கிட்டவில்லை. அவர்கள் விருப்பப்பட்டிருந்தால்

நாடகத்தில் பங்குபெறச் செய்திருப்பேன் என்கிறார். நாடகத்தைவிட அதிகப் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்திருந்தால் அந்த வேலை செய்திருக்க முடியாது. காரணம், எங்களுக்கு நாடகம் பழகிப்போய்விட்டது. இதில் பல நுணுக்கங்களையும் உத்தி முறைகளையும் அனுபவம் மூலமாகப் பெற்றிருக்கிறோம். அந்த அனுபவமே நாடகத்தில் நிரந்தரமாக இருக்க வைக்கிறது. நாடகத்தில் ஏற்கும் பாத்திரங்களில் நடிப்பதோடு சரி; அது நிஜவாழ்க்கையில் பாதிக்காது என்கிறார்.

நாடகம் நிகழ்த்தும் பகுதிக்குக் குழுவினர் ஒன்றாகச் செல்வது வழக்கம். பெரும்பகுதி கணவரும் உடன் இருப்பதால், பிரச்சனைகள் இருக்க வாய்ப்பு இல்லை. நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் இவருடைய விருப்பத்திற்கே செலவு செய்யப்பட்டது. திருமணம் ஆகிக் குழந்தைகள் வளர்ந்த பிறகு எல்லாப் பொறுப்புகளையும் இவரே எடுத்துக்கொண்டுள்ளார். வெளியூர் போகும்போது பாதுகாப்பிற்காக என்று யாரும் உடன் வருவதில்லை. கணவர் இருந்த வரையில், உடன் கணவர் இருந்தார். பிறகு எனக்குப் பாதுகாப்பு அவசியம் இல்லை என்கிறார்.

நாடகப் பின்புலம் :

இவர் ஏழு வயதில் இருந்து நடித்து வருகிறார். இவரை நாடகத்தில் அறிமுகப்படுத்தியவர் இவருடைய தந்தை. இவர் பரத நாட்டிய ஆசிரியர். இவர் கோவிந்தசாமி வாத்தியார் என்னும் நாடக ஆசிரியரிடம் பாடங்களைக் கற்றிருக்கிறார். ஜனகைக் கவிக்குஞ்சரம் என்பவரிடம் பாடல்களைக் கற்றுக் கொண்டார்.

ஆண் நடிகரோடு நடிக்கும்போது பொதுவாகச் சிக்கல் ஏற்பட வாய்ப்பில்லை என்கிறார். இவர் பெரும்பாலும் கணவருடன் நடித்துள்ளதால், நடிப்பின்போது ஒத்துப்போய்விடும். கணவரும் என்னிடம் எதைப்பற்றியும் பேசத் தயார் நிலையில் இருப்பார். இது உடன் நடிக்கும்போது தெரியாவிட்டாலும், நடிப்பதற்கு உற்சாகமாக இருக்கும் என்கிறார். நடிப்பில் எந்தப் பாத்திரம் கொடுத்தாலும் செய்வேன்; நல்லதங்காள், சந்திரமதி இரண்டு பாத்திரங்கள் நினைவுகளில் இருந்து நீங்காததாகும் என்கிறார்.

ஒப்பனைகள் பெரும்பாலும் நடிகரின் விருப்பத்திற்கேற்ப தான் செய்து கொள்வோம். பொதுவாக இந்தந்தப் பாத்திரத்திற்கு இப்படிபட்ட ஒப்பனை செய்ய வேண்டும் என்ற வரைமுறைகள்

உண்டு. இம்முறைகள் எல்லா நடிகர்களுக்கும் பொதுவானது. ஆண் பாத்திரங்கள் செய்த அவருக்குப் பெண் பாத்திரம் செய்யத் தகுதி இல்லை. எனவேதான் பெரும்பாலான பெண் நடிகர் ஆண் பாத்திரம் ஏற்பதில்லை என்கிறார். பார்வையாளர்களிடம் இருந்து பல சிக்கல்கள் வருவது நாடகத்துக்கே உரியதாகும். நானும் கணவ(ரு)ம் தலைமைப் பாத்திரம் ஏற்று நடிக்கும்போது, தர்க்கத்தில் பார்வையாளர்களுக்குத் திருப்தி இருக்காது. தர்க்கத்தில் ஆண் நடிகர் பெண் நடிகரைக் குறைக்கூறியும், பெண் நடிகர் ஆண் நடிகரைக் குறைத்துக் கூறியும் வாதாடுவர். பார்வையாளர்களும் இ(தை)த்தான் விரும்புகின்றனர். நானும் என் கணவரும் நடிக்கும்போது தர்க்கக் காட்சியில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து நடிப்போம் என்று பார்வையாளர்கள் நம்பினர். பார்வையாளர்கள், கணவன் மனைவி இருவரும் சண்டை போடமாட்டார்கள்; அதனால் தர்க்கம் சிறப்பாக அமையாது என்பார்கள். பார்வையாளர், இரண்டு பாத்திரங்கள் சண்டை போ(டு)வ(தை)த்தான் எதிர்பார்க்கிறார்கள்.

பெண் நடிகர் கவர்ச்சிக்காகத்தான் நாடகத்தில் பங்கு பெறுகிறார்கள் என்ற கருத்து தற்போதையை சூழலில் சரியாக இருக்கலாம். எங்கள் காலத்தில் இது மாதிரியான விமர்சனமும் நடிப்பு முறைகளும் இல்லை. குரல் சாரீரம் இருந்தால், பெண் கவர்ச்சிக்காக இல்லை என்பது உண்மையாகும் என்கிறார்.

வசந்தி
வயது 36

மூர்த்தி 'மருதம்',
திருப்புலிவனம் அஞ்சல்,
உத்திரமேரூர் தாலுக்கா,
செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம்.

இவர் ஆறு வயதில் நாடகத்தில் நடிக்க வந்துள்ளார். செட்டியார் இனத்தைச் சேர்ந்தவர். கலப்புத் திருமணம் செய்து கொண்டுள்ளார். திருமணம் ஆகி ஐந்தாண்டுகள் நாடகத்தில் நடிக்காமல் இருந்து, மீண்டும் கணவர் மூலமாகச் சொந்தமாகக் குழு ஆரம்பித்து அதில் நடித்து வருகிறார். இன்னும் சில ஆண்டுகளுக்குள் நாடகத்தில் நடிப்பதை நிறுத்திவிட வேண்டும் என்று கூறுகிறார்.

சொந்தக் குழுவில் நடித்து வருவதால், நாடகத்தின் மூலம் வரும் பணம் குடும்பத்திற்குப் போதும் என்கிறார். நாடகத்தில் நடிப்பதால் குடும்பத்தில் சிக்கல் இல்லை என்கிறார். திருமணம் ஆனவுடன் கணவர் நாடகம் நிகழ்த்துவதை நிறுத்தி விடுமாறு கூறியதும் ஐந்து வருடம் நாடகத்தில் நடிக்காமல் இருந்திருக்கிறார். நாடகம் ஆடிய பெண் மீண்டும் நாடகம் ஆடுவது தான் சரி; அதனால் குடும்பத்தில் பாதிப்பு எதுவும் இல்லை என்று இவர் மாமனார் தன் மகனிடம் கூறியதும், இவருடைய கணவரும் நாடகத்தில் மீண்டும் நடிக்க வைக்கச் சம்மதித்திருக்கிறார். மற்றக் குழுவில் நடிப்பதைவிட நாமே குழுவை உருவாக்கலாம் என்று நினைத்து, முதலீடு செய்து குழு ஆரம்பித்துள்ளனர். சொந்தக் குழுவில் நடிப்பதாலும் கணவர் உடன் இருப்பதாலும் பிரச்சனை இல்லாமல் இருக்கிறேன் என்கிறார்.

நாடகத்தில் நடிப்பதால் எங்கள் கிராமத்தில் என்னை வித்தியாசப்படுத்திப் பார்ப்பதில்லை; என்னிடம் நாடகக்காரி என்றும் பழகுவதில்லை; என்னைப் பெருமையாகத்தான் பார்க்கின்றார்கள் என்கிறார்.

நடிப்பது தொடர்பாகக் கணவருடன் சிக்கல் உண்டாவது இல்லை. சிக்கல் ஏற்படாதவாறு நான் நடந்து கொள்வேன் என்கிறார். பிற நடிகர்களுடன் நடிக்கும்போது அவர்களைத் தொட்டு நடிப்பதில்லை. சமீபகாலமாகக் கணவரும் நாடகத்தில்

சேர்ந்து பிரபலமாகி வருகிறார். எனவே பெரும்பாலான காட்சிகளில் கணவருடன் சேர்ந்து நடிப்பேன். அதனால் கணவருடன் நடிப்பது தொடர்பாகச் சிக்கல் ஏற்பட வாய்ப்பு இல்லை என்கிறார். என் மகனையோ மகளையோ நாடகத்தில் நடிக்க வைக்க மாட்டேன் என்கிறார். நாடகத்தில் நடிப்பது போதை மருந்து போன்றது. விடவும் முடியாது; பலனும் இருக்காது. நாடகத்தால் நல்ல நிலைக்கு வந்தவர்கள் மிகக் குறைவானவர்கள் தான். குழந்தைகளைப் படிக்க வைத்து வேறு வேலை பார்க்கும்படி முயற்சி செய்வேன். நாடகத்தில் நடிக்க வைக்க மாட்டேன் என்கிறார். நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் கணவரிடம் கொடுத்துக் கணவர் மூலமாகச் செலவுகளைச் செய்து வருகிறார். இவருடைய கணவரும் இவரது விருப்பத்திற்கு மாறாக நடந்து கொள்வதில்லையாம்.

நாடக ஒப்பந்தம் கணவர் மூலமாக நடக்கின்றது. இவர் விருப்பத்திற்காகவும் கணவர் ஒப்பந்தம் செய்கின்றார். நாடகம் நடத்த வெளியூர் போகும்போது, பாதுகாப்பிற்காக என்று யா நம் உடன் வரத் தேவையில்லை என்கிறார். திருமணம் ஆவதற்கு முன் யாரும் உடன் வருவதில்லை. குழுவினர் ஒன்றாகச் செல்வோம். இப்போது சொந்தக் குழுவாக இருப்பதால், கணவரும் உடன் இருப்பதால் கணவருடன் செல்கிறேன் என்கிறார். நிகழ்த்தும் பகுதியிலும் பிரச்சனை ஏற்படுவதில்லை. நாம் நடந்து கொள்வதைப் பொறுத்துத்தான் சூழ்நிலை அமையும். எனக்கு இதுவரையிலும் நிகழ்த்தும் பகுதிக்குச் செல்வது தொடர்பாகச் சிக்கல் ஏற்பட்டதில்லை என்கிறார்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத்தில் அறிமுகப்படுத்தியவர் இவருடைய தந்தையார். நடிப்பை விரும்பித் தேர்ந்தெடுக்கவில்லை. குடும்பத்தில் இருந்த சூழ்நிலையால் நாடகத்தில் நடிக்க வந்தேன் என்று கூறுகிறார். ஆறு வயதிலிருந்து நாடகம் நிகழ்த்தி வருகின்றார். முதலில் ஸ்பெஷல் நாடகத்தில் சேர்ந்துள்ளார். ஸ்பெஷல் நாடகத்தில் பயிற்சியும்) எடுத்துள்ளார். மாயவரம் ஸ்பெஷல் நாடகக் கம்பெனியில் முதன் முதலில் நடித்திருக்கிறார்.

ஆண் நடிகரோடு நடிக்கும்போது பிரச்சனை ஏற்படுவது சாதாரணமானது. ஸ்பெஷல் நாடகத்தில் ஆண் நடிகர்கள் விட்டுக் கொடுக்காமல் தர்க்கம் பேசுவார்கள். பெண் நடிகரிடம் பேசித் தோற்பது கேவலமாகக் கருதுவதால், அவர்களே முதலில் பெண் நடிகர்களைக் கேவலமாகப் பேசுவார்கள். மேடையில் நாம் எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும் திணற வைப்பதே

முதல் நோக்கமாகக் கருதிப் பேசுவார்கள். பழக்கப்பட்டவையாதலால் அதைச் சிக்கலாக எடுத்துக் கொள்வதில்லை. சமூகக் கதைகளை நிகழ்த்தும்போது ஆண் நடிகர்கள் பெண் நடிகரைத் தங்களோடு நெருங்கி நடிக்கச் சொல்வார்கள். இல்லை என்றால் அவர்களே நெருங்கி நடிக்க முயற்சி செய்வார்கள். இது பெண் நடிகருக்குப் பெரும் சிக்கலாகத் தோன்றும். சில நேரங்களில் மனத்திற்குப் பிடிக்கவில்லை என்றாலும், பணம் வாங்குவதால் பொறுத்துக் கொள்ள வேண்டி உள்ளது. நாவல்ஸ் நாடகத்தில் வில்லன் பாத்திரம் ஏற்பவர், பெண் பாத்திரத்தைத் துன்புறுத்துவது போல் அமையும் காட்சிகளில், பெண் நடிகர் நடித்தால் சாட்டை அடி தாறுமாறாக இருக்கும். இவைகளைப் பக்குவமாகச் செய்தால் பரவாயில்லை. ஆனால் சிலர் பாராட்டுப் பெற வேண்டும் என்பதற்காக எதார்த்தமாகவும் நடிக்க முயற்சி செய்வார்கள் இது ஆண் நடிகர்களுக்கு இயல்பாக இருந்தாலும், பெண் நடிகர்களுக்குச் சிக்கலானது என்கிறார். இவர் ஸ்பெஷல், அமெச்சூர், நாவல்ஸ் போன்ற மூன்று வடிவங்களிலும் பங்கு பெற்றுள்ளதால், மூன்று வடிவ ஆண் நடிகர்களைப் பற்றியும் கருத்துக் கூறுகிறார்.

சொந்தமாகக் குழு நடத்தி வருவதால், மற்ற நடிகர்கள், குழு முதலாளியாகப் பார்க்காமல் நடிகராகத்தான் பழகுகின்றார்கள். நடிக்கும் போதும் குழுவினர், நடிகரின் வசதிக்கு ஏற்ற வகையில் விட்டுக்கொடுத்து நடிப்பார்கள் என்கிறார். இவருக்குச் சமூக நாடகங்களில் வரும் பாத்திரங்கள்தான் மிகவும் பிடித்தமானவை. இவருக்குப் பெரும்பாலும் பாதிப்புக்கு உள்ளாகும் பாத்திரமான சோகமான காட்சிகளை நிகழ்த்திக் காட்டுவதற்கான பாத்திரங்கள் கொடுக்கப்படுகிறது. இவருக்குக் குரல் வளம் இருப்பதால் அதிகமாக சோகப் பாடல்களைப் பாடி பார்வையாளர்களைத் திருப்திபடுத்துவதற்காகச் சோகமான பாத்திரங்கள் இவருக்காகவே உருவாக்குகின்றனர்.

இவருக்குப் பிடித்தமான கதையம்சம் கற்பனைக் கதை. புராணம் என்றால் கதைத் தொடர்பான பாடல்களை மட்டும் பாட வேண்டும். இப்பாடல்களைப் பாடும்போது சாரீரம், சுதி, தாளம் இவைகளில் கவனம் வைத்துக் கொண்டு இதிலிருந்து மாறாமல் பாட வேண்டும். கற்பனைக் கதைகளுக்குப் பாடலில் கவனம் செலுத்தத் தேவை இல்லை. திரைப்படப் பாடலையோ அல்லது அதன் மெட்டுக்களிலோ பாடினால் போதும். பார்வையாளர்கள் பாராட்டுவார்கள் என்கிறார்.

பார்வையாளரிடத்திலிருந்து சிக்கல் ஏற்பட வாய்ப்பு இல்லை என்கிறார். சில கிராமங்களில் சில இளைஞர்கள்

இடையூறு செய்வார்கள். அதையும் நாடகம் ஏற்பாடு செய்த குழுவினர் சரி செய்து விடுவார்கள். பெண் பாத்திரத்தைப் பெண் ஏற்பதற்கும் ஆண் ஏற்பதற்கும் வேறுபாடு இருக்கின்றது. ஆண் நடிகர் பெண் பாத்திரத்தை மிகைப்படுத்திக் காட்டுவார். பெண் நடிகர் இயல்பாக்குவார். ஆண் நடிகருடன் காதல் காட்சிகளை நிகழ்த்துவது போன்று பெண் நடிகரால் நிகழ்த்தப்படுவதில்லை. பார்வையாளரைப் பொறுத்தவரை, பெண் பாத்திரத்தைப் பெண் நடிகர் நடித்துக் காட்டுவதைவிட ஆண் நடிகர் நிகழ்த்திக் காட்டுவதையே விரும்பிப் பார்க்கின்றனர் என்கிறார்.

பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காக நாடகத்தில் சேர்த்துக் கொள்கின்றார்கள் என்பது நாவல்ஸ் நாடகத்திற்குப் பொருந்தும் என்கிறார். பெண் நடிகர் இருக்கும் குழு பிரபலமானதாகவும் அதிகம் பணம் வாங்குவதாக இருப்பதாலும் இக்கருத்து சரி என்று கூற வேண்டும் என்கிறார்.

வரலட்சுமி, டி.என்.ஏ.
வயது 45

சுப்பம்மாள் காம்பவுண்ட்,
93ஆ, சில்லாண்டியம்மன் கோயில் தெரு,
நாராயணன் பிள்ளைத் தோட்டம்,
திண்டுக்கல்.

இவர் கலப்புத் திருமணம் செய்து கொண்டுள்ளார். வெள்ளாளர் வகுப்பைச் சேர்ந்தவர். கணவர் சீன் கம்பெனி (நாடகப் பொருட்கள்) நடத்தி வருகின்றார்.

நாடகத்தின் மூலம் வரும் பணம் குடும்புச் செலவுகளுக்குப் போதவில்லை என்கிறார். சீசனில் தொடர்ந்து நாடகம் நிகழ்த்தக் கிடைத்தால் போதும். தொழில் போட்டி அதிகமாகி விட்டது. வருமானம் குறைவாக வருகிறது. இருந்தாலும் குடும்பத்தை நடத்திக் கொண்டு வருகிறோம் என்கிறார். தான் நாடகத்தில் நடிப்பது பற்றி ஊரில் உள்ளவர்கள் தவறாக நினைக்கவில்லை. எல்லாரிடமும் பழகுவதுபோல் என்னிடமும் பழகுகின்றார்கள். ஆனால் திருமணம் செய்து கொண்ட பிறகுதான் சிலர் நாடகக்காரி, அவளே கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள்; நாடகக்காரி எல்லாம் இப்படித்தான் இருப்பார்கள் என்று கூறினார்கள். நாடகத்தில் நடிப்பதால் இந்நிலை ஏற்பட்டது என்கிறார்.

நாடகத்தில் நடிப்பதால் குழந்தை வளர்ப்பு முறை பாதிக்கின்றது. படிப்பில் கவனம் செலுத்த வைக்க முடியாது. பெரும்பான்மையான நாடகக் கலைஞர்களின் மகனோ மகளோ உயர்ந்த படிப்பு படித்திருக்க மாட்டார்கள். நாடகத்தில் நடிப்பது தொடர்பாகக் கணவருடன் சிக்கல் ஏற்பட்டதில்லை என்கிறார். கணவர் நாடகம் தொடர்பானவர்களுடன் பழகி நாடகக்காரர்களைப் பற்றிப் புரிந்து கொண்டுள்ளார். கணவர் முஸ்லீம் என்றாலும் என் விருப்பப்படி நடந்து கொள்வார் என்கிறார்.

இவர் பிள்ளைகளை நாடகத்தில் நடிக்க வைக்க மாட்டேன் என்று கூறுகிறார். நாடகத்தில் எவ்வளவு பொருட்கள் சம்பாதித்தாலும் நிம்மதி இல்லை. முன்பு இருந்த மாதிரி நாடகச் சூழ்நிலை இப்போது இல்லை. தொழிலில் போட்டியும்

பொறாமையும் அதிகமாகி விட்டது என்கிறார். நாடகத்தைவிட அதிகப் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்திருந்தால் நாடகத்தில் நடிப்பதை நிறுத்தி இருப்பீர்களா என்று கேட்டதற்கு- நடிப்பதை நிறுத்தி இருப்பேன்; ஆனால் நாடகத்தில் இருக்கும் வருமானம் வேறு எந்தத் தொழிலிலும் இல்லை என்கிறார்.

நாடகத்தில் ஏற்கும் பாத்திரம் நிஜ வாழ்க்கையில் பாதித்ததில்லை. நாடகத்தில் நடிப்பது கதையைப் பற்றிப் பேசுவது எல்லாம் வீட்டில் வைத்துக் கொள்வது இல்லை. வீட்டில் உள்ள வேலைகளில் நாடகக் கதைகளைப் பற்றி பேச முடியாது என்கிறார். நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம், இவர் விருப்பத்திற்குச் செலவு செய்கின்றார். ஆனால் குடும்பப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு இருக்கும்போது சொந்தச் செலவுகளைப் பற்றி நினைத்துப் பார்ப்பதில்லை என்கிறார்.

நாடக ஒப்பந்தம் பற்றிச் சங்கத்தில் உள்ள காலண்டரில் குறித்து வைப்பார்கள். இது நமக்கு பிடித்தால் நடத்தலாம்; வேறு வேலை இருந்தால் நாடகத்தில் பங்கு பெற முடியாது என்றும் கூறி விடலாம். நாடகத்தில் நடிக்க வெளியூர்களுக்குப் போக நடிகருடன் யாரும் வரவேண்டியதில்லை. சில கணவன்மார்கள் நம்புவதில்லை. அப்படி நம்பாதவர்கள்தான் நடிக்கும் கிராமத்துக்குக் கூடவே போய் வருவார்கள். எனக்கு அப்படி இல்லை. என் கணவர் என்னைச் சந்தேகப்படுவதில்லை. நாங்கள் ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு அதன்படி நடப்போம் என்கிறார்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத் துறையில் அறிமுகப்படுத்தியவர், இவருடைய தந்தையார். நடிப்பை விரும்பித் தேர்ந்தெடுத்துள்ளார். பள்ளியில் படிக்கும்போதே சிறப்பாக நடனம் ஆடுவாராம். பள்ளி நிகழ்ச்சிகளில் இவரைத்தான் நடனம் ஆடச் சொல்லுவார்களாம். அப்போது பள்ளி ஆசிரியர்களும் 'உனக்குப் படிப்பு வராது; நாடகம் அல்லது நடனம் ஆடிப் பிழைத்துக் கொள்வாய்' என்று கூறுவார்களாம். அதன்படியே நான் நாடகத்தில் சேர்ந்து விட்டேன். இது தெரிந்தோ, தெரியாமலோ நடந்ததாக இருந்தாலும், என் மனத்திற்குப் பிடித்த தொழிலாக உள்ளது என்கிறார். எஸ். சம்பத் வாத்தியார் என்பவரிடம் நாடகத்தில் நடிக்கப் பயிற்சி எடுத்துள்ளார். முதலில் ஸ்பெஷல் நாடகத்தில் தான் நடித்திருக்கிறார்.

ஆண்களோடு நடிக்கும்போது நடைமுறைச் சிக்கல்கள் உண்டு. ஸ்பெஷல் நாடகத்தைவிடச் சமூக நாடகங்களில் அதிகச் சிக்கல் உண்டு. சமூக நாடகங்களில் நாடகம் ஏற்பாடு செய்யும் கிராமத்தில் நடிக்கும் ஆண் நடிகர்கள், நாடகத்தைத் தொழிலாக நடிப்பதில்லை. ஆனால் தன்னுடைய சொந்தக் கிராமத்தில் நடித்துப் பெயர் எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில், உடன் நடிக்கும் பெண் நடிகர்களைப் பயன்படுத்திக் கொள்வார்கள். கதாநாயகன் பாத்திரத்தில் நடிப்பவரானால் என்னிடம் நாடகத்தில் கொஞ்சம் தாராளமாக நடிக்க வேண்டும் என்று கூறுவார். நாடகத்திற்காகப் பேசிய பணம் இல்லாமல், தனியாகப் பணம் தருகிறேன் என்று கூறுவார். இதனால் அவருடன் நடிக்கும்போது அவர் நடிப்பதற்கு இணையாக நடிக்க வேண்டும். திரைப்படப் பாடலுக்கு திரைப்படத்தில் வருவது போன்று நடனம் ஆடி ஆண் நடிகருடன் நடிக்க வேண்டும். இது நடைமுறையில் ஒத்து வராது. ஆண் நடிகர் சொந்த இடமாக இருப்பதால் எப்படி வேண்டுமானாலும் நடிப்பார்; பெண் நடிகரால் முடியாது. முதல் இரவுக் காட்சியை மேடையில் நிகழ்த்திக் காட்டுவது, கணவன் மனைவி நெருக்கமான உறவுகளைக் காட்சியாக்குவது இவை அனைத்தும் பெண் நடிகருக்கு நடைமுறையில் சிக்கலாகத் தோன்றும் என்கிறார்.

இவருக்குப் பிடித்த பாத்திரம் கண்ணகிப் பாத்திரம். கோவலன் கண்ணகி நாடகத்தில் எனக்குப் பிரபலமான இடம் உண்டு. இக்கதை மனத்திற்குப் பிடித்தது என்றாலும் இதைச் சிறப்பாகச் செய்வேன் என்கிறார். ஒப்பனை, நடிகர்கள் விருப்பத்திற்காகத்தான் செய்து கொள்வோம். ஆனால் சமூக நாடகங்களில் நாடக இயக்குநர் கூறுவது போல் ஒப்பனைகளைச் செய்ய வேண்டும். மனத்திற்குப் பிடிக்காவிட்டாலும் அவர்களிடம் நாடகத்திற்கு ஒத்துக் கொண்ட பிறகு ஒப்பனைகளைச் செய்தாக வேண்டும். இல்லை என்றால் நாடகம் ஏற்பாடு செய்தவர்கள் சும்மா விடமாட்டார்கள். ஸ்பெஷல் நாடகத்தில் அப்படி இல்லை, நம் விருப்பப்படி செய்து கொள்ளலாம் என்கிறார்.

பிடித்த கதை வடிவம் புராணக் கதைதான். கற்பனைக் கதைகளில் ஆபாசத்திற்கும், பெண் நடிகர்களைப் பயன்படுத்துவதற்கும்தான் முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். ஸ்பெஷல் நாடக வடிவத்தில் சுவாமிகளின் கதையைப் பெரும் பகுதி நடத்துவதால், நடிக்கவும் சிக்கல் இல்லாமல் இருக்கும் என்கிறார். குழுவில் நடிப்பு அல்லாத பிற வேலைகள் செய்வது

இல்லை. பெண் நடிகர்களைப் பொறுத்த வரை நாடகம் தொடர்பான பிற வேலைகளில் ஈடுபடுவது இல்லை.

பார்வையாளர்கள், சமூக நாடகங்களில் நடிக்கும்போது ஒரு மாதிரியும் ஸ்பெஷல் நாடகங்களில் நடிக்கும்போது ஒரு மாதிரியாகவும் தெரிகிறார்கள். ஸ்பெஷல் நாடகங்களில் நடிக்கும் போது கதையைக் கவனிக்காமல், வசனத்தையும் தர்க்கத்தையும் இரண்டு பொருள் இருக்கும் வசனத்தையும் கவனிப்பார்கள். சத்தம் இல்லாமல் அமைதியாக இருப்பார்கள் என்கிறார். பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காகத்தான் நாடகத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்ற கருத்து சமூக நாடகங்களுக்குப் பொருந்தும். ஸ்பெஷல் நாடகங்களுக்குப் பொருந்தாது. ஸ்பெஷல் நாடகத்தில் குரல் வளம் தர்க்கம் பேசத் தெரிந்தவர்களுக்கே முதலிடமாகும். கவர்ச்சி எல்லாம் இரண்டாம் நிலைதான் என்கிறார்.

விஜயலட்சுமி
வயது 23

30டி, மதுராந்தோட்டத் தெரு,
காஞ்சிபுரம்,
செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம்.

இவர் நாடார் வகுப்பைச் சேர்ந்தவர். திருமணம் ஆனவர். கணவரும் நாடக நடிகர். கணவர், தாய், தந்தை, அண்ணன் அனைவரும் நாடக நடிகர்கள் என்பதால், இவர் நாடகத்தில் பங்கு பெறுவது குறித்துக் குடும்பத்தில் பிரச்சனை ஏற்படுவதில்லை என்கிறார். நாடகத்தின் மூலம் வரும் பணம் குடும்பச் செலவுகளுக்குப் போதவில்லை என்கிறார். ஊரில் நாடகத்தில் பங்கு பெறுவதுபற்றி எதுவும் கூறுவதில்லை. ஏற்கனவே குடும்பத்தார் நடிகர்கள் என்பதால், நான் நாடகத்தில் நடிப்பது புதியது அல்ல. பெண்கள் நாடகத்தில் நடிப்பது கேவலம் என்று நினைத்த காலம் மாறிவிட்டது. திறமையும் உழைப்பும் இருந்தால் யார் வேண்டுமானாலும் தொழில் செய்யலாம் என்கிறார்.

நாடகத்தில் நடிப்பதால் குழந்தை வளர்ப்பு முறை பாதிக்கின்றது. என்னுடைய அப்பா, அம்மா நடிகர்களாக இருந்ததனால் என்னால் படிப்பைத் தொடர்ந்து படிக்க முடியவில்லை. எங்கள் மீது கவனம் செலுத்தாமல் போய்விட்டனர். எங்கள் படிப்பு மீது கவனம் செலுத்தி இருந்தார்கள் என்றால், நான் இப்போது ஏன் நாடகத்தில் நடிக்கின்றேன்? வேறு வேலையில் இருந்திருப்பேன் என்கிறார். நடிப்பதால் கணவருடன் பிரச்சனை ஏற்பட்டதில்லை. காதல் திருமணம் செய்து கொண்டதால், ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டுள்ளோம். மேடையில் நடிக்கும்போது கணவர் இருக்கின்றாரே என்று யோசிப்பது இல்லை. என் விருப்பப்படி நடிப்பேன். கணவரும் நடிப்புத் தொடர்பாகக் கண்டு கொள்வது இல்லை என்கிறார்.

நாடகத்தைவிட அதிகப் பணம் கிடைக்கும் வேறு வேலை கிடைத்திருந்தால், நாடகத்தில் நடித்திருக்க மாட்டேன் என்கிறார். நாடகத்தில் ஏற்கும் பாத்திரங்கள் சொந்த வாழ்க்கையில் பொருத்திப் பார்ப்பதில்லை. சிறிய வயதில் அம்மாவின் நடிப்பைப் பார்க்கும்போது சில கற்பனைகள் வரும். ஆனால் நான் தொடர்ந்து நடித்தபோது நாடகம் வேறு, வீடு வேறு என்று

இயல்பாக மாறிவிட்டது. நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் இவர் விருப்பத்திற்குச் செலவு செய்து கொள்கின்றார். கணவர் குடும்பப் பொறுப்பை கவனித்துக் கொண்டாலும், என் விருப்பத்திற்கு மாறாகச் செய்யமாட்டார் என்கிறார்.

நாடக ஒப்பந்தம் குழு முதலாளி அல்லது ஆசிரியர் பார்த்துக் கொள்வார்கள். எங்களுக்கும் ஒப்பந்தத்திற்கும் தொடர்பு இல்லை. நாடகம் நிகழ்த்த கிராமங்களுக்குச் செல்வது தொடர்பாகச் சிக்கல் ஏற்பட்டதில்லை. திருமணம் ஆவதற்கு முன் அம்மா அப்பா உடன் வருவார்கள். திருமணத்திற்குப் பிறகு கணவரும் நானும் ஒரே குழுவில் இருப்பதால், இருவரும் ஒன்றாகச் செல்வோம். சில நேரங்களில் கிராமத்தில் கடைசி பஸ்ஸை விட்டுவிட்டால்தான் பிரச்சனையாக இருக்கும். நாடகம் நிகழ்த்தியாக வேண்டியதால் சிரமப்பட்டுப் போக வேண்டி இருக்கும் என்கிறார்.

நாடகப் பின்புலம் :

இவரை நாடகத்தில் அறிமுகப்படுத்தியவர் இவருடைய தந்தை. தந்தையும் நாடகத்தில் நடித்து வருகிறார். நாடகம் நடிப்பதை விரும்பித் தேர்ந்தெடுத்தேன் என்கிறார். சிறிய வயதில் இருந்தே அம்மா அப்பாவின் நாடகங்களைப் பார்த்துக் கொண்டு வந்ததால், நாடகத்தில் நடிக்க ஆர்வம் வந்தது. நாடகத்தில் நம்மை நடிக்க வைக்க மாட்டார்களா என்று ஏங்கியதுண்டு. ஆனால், நாடகத்தில் சேர்ந்து நடித்து அனுபவம் பெற்ற பிறகுதான், இதில் உள்ள சிரமம் தெரிய வந்தது. இது முதலிலே தெரிந்திருந்தால் நாடகத்தின் மீது இருந்த ஈடுபாடு மாறி இருக்கும் என்கிறார்.

முதலில் நாவல்ஸ் வடிவத்தில் சேர்ந்து அவ்வடிவத்திலேயே நடித்து வருகிறார். ஆண் நடிகர்களோடு நடிக்கும்போது நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுவது இயற்கையானது. ஆண் நடிகரில் வில்லன் பாத்திரத்தோடு மட்டும் சிக்கல் ஏற்படும். இது ஆண் நடிகருக்கும் சிக்கல்; பெண் நடிகருக்கும் சிக்கல் ஆகும். சில நேரங்களில் வில்லனால் துன்புறுத்தப்படும் காட்சியில் வில்லன் நடிகர் மற்ற பெண் பாத்திர நடிகரோடு நடிப்பது போன்று பெண் நடிகருடன் நடிக்க முடியாது. சாட்டையால் அடித்தல், தாறுமாறாக இழுத்தல், காலால் உதைத்தல் போன்ற இக்காட்சிகளில், பெண் நடிகரிடம் முழுமையாகச் செயல்படுத்த மாட்டார்கள். இதனால் காட்சியும் சிறப்பாக அமையாது என்கிறார்.

குழுவினர் பழகுவதில் வித்தியாசப்படுத்திப் பார்ப்பதில்லை. அனைவரும் ஒரு குடும்பமாக இருப்பது போல் பழகுவோம்.

என்கிறார். இவருக்கு வசனம் அதிகம் உள்ள பாத்திரங்கள் பிடிக்குமாம். இவருக்கு சோகப் பாத்திரங்கள் அதிகமாகக் கொடுக்கப்படுவதில்லை. நடனம் ஆடும் தோழிப் பாத்திரம் கதாநாயகி பாத்திரம் என்றால் கதைக்கு இரண்டாம் நாயகி பாத்திரம் கொடுக்கப்படுகிறது. ஒப்பனை இவர் விருப்பத்திற்கே செய்து கொள்கிறார். ஆரம்பத்தில் இவருடைய தாயின் விருப்பத்திற்காகச் செய்து கொள்வாராம். பிடித்த கதையம்சம் கற்பனைக் கதைகள் என்கிறார். புராணக் கதைகளில் பாடல்களில் சிறப்பாக இருந்தாலும், பார்வையாளர்கள் நீண்டநேரம் உட்காருவதில்லை. கற்பனைக் கதைகளை நிகழ்த்தும்போது, பார்வையாளர்கள் விருப்பமாக உட்கார்ந்து கொண்டு இருக்கின்றார்கள். திரைப்படப் பாடலையும் கற்பனைக் கதையில் தான் அதிகமாகப் பாட முடிகிறது. பார்வையாளர்களிடமும் உடனுக்குடன் பாராட்டும் பரிசும் வருகின்றது. இதனால் நடிப்பதற்கும் உற்சாகமாக இருக்கின்றது. எனவேதான் கற்பனைக் கதைகள் பிடித்தமானவையாக இருக்கிறது என்கிறார்

குழுவில் நடிப்பு அல்லாத பிற வேலைகள் செய்வதில்லை. குழு வேலைகளுக்கும் நடிகருக்கும் தொடர்பு இல்லை. ஒவ்வொரு வேலைக்கும் தனியாக நபரைத் தேர்ந்தெடுத்து, அதற்குத் தனியாக பணமும் தரப்படுகிறது. ஆகையால் மற்றவர்களுக்கு வேலை இருக்காது என்கிறார்.

பார்வையாளரிடத்தில் நடிகருக்குச் சிக்கல் ஏற்படுவதில்லை என்கிறார். திரைப்படப் பாடல்களைப் பாடும்போது அவர்கள் இரசிக்கும் சினிமாக் கதாநாயகர்களின் பாடலைப் பாடும்போது சத்தம் போடுவார்கள். சில கிராமங்களில் மேடையில் தோன்றும் போது சத்தம் போடுவார்கள். இவை எல்லாம் சிக்கலாகத் தோன்றாது. அதிகமானாலும் கிராமத்து மக்களே சரி செய்துவிடுவார்கள். ஒப்பனை செய்யும்போது மட்டும் சிலர் கொட்டகைக்கு உள்ளே வந்து விடுவார்கள். சில நடிகருக்கு முன்னமே தெரிந்திருந்தால், அவர்களிடம் பேசுவதுபோல் வந்து உட்கார்ந்து விடுவார்கள். இதை நடிகரும் ஒன்றும் செய்ய முடியாது. இது போன்று சில நேரங்களில் கொட்டகையில் கூட்டம் அதிகமாகி விடும். நடிகர்கள் வெளியில் போகச் சொன்னாலும் போக மாட்டார்கள். நாடகம் ஏற்பாடு செய்தவர்கள் வந்து ஏதாவது பேசினாலோ அல்லது திட்டினாலோ மட்டும் வெளியே செல்வார்கள். இது போன்ற நேரங்களில் மட்டும்தான் நடிகர்களுக்கு, குறிப்பாகப் பெண் நடிகர்களுக்கு இடையூறாக இருக்கும் என்கிறார்.

பெண் பாத்திரத்தைப் பெண் ஏற்பதற்கும் ஆண் ஏற்பதற்கும் வேறுபாடு இருக்கின்றது. ஆண் நடிகர் செய்யும் உடல் அசைவு, சைகைகள், பேச்சு வெளிப்பாடு இவை பெண் நடிகரால் அப்படியே செய்ய முடியாது. பெண் பாத்திரம் ஆண் நடிகர் ஏற்றுள்ளதால், உடன் தோழியாக நடிக்கும் ஆண் நடிகருடன் மிகவும் நெருக்கமாக நடிக்கின்றார். இவரது நெருக்கமும் நடிப்புத் திறனும் பார்வையாளருக்குப் பிடித்தவையாக இருக்கும். ஆனால் பெண் நடிகர், உடன் நடிக்கும் ஆண் நடிகரிடம் நெருக்கமாக நடிக்க முடியாது. உடல் அசைவுகளையும் இயல்பாகத்தான் செய்ய முடியும். பாத்திரத்தை ஆண் நடிகர் மிகைப்படுத்திக் காட்டுவார். பெண் நடிகர் இயல்பாக நடிப்பார் என்கிறார்.

பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காக நாடகத்தில் சேர்த்துக் கொள்கிறார்கள் என்பது தவறு. நாடக வளர்ச்சியில் பெண் பாத்திரங்களில் நடிக்கும் ஆண் நடிகர்கள்தான் கவர்ச்சியாக நடிக்கின்றார்கள். பெண் நடிகர் ஒப்பனை செய்வது, பார்வையாளரிடத்தில் மேடையில் வைத்துக் கொள்ளும் தொடர்புகள் இவைகளில் கவர்ச்சியாக இருக்க முயற்சி செய்தாலும் தவறாகப் பேசுவார்கள் என்கிறார்.

ஜெயசித்ரா
வயது 38

தடிகொண்ட அய்யனார் கோயில் தெரு,
பேராங்குளம் தென்கரை,
அய்யனார்புரம்,
புதுக்கோட்டை.

சமீபத்தில் தன் கணவரிடமிருந்து விவாகரத்து செய்து கொண்டு தனியே வாழ்ந்து வருகிறார். கணவர் வேறொருவரைத் திருமணம் செய்து கொள்ளததால் இவருக்கு இப்பிரச்சனை உண்டானது. இவருடைய தங்கை நாடக நடிகராக உள்ளார். தம்பி நாடக அமைப்பாளராகவும் சீன் கம்பெனி நடத்துபவராகவும் இருக்கிறார். தம்பி மனைவியும் நடிகராக உள்ளார். திருமணம் ஆகியும் குழந்தை பெற்றுக்கொள்ளாமல் இருந்தேன் என்கிறார். இவருடைய தந்தை ஆர்மோனியம் வாசிப்பவர். இவர் ஆர்மோனியம் சரி பார்க்கும் வேலையிலும் ஈடுபட்டிருக்கிறார்.

நாடகத்தின் மூலம் பெறும் பணம் குடும்பச் செலவுகளுக்குப் போதவில்லை என்கிறார். முன்பைவிடத் தற்போது பணம் அதிகம் தருகின்றார்கள். இருந்தாலும் இப்போது உள்ள விலைவாசியில் குடும்பம் நடத்துவது கடினமாக உள்ளதாம். சுற்றுப்புறத்தில் வாழும் நபர்கள் என்னிடம் எந்தப் பாகுபாடும் பார்க்காமல் பழகுகின்றனர் என்கிறார்.

நாடக அனுபவம் :

இருபது ஆண்டுகள் நாடக அனுபவம் பெற்றிருக்கிறார். நாடகத் துறையில் அறிமுகப்படுத்தியவர் இவருடைய தந்தையார். தந்தையே சங்கரதாஸ் சுவாமிகளின் பாடல்களைக் கற்றுத் தந்துள்ளார். கதைத் தொடர்பான தர்க்கங்களையும் ஆரம்ப காலங்களில் தந்தை கற்றுத் தந்துள்ளார்.

ஸ்பெஷல் நாடகங்களில் வள்ளித் திருமணம், சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரா போன்ற கதைகளில் உள்ள தர்க்கங்கள் பாடல்கள் பெரும்பாலும் பழகிவிட்டது. எனவே, நடிக்கும்போது கதைத் தொடர்பாக எந்தவிதச் சிக்கலும் இல்லை என்கிறார். இவர் அமெச்சூர் நாடகங்களிலும் நடித்துள்ளார். ஸ்பெஷல்

நாடகத்தில் பெற்ற அனுபவம், அமெச்சூர் நாடகத்திற்குப் பயனுள்ளதாக இருந்ததாம். அமெச்சூர் நாடகங்களில் கற்பனைக் கதைகளும் சமுதாயம் தொடர்பான வரலாற்றுக் கதைகளும் நிகழ்த்தப்படுவதால், வசனங்களும் பாடல்களும் நம் கற்பனைக்கு ஏற்றவாறு பாடலாம் என்கிறார்.

அமெச்சூர் நாடகங்களில் நடித்த இவர், ஸ்பெஷல் நாடகங்களில் நடிக்கும்போது இரண்டிற்கும் நடிப்புத் தொடர்பாக வித்தியாசம் இருக்கிறது என்கிறார். ஸ்பெஷல் நாடகம் என்றால் கதைக்குரிய பாடல்களை ஒரு சில இடங்களில் கண்டிப்பாகப் பாடியாக வேண்டும். எனவே, நடிகர் அக்கதைகளுக்குரிய பாடல்களைத் தெரிந்து கொள்வது அவசியமாகிறது. அமெச்சூர் நாடகத்தில் எந்தப் பாடலும் பாட முடியும் என்கிறார். இரண்டு வடிவங்களிலும் நடித்த இவருக்கு ஸ்பெஷல் நாடக வடிவம்தான் பிடித்த வடிவமாம். அரிச்சந்திரா, சத்தியவான் சாவித்திரி, நல்லதங்காள் போன்ற கதைகள் மிகவும் பிடித்தவைகளாம்.

நடிப்பின்போது ஆண் நடிகர்களால் ஏற்படும் சிக்கலும், பார்வையாளர் மூலமாக ஏற்படும் சிக்கலும் தவிர்க்க முடியாதவைகள். ஆனால், அதை எப்படி எதிர்கொள்வது அல்லது ஏற்படாமல் தடுப்பது' நடிகர்களிடம் (நம்மிடம்) தான் உள்ளது என்கிறார். எனக்கும் என்னுடன் நடித்த ஆண் நடிகருக்கும் மேடையில் சண்டை ஏற்பட்டது. நான் செருப்பால் அடித்தேன் என்று ஆவேசமாகக் கூறுகிறார். புடவையைப் பிடித்து இழுத்தல், கையை இறுக்கமாகப் பிடித்தல், இழுக்கும்போது தன்மேலே சாயும்படி வலுவாக இழுத்தல் போன்றவைகள் ஆண் நடிகர்களால் ஏற்படும் சிக்கல்கள் என்று கூறுகின்றார். பார்வையாளர்கள் கை அசைவு மூலமாகச் சைகைகள் செய்வார்கள்; ஒரு சிலர் சத்தமாக ஒலி எழுப்புவார்கள். இதைப் பார்வையாளர்களே சரி செய்து விடுவர்.

பார்வையாளரிடத்தில் இருந்தோ அல்லது சக நடிகருடனோ சிக்கல் ஏற்பட்டால், அதைச் சங்கத்தின் மூலமாகவும் தீர்த்து வைக்கின்றனர். சங்கத்தில் இருபது ஆண்டுகளாக இருப்பதால் குழுவினரிடம் எந்தப் பிரச்சனையும் இல்லை. ஒப்பனை, கதைகளுக்கு ஏற்றாற்போல் செய்து கொள்வோம். பொதுவாக, நடிகர்களின் விருப்பத்தின்படிதான் ஒப்பனை செய்து கொள்வோம் என்கிறார்.

நடிப்பு அல்லாத பிற வேலைகள் பெரும்பாலும் செய்வதில்லை. குழு தொடர்பான வேலைகள் ஏதாவது இருந்தால் செய்வேன். பாடல்களுக்கு மெட்டு அமைத்து இவரே

பாடுவாராம். இவை திரைப்பட மெட்டுக்களைச் சார்ந்தும் இசைப் பாடல்களைச் சார்ந்தும் இருக்கும். பெண் நடிகர் பெண் பாத்திரங்களை ஏற்கும்போது அப்பாத்திரமாகவே மாறிவிட வேண்டும். அப்போதுதான் நடிப்பும் சிறப்பாக அமையும். மேடையில் ஏற்கும் பாத்திரங்கள் மேடையோடு சரி, அதை வீட்டில் நினைத்துப் பார்ப்பதில்லை என்கிறார்.

பெண் நடிகர்கள் கவர்ச்சிக்காக மட்டும் நடிக்கின்றார்கள் என்பதற்குக் காரணம் கூறுகிறார். நடிக்கத் தெரியாதவர்கள் கவர்ச்சியாக நடந்து கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது. ஆனால் இசைப் பாடல்களையும் தர்க்கங்களையும் கற்றிருந்தால், கவர்ச்சி என்பதற்கே இடமில்லை. ஆண்கள் எப்படிப் பாத்திரங்களை ஏற்று நடிக்கின்றனரோ அது போலத்தான் பெண் நடிகர்களும் ஏற்று நடிக்கின்றனர். இதில் கவர்ச்சிக்கானவர் என்று எப்படிக் கூற முடியும் என்கிறார்.

ஜெயலதா, ஆர்.ஜெ.
வயது 40

37, 4ஆம் வீதி,
கணேஷ் நகர்,
புதுக்கோட்டை.

திருமணம் ஆனவர். இவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர். கணவர் வேறொருவரைத் திருமணம் செய்து கொண்டு அவரோடு வாழ்ந்து வருகிறார். இவருடைய தம்பி ராஜநடிகர். நாடகத்தின் மூலம் இவர் ஓரளவிற்குப் பணம் சம்பாதித்துள்ளார். எனவே இவருக்கு நாடகத்தின் மூலம் வரும் பணம் குடும்பச் செலவுகளுக்குப் போதுமானதாக இருந்து வருகிறது. கணவர் நாடகம் தொடர்பானவைகளைக் கண்டு கொள்வதில்லை. ஆகையால் இவரால் நாடகம் தொடர்பான வேலைகளில் முழுமையாக ஈடுபட முடிகிறது.

இவர் வாழும் பகுதியில் நாடகக் கலைஞர்கள் என்றாலே ஒரு தவறான கண்ணோட்டம் இருக்கிறது. இது ஒரு சில நாடகக் கலைஞர்கள் செய்யும் தவறுகளால், மற்றக் கலைஞரையும் பாதிக்கின்றது என்கிறார். "நம்முடன் நல்ல முறையில் பேசுவார்கள்; ஆனால் நாம் இல்லாத நேரங்களில் நம்மைப்பற்றித் தவறாகப் பேசுவார்கள்" என்கிறார். இவர் வாழும் பகுதி தொடர்பான மற்ற வேலைகளில் இவரும் பங்கெடுத்துக் கொள்கிறார். அப்பகுதி மக்களைக் கருத்தில் கொள்ளாமல் வாழ்ந்து வருவதாகக் கூறுகிறார். நாடகத்தில் நடிப்பதால் குழந்தை வளர்ப்பு முறை பாதிக்கப்படுகிறது. குழந்தைகளை நேரடியாகப் பார்த்துக் கொள்ள முடிவதில்லை. இதனால் குழந்தைகளின் நடத்தைகளைக் கவனிக்க முடியாமல் கல்வி பாதிக்கிறது என்கிறார்.

இவருடைய குழந்தைகளை நாடகத்தில் நடிக்க விடமாட்டேன் என்று திட்டவட்டமாகக் கூறுகிறார். நான் பட்ட சிரமங்கள் என்னோடு போகட்டும். என் குழந்தைகளும் அதைச் சந்திக்க வேண்டாம் என்கிறார். இவருடைய குழந்தைகளை ஆரம்பத்தில் இவருடைய தாய் கவனித்து வந்தார். தற்போது இவரே கவனித்து வருகிறார்.

நாடகத்தில் நடிப்பது சிலருக்கு உடலோடு கலந்த ஒன்று; நாடகம் எனக்குச் சுவாசம் என்கிறார். எனவே, வேறு வேலைகளில் இதைவிட அதிகப் பணம் கிடைக்குமானாலும், அதற்குப் போக மாட்டேன். நாடகத்தில்தான் தொடர்ந்து

நடிப்பேன் என்கிறார். இவருக்கு நாடகத்தில் ஏற்கும் பாத்திரங்கள் நிஜவாழ்க்கையில் பாதித்துள்ளதாகக் கூறுகிறார். இவர் ஆண் பாத்திரங்களையும் ஏற்கிறார். முருகன், மாரியம்மன் போன்ற பாத்திரங்களை ஏற்கும்போது அன்று விரதம் இருக்கின்றார். இவர் முருக பக்தராக இருக்கின்றார். முருகக் கடவுள்மேல் அதிக நம்பிக்கை கொண்டவராக இருக்கின்றார்.

நாடகத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் அனைத்தையும், ஆரம்ப காலங்களில் தனது தாயிடம் கொடுத்து விடுவார். தற்போது தன்னுடைய விருப்பத்திற்குச் செலவு செய்கின்றார். நாடகத்திற்காக வெளியூர் போகும்போது குழுவினரோடு செல்வோம்; ஆகையால் எந்தப் பிரச்சனையும் இல்லை. நாடகம் நிகழ்த்தும் இடத்தில் ஒரு சில இடங்களில் சிக்கல் ஏற்படும். ஒப்பனை செய்யும்போது இடையூறாக இருக்கும். இது அரங்கு தொடர்பாக ஏற்படுவதாகும் என்கிறார்.

இவர் நாடகத்தின் மூலமாகப் போதுமான பணம் சம்பாதிப்பதால், குடும்பச் செலவுகளுக்குப் போதுமானதாக உள்ளது. எனவே நாங்கள் எந்த ஆணையும் சார்ந்திருக்கத் தேவை இல்லை. ஆண்களைவிட அதிகம் சம்பாதிக்கின்றோம். என் கணவர் என் குழந்தைகளுக்குத் தந்தையாக இருந்து திருமணம் செய்து வைத்தால் போதும்; வேறு எதையும் என் கணவரிடம் எதிர்பார்க்கவில்லை என்கிறார்.

நாடகப் பின்புலம் :

இவருடைய முன்னோர்களும் நாடகத்தில் இருந்தமையால், இவர் நாடகத்தில் பங்கு பெறுவது இயற்கையாக அமைந்து விட்டது என்கிறார். இவரை நாடகத்தில் அறிமுகப்படுத்தியவர் இவருடைய தந்தையார். இரண்டு அத்தை, தம்பி அனைவரும் நாடக நடிகர்கள். 11 வயதிலிருந்து நாடகத்தில் நடித்து வருகிறார். இசை நாடகத்தில் பயிற்சி பெற்றுத் தொடர்ந்து இவ்வடிவத்திலேயே நடித்து வருகிறார்.

ஆண் நடிகர்களோடு நடிக்கும்போது பல சிக்கல் உண்டாகும். அவை கருத்துத் தொடர்பாகவும் நடிப்புத் தொடர்பாகவும் ஏற்படலாம். இரு தலைமைப் பாத்திரங்களை ஆண் நடிகரும் பெண் நடிகரும் ஏற்று நடிக்கும்போது, கதைத் தொடர்பான தர்க்கங்கள் இரு பாத்திரங்களுக்கு இடையே நடைபெறும். இதில் எந்த நடிகர் அதிகச் செய்திகளை அறிந்துள்ளாரோ அவரோ தர்க்கத்தில் வெல்ல முடியும். இந்நடிகர் புராணக் கதைகளைப் படிப்பவராதலால் தர்க்கங்களில் வென்று விடுவார். இவருடன் நடிக்கும் ஆண் நடிகர் இந்நிலையைப் பொறுக்க முடியாமல், இவரை வேறு வழியில் சிக்கல் ஏற்படுத்திப் பழி தீர்த்துக் கொள்வாராம்.

இது போன்று தர்க்கத்தில் உடன் நடிக்கும் ஓர் ஆண் நடிகர், இவர் புடைவை முந்தானையைப் பிடித்து இழுத்திருக்கிறார். இவர் விடச்சொல்லியும் விடாமல் பிடித்து இழுத்திருக்கிறார். மறுநிமிடமே கன்னத்தில் ஓங்கி அடித்திருக்கிறார். மேடையிலேயே பிரச்சனை உண்டாகி இருக்கிறது. இது போன்று ஆண் நடிகர் மூலமாக ஏற்படும் சிக்கல்களை மேடையிலேயே தீர்த்துக் கொள்வோம் என்கிறார். இவர் ஆண் பாத்திரங்களையும் ஏற்கின்றார். ஆண் பாத்திரங்கள் ஏற்பதற்கு காரணம், இவர் பெண் பாத்திரங்களை ஏற்கும்போது பெரும்பாலும் தர்க்கங்களில் வென்று விடுவாராம். இதனால் உடன் நடிக்கும் ஆண் நடிகர்கள் கோபமுற்று இவரை வேறு வழியில் பழி தீர்க்க எண்ணி, இவர்மீது பல புகார்களைக் கூறி இவர் பெண் பாத்திரம் ஏற்கக் கூடாது என்று சங்கத்தில் உத்தரவிடக் கூறியுள்ளனர். சங்கமும் இவரைப் பெண் பாத்திரம் ஏற்கக் கூடாது என்று உத்தரவு இட்டுள்ளது. இவரைச் சங்கத்திலிருந்து நீக்கிவிட இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இவர் இரண்டு மாதத்திற்குள் ஆண் பாத்திரத்தின் பாடல்களையும் தர்க்கங்களையும் பயிற்சி எடுத்து, ஆண் பாத்திரம் ஏற்பதற்குத் தயாராகிச் சங்கத்திடம் ஆண் பாத்திரம் ஏற்கிறேன் என்ற கூறி இருக்கிறார். சங்கத்தினரும் வேறு வழி இல்லாமல் ஆண் பாத்திரம் ஏற்க வாய்ப்புக் கொடுத்திருக்கின்றனர். ஆண் பாத்திரத்தைச் சிறப்பாகச் செய்யவே, தொடர்ந்து இவருக்கு ஆண் பாத்திரமும் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்நடிகர் புதுக்கோட்டைப் பகுதிகளில் ஆண் பாத்திரம் ஏற்பதற்குப் புகழ் பெற்றவர்.

ஆண் பாத்திரங்களைப் பெண் நடிகர்கள் ஏற்பது எளிமையானது இல்லை. மிகவும் கடினமானது. எந்த நேரத்திலும் பார்வையாளருக்குப் பெண் நடிகர் என்ற நினைப்பு வரக்கூடாது என்கிறார். குரல், உடல் அசைவுகள் இவைகளை ஆண்களைப் போலவே கொடுப்பதற்குக் கவனமும் திறமையும் தேவை. குரலை அடி வயிற்றில் இருந்து எடுக்க வேண்டும். இவ்வாறு இரவு முழுவதும் செய்யும்போது நடிகருக்குக் களைப்பாகிவிடும் என்கிறார். உடன் நடிக்கும் பெண் பாத்திரமேற்கும் பெண் நடிகரையும் மனத்தில் கொண்டு நடிக்க வேண்டும். மேடையில் பெண் நடிகரே இன்னொரு பெண் நடிகரை அவமானப்படுத்துவதும் நடக்கலாம்.

இரண்டு பெண் நடிகர், ஒருவர் ராஜபார்ட்டாகவும் மற்றொருவர் ஸ்திரீயாகவும் நடிக்கும்போது, ஸ்திரீயாக ஏற்பவர் தர்க்கம் செய்யும்போது ராஜபார்ட் நடிகரைப் பார்த்து, நீங்கள் பெண்ணைப் போலவே இருக்கின்றீர்களே என்று பார்வையாளருக்கு ஞாபகப்படுத்துவாராம். உடனே இவர், நானாவது பெண்ணாகவாவது தெரிகிறேன்; நீ பெண்ணாகவும் இல்லாமல் ஆணாகவும் இல்லாமல் அலி போன்று

இருக்கின்றீர்கள் என்ற எதிர்வாதம் செய்து மடக்க வேண்டி வரும் என்கிறார். இவர் முருகன், கிருஷ்ணன், அரிச்சந்திரன் போன்ற பாத்திரங்களை ஏற்றுச் சிறப்பாக நடித்துப் பெயர் பெற்றுள்ளார். மற்ற நடிகர்களே இவரைப் பற்றிப் பெருமையாகப் பேசிக் கொள்கிறார்கள். முதிர்ந்த பெண் நடிகர்களுக்கு மேடையில் ஆண்களால் ஏற்படும் சிக்கல்கள் குறைவு. ஆனால் தர்க்கத்தின் போதுதான் தெரியாத கருத்தைச் சொல்லித் தர்க்கம் செய்யும்போது அதைச் சமாளித்து எதிர்வாதம் செய்வது கடினம். இது போன்ற சிக்கல்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதவையாகின்றது என்கிறார்.

நிகழ்த்துதலின்போது பார்வையாளர் செய்யும் இடையூறுகளைச் சமாளித்து நடிக்க வேண்டி உள்ளது. ஒருசிலர் கை அசைப்பர், விசில் அடிப்பர், எதற்கு எடுத்தாலும் சிரிப்பர். இவை எல்லாம் சாதாரணமாக ஆகிவிட்டது என்கிறார்.

பெண் பாத்திரங்களை ஏற்கும்போது, பாத்திரத் தன்மைகளை உள்வாங்கும் போதுதான் சிறப்பாக நடிக்க முடியும் என்கிறார். காளி, மாரியம்மன் பாத்திரங்களை ஏற்று நடிக்கும் அன்று விரதம் (எச்சில் பாத்திரங்களைப் பயன்படுத்தாமல் இருப்பது, புலால் உணவு உண்ணாது இருத்தல்) இருக்கின்றார். இப்படி இருக்கும்போதுதான் பாத்திரமாக மாற முடிகிறது என்கிறார். நாடகக்காரி என்று கேவலமாகக் கூறும் மக்களே நான் மாரியம்மன் பாத்திரம் ஏற்கும்போது எனக்குச் சூடம் ஏற்றி வணங்குகிறார்கள். இதுதான் நாடகக்காரர்களின் மேடை வாழ்க்கை என்கிறார்.

பெண்கள் கவர்ச்சிக்காக நாடகத்தில் பங்கு பெறச் செய்கிறார்கள் என்பதை மறுக்கிறார். தற்போது நடனம் ஆடும் பாத்திரத்தை ஏற்பவர்கள்தான் இந்நிலையில் இருப்பவர்கள். இவர்கள் கவர்ச்சிக்காகவே குழுவில் இருக்கின்றார்கள். இவர்கள் எரி நட்சத்திரம் போன்றவர்கள். இளமை இருக்கும் வரையில் தான் நடிப்பார்கள். இளமை போய்விட்டால் நடிப்பதற்குத் தகுதி இல்லாதவர்களாகி விடுவார்கள். ஆனால் இளமையையும் தாண்டி நடிகராக இருப்பதுதான் திறமை. ஆகையால் திறமை இருந்தால் கவர்ச்சி, இளமை எல்லாம் தேவை இல்லை என்கிறார்.

இவருக்குப் பிறகு இவரைச் சார்ந்தவர்கள் எவரும் நாடகத்தில் நடிக்கக் கூடாது என்கிறார். நாடகத்தால் தனிப்பட்ட முறையில் சிரமமும் மனச்சோர்வும்தான் ஏற்பட்டுள்ளது என்று வருத்தத்துடன் கூறுகிறார்.

● ● ●

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113.

புதிய வெளியீடுகள்

		ரூ. பை.
1.	பண்டைத் தமிழ் எழுத்துக்கள்	... 32.00
2.	மதங்கசூளாமணி	... 40.00
3.	தமிழக மகளிர் (தொடக்க கால முதல் ஆறாம் நூற்றாண்டு வரை)	... 50.00
4.	Tamil Culture and Civilization	... 60.00
5.	Landscape and Poetry	... 50.00
6.	Kuruntokai	... 110.00
7.	Kurincippattu - Muttollayiram	... 40.00
8.	Six Long Poems from Sangam Tamil	... 30.00
9.	Tamil Heroic Poems	... 40.00
10.	Nala Venba	... 45.00
11.	காதம்பரி மூலமும் வசனமும்	... 125.00
12.	Cilappatikaram	... 100.00
13.	Tani Pasura Chogai	... 30.00
14.	Tolkappiyam and Astadhyayi	... 110.00
15.	இலக்கியத்தில் சோதிடம்	... 65.00
16.	தமிழில் நவீன நாடகம்	... 70.00
17.	காத்தவராய நாடகம்	... 30.00
18.	சடத்தலம்	... 40.00
19.	தடிவீரன் சாமி கதை வன்னியராயன் கதை	... 55.00
20.	சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்	... 80.00
21.	தொல்காப்பியம் - பொருள் - புறத்திணையியல் பகுதி - 1	... 50.00
22.	தொல்காப்பியம் - பொருள் - புறத்திணையியல் பகுதி - 2	... 65.00
23.	சோதிடவியல்	... 70.00
24.	மூலிகைக் கற்பங்கள்	... 80.00
25.	அமிர்த மதன கூத்து நாடகம்	... 90.00
26.	சித்த மருத்துவ மணிகள்	... 75.00
27.	கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவணை (முதல் தொகுதி)	... 85.00